மாணிக்கவாசகரும் நம்மாழ்வாரும்



ஸ்டார் பிரசுரம்

ASCC No 32128
27-2



27-2

மாணிக்கவாசகரும் நம்மாழ்வாரும்

KOVILOOR ANDAVAR
A. No. 32128
LIBRARY, KOVILOOR

பி. ஸ்ரீ.

...னைக் கவிஞர் சித. சிதம்பரத்...
தொலை நோக்குப் பார்வையில் ...
பாரோர் படித்துப் பயனுற வழங்குவோர்
... இல்லம் முத்துப்பட்டணம், காரை...

ஸ்டார் பிரசுரம்
72, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி : : சென்னை-600 005.
போன் : 844740

முதற்பதிப்பு : பிப்ரவரி, 1978
மூன்றாம் பதிப்பு : அக்டோபர், 1987

விலை ரூ. 7-00

STAR PUBLICATIONS
72, Big Street,
Triplicane, Madars-5.

அச்சிட்டோர் :

வெற்றி அச்சகம்
91. டாக்டர் பெசன்ட் ரோடு
இராயப்பேட்டை, சென்னை-600 014

பதிப்புரை

தமிழ்ப் பேரறிஞர் திரு. பி. ஸ்ரீ. அவர்கள் எழுதிய பாரதியும் தாகூரும், இராமகிருஷ்ணரும்' இராம லிங்கரும், காந்தியும் விநோபாவும், வள்ளுவரும் சாக்ரடீசும், ஆண்டாளும் மீராவும், கபீர்தாசரும் தாயுமானவரும், நந்தனாரும் திருப்பாணாழ்வாரும் போன்ற அருமையான ஒப்புநோக்கு நூல்களைத் தொடர்ந்து இந்நூலையும் வெளியிடுவதில் மிகவும் பெருமை அடைகின்றோம்.

திரு. பி. ஸ்ரீ. அவர்கள் சுமார் நாற்பதாண்டுகளுக்கு மேலாகத் தமிழோடு தம்மை ஈடுபடுத்தி, சிறந்த தொண்டினைத் தமிழ்த் தாய்க்குச் செய்து வருகிறார். இவர் எழுதிய நூல்கள் கணக்கில் அடங்கா. இவரை அறியாதவர் தமிழ் கூறும் நல்லுலகில் எவரும் இரார்.

இவரது நூல்கள் எளிமையும், இனிமையும் கலந்து கற்போரது நெஞ்சைக் கவரும் தன்மையன என்பதோடு அறிவுப் பசிக்கும் பெரு விருந்தாக அமையும்.

மணிவாசகரும், நம்மாழ்வாரும் என்ற இந்நூலில் இவ்விரு ஞானச் செல்வர்களை மிக அழகிய முறையில் ஒப்பு நோக்கி எழுதியுள்ளார்.

ஏற்கனவே வெளி வந்த மேற்கண்ட நூல்களை வாங்கிப் பயன்பெற்ற அன்பர்கள், இந்நூலிற்கும் நல் வரவேற்பு அளிப்பர் என நம்புகிறோம். இதைத் தொடர்ந்து இவரது மேலும் பல ஒப்பு நோக்கு நூல்களை வெளியிட உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்டார் பிரசுரம்

பொருளடக்கம்

1. ஞானச் செல்வரும் கவிச் செல்வரும்

திருமா மகனின் அருள் பெற்றவருக்குச் சேராதனவும் உண்டோ?இப்படி ஒரு வினாவை எழுப்பிக்கொண்டு திருமாமகளோடு கூடிய மகா விஷ்ணுவுக்கு வந்த யோகங்களை அடுக்கிக் கொண்டு போகிறார் ஒரு புலவர்.

சில அரசர்களின் பெயர்களும் பட்டங்களும் பத்திரிகைகளில் எவ்வளவு இடத்தை அடைத்து விட்டன என்பதை இன்றைய ஜனநாயக யுகத்தில் உள்ள இளைஞர்கள் சாதாரணமாக அறிந்து கொள்ள முடியாது. திருமகள் கடைக் கண்ணால் பார்த்த பார்வைக்குத்தான் அவ்வளவு மதிப்பு. எனவே, லட்சுமி—நாராயண மூர்த்தியான பெருமாளுக்குக் கிடைத்திருக்கும் பட்டப் பெயர்கள் ஆயிரம் என்றால் வியப்பில்லை.

அழகனுக்கு ஆயிரம் பெயர். இதில் ஆயிரத்திற்கு ஆயிரம்தான் என்ற பொருளும் இல்லை: 'அனந்தம்' 'கணிதக் கணக்கிற்கு எட்டாதது' என்று பொருள். பட்டங்களை ஒருவன் தானே சூட்டிக் கொண்டால் அதில் மதிப்பு ஏது? கெஜட்டில் வந்தால் தானே பெருமை. திருமாலின் அழகான பட்டப் பெயர்கள் வேதம் என்ற மிகப் பழைய சாசனத்தில் வெளிவந்து விட்டனவாம்.

சக்திக்கு அறிகுறியான பொன்முடிகள், அரசர்களைச் சாதாரண மக்களிடமிருந்து பிரித்து வைத்தன. அதீத மனிதர்களாக (Super-men) உயர்த்திக் காட்டின. விஜய லட்சுமியின் விழிக்கோணத்திலிருந்தே அழகும் சக்தி

யும் வெளிப்பட்டு, அரசர்களையும் அரசர்க்கு அரசர் களையும் சர்வாதிகாரிகளையும் பொன்முடிகளாலும் ஆடம்பர அதிகார வைபவங்களாலும் அலங்கரிக்கின்றன. அப்படியானால் அந்த வெற்றித் திருமகளை மார்பிலே வைத்துக் கொண்டு தன் நீல மேனியைப் பொன் மேனி யாக ஜொலிக்கச் செய்து கொண்டிருக்கும் பெருமாளின் சர்வசக்தியைச் சொல்லவா வேண்டும்?

அந்த மகாசக்திக்கு அறிகுறியாக ஆயிரம் மணிமா மகுடங்கள் அணி செய்கின்றனவாம். புருஷோத்தமனின் ஆயிரம் திருமுகங்களையும்'—

முடிச்சோதியாய் உனது
முகச்சோதி மலர்ந்ததுவோ!

என்று பக்தர்கள் வியக்கும்படி.

பொன்முடிகளை அலங்கரித்துப் பரிமளிக்கச் செய் கின்றன, குளிர்ந்த நறுமணம் கமழும் பசிசைப் பசுந் துழாய் முடிமாலைகள். பொன்முடிகளைக் காட்டிலும் அந்தப் பச்சிலை மீது அவனுக்குத்தான் எவ்வளவு மோகம்! இவையெல்லாம் திருவின் இன்னருளால் கிடைத்த பேறுகளே.

அதே திருமகளின் சேர்க்கையால் இவை எல்லா வற்றுக்கும் மேலாகப் பாக்கிய சிகரமாகக் கிடைத்திருப் பதையும் குறிப்பிடுகிறார் புலவர். அதுதான் நம்மாழ் வார் கவிதை என்ற ஆரா அமுதம். ஒன்றா இரண்டா?— அதுவும் ஆயிரம் ஆயிரம் பெயர், ஆயிரம் கிரீடம், ஆயிரம் முடிமாலை இவைகளைக் காட்டிலும் பரம ரசிக னான பரமன் உகப்பது நம்மாழ்வாரின் திருவாய்மொழி ஆயிரம்.

பட்டம் பதவிகளைக் காட்டிலும், பொன்முடிகளைக் காட்டிலும் ஒரு பச்சிலை, அதற்கு மேல்பாட்டு — என்ற பண்பாட்டைப் பாருங்கள்!

இனி நாம் புலவர் வாக்கின் முழு உருவத்தையும் பார்க்கலாமே;

சேரா தனஉள வோதிருச்
சேர்ந்தார்க்கு? வேதம் செப்பும்
பேரா யிரம்பொன் முடிஆ
யிரம்நறை பெய்த்துளவத்
தாரா யிரம்நம் திருக்குரு
கூர்ச்சட கோபன்சொன்ன
ஆரா அமுதக் கவிஆ
யிரம்அவ் அரியினுக்கே.

ஸ்ரீ வைஷ்ணவர்கள் குருகூர்ச் சடகோபன் என்ற நம்மாழ்வாரின் பிரபந்தத்தை எவ்வளவு உயர்ந்த செல்வமாக மதிக்கிறார்கள்! வாய்மொழி என்றால் வேதம். இப்பொருளில் **பரிபாடல்** 'வாய்மொழிமுதல்வன்' என்று திருமாலைக் குறிக்கிறது. வைஷ்ணவர்களுக்குத் திருவாய்மொழி ஆயிரமும் தமிழ்வேதம், சாமவேதசாரம். இதை 'யாழின் இசைவேதம்' என்பர்.

சிந்தனைகள் கலையாகின்றன

நஞ்சீயர் என்ற ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரியர் திருவாய் மொழிப் பாசுரங்களை இசையோடு உருக்கமாய்ப் பாடுவார் என்றும், அவருடைய குருவான பட்டர் தம்மை மறந்து அமுதமாய்ப் பருகிக் கொண்டேயிருப்பார் என்றும் அறிகிறோம். கோயில்களில் பிரபந்தம் பாடும் தொண்டாற்றும் அரையர்களில் ஒருவரான திருநறையூர் அரையர். இசையோடும் நடிப்புத் திறமையோடும் இப் பாசுரங்களைப் பாடும்போது நஞ்சீயர் இவற்றைச் சிறப்பாக அனுபவித்துக் கேட்டுக் கொண்டிருப்பாராம்.

திருவாய்மொழியை ஸ்ரீ வைஷ்ணவ இதய கானமாகிய இசைச் செல்வம் எனலாம். வடமொழி, வேதங்கள், வேதாந்தமான உபநிடதங்கள் முதலிய வற்றில் நிபுணர்கள் ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரியர்கள்.

அவர்கள் மனித இதயத்தை உருக்கும் இத்தகைய பாசு ரங்களைச் சான்றாகக் கொண்டுதான் நிச்சயபுத்தியும் அனுபவ ஞானமும் பெற்றுத் தெளிவடைந்தார்கள் என்கிறார் ஸ்ரீ வேதாந்த தேசிகர்.

"துகில்வண்ணத் தூ நீர்ச்சேர்ப்பன்' என்று நம்மாழ்வார் தம்மைத் தாமே சொல்லிக் கொள்ளு கிறார். நல்ல ஆடை போன்ற தூய்மையான தண்ணீரை உடைய தாமிர பருணி ஆற்றின் தலைவன் என்பது இச் சொற்றொடரின் பொருள். அக்கால நெசவுத் தொழிலின் சிறப்புக்கும் இச் சொற்றொடர் ஒரு சான்று. அவ்வாறே தெளிந்து தூய்மையாக இருக் கின்றனவாம் இந்த ஆழ்வாருடைய உள்ளமும் இதிலி ருந்து மலரும் வாக்கும். இந்த வாக்கினை, வாய்மொழி யைப் பெறுவதற்கு.

பண்ணும் தமிழும்
தவஞ்செய்தன!

என்பர். இதைத் திருமாலும் 'மகுடம் சாய்த்துக் கேட்டான் என்பர்.

நம்மாழ்வார், பக்தியில் உள்ள பரமன் பண்ணிலும் கவியிலும் குடிகொண்டிருக்கிறான் என்கிறார். அவனே தமக்குள்ளிருந்து பாடினான் என்றும் கூறுகிறார். வண்டுகள் தேனுண்டு பிரீதிக்குப் போக்குவிட்டு முரன்றது இசையாய் விழுந்தாற்போலே, இவரும் பகவத் அனுபவத்தால் பிறந்த மகிழ்ச்சிக்குப் போக்கு விட்டது கவி ஆயிற்று — என்பது வியாக்கியானம்.

வேதாந்த சிந்தனைகள் இவர் வாக்கிலே கலையாகிக் கவிதையாகின்றன என்கிறார் திவ்ய கவி அழகிய மணவாளதாசர் என்ற பிள்ளைப் பெருமாளையங்கார். பனிமூடிய இமாலய சிகரங்களில் சஞ்சரிப்பது போலிருக் கிறதாம். உள்ளம் வேதசிகரமாகிய உபநிடதக் கருத்துக்

களிடையே சஞ்சரிக்கும்போது; அறிவின் மூச்சு திணறிப் போகிறது! ஆனால் ஆழ்வாரின் செந்தமிழைத் தொட்டதும் அவை பலரும் அனுபவிக்கத் தக்க வசீகரமான கலையாகப் பரிணமிக்கின்றனவாம்.

அருமறை துணிந்த
    பொருள்முடிவை இன்சொல்
அமுதொழுகு கின்ற
    தமிழினில் விளம்பி
அருளிய சடகோபன்

என்று நம்மாழ்வாரை திவ்யகவி அறிமுகப்படுத்துவது கூர்ந்து நோக்கத்தக்கது.

ஆழ்வாரின் கவித்திறன்

நம்மாழ்வாரிடம் கவித்வசக்தி உண்டென்பதற்கு இவர் பாடிய திருவிருத்தத்தில் வரும் சில பாடல்களும் திருவாய் மொழியில் பல பாடல்களும் சான்றாகும்.

கோலமே! தாமரைக்
    கண்ணதோர் அஞ்சன
நீலமே! நின்று எனது
    ஆவியை ஈர்க்கின்ற
    சீலமே!

என்ற வாக்கிலிருந்து இவர் ஒரு நல்ல பக்தகவி என்று தெரிந்து கொள்ளலாம்.

இவர் தம் இஷ்ட தெய்வத்தை அழகுத் தெய்வமாகக் காண்கிறார். லட்சுமி என்ற அழகை நெஞ்சிலே வைத்துக் கொண்ட மெய்ப்பொருள் அல்லவா திருமால்? இதனால் உண்மை அழகு உண்மையின் இதயமாக மதிக்கப்படுகிறது உண்மைக் கவிகளால், என்று ஊகிக்கலாம். அழகுத் தெய்வத்தின் அருமந்த உபாசகர், தத்துவத்தின் முடிவுகண்ட சதுமறைப் புரோகிதன் என்ற நம்மாழ்வார்.

இவரது அழகுத் தெய்வம் இவருக்கு எப்படிக் காட்சி அளிக்கிறது பாருங்கள்;

முடிச்சோதி யாய் உனது
 முகச்சோதி மலர்ந்ததுவோ ?
அடிச்சோதி நீநின்ற
 தாமரையாய் அலர்ந்ததுவோ ?

[அலர்ந்ததுவோ — பரந்து மலர்ந்ததுவோ]

இது உத்தமக் கவிஞருக்குரிய உண்மை வாக்கு என்பதில் சந்தேகமும் இருக்க முடியுமா?

ஞான தபோதனர்

எனினும் நம்மாழ்வாரைக் கவிப்பெருஞ் செல்வர் என்று சொல்வதைக் காட்டிலும் ஞானதபோதனர் என்று கூறுவதே பொருந்தும். கவித்திறனையும் வென்று விடுகிறது இவரது சிந்தனையழகு; கலையழகையும் வென்று விடுகிறது கொள்கைகளின் அழகு. வேத வேதாந்த சாரத்தை நன்குணர்ந்து பேசக்கூடிய ஞான தேசிகர் என்றும் திர்க்கதரிசியான பக்த மணி என்றும் இவரைக் குறிப்பிடுவதே இவருக்குப் பெருமை.

திருவாய்மொழியின் முதலாவது பாசுரத்தின் அடியே சங்கரரின் அத்வைதத்தைக் கண்டித்து ஸ்ரீபாஷ்யம் செய்யும்படி இராமானுஜரைத் தூண்டியதாம். இந்த அடியில் 'உயர்வற உயர்நலம் உடையவன்' என்று இறைவன் குறிக்கப்படுகிறான். இவற்றுக்கு மேல் உயர்வு இல்லை என்று சொல்லும்படி உயர்ந்திருக்கின்றனவாம் இறைவனுடைய கலியாண குணங்கள் (உயர் நலன்) எல்லாம். பரமன் அழகிய குணங்கள் எல்லாவற்றையும் உடையவன் என்பது ஆழ்வார் கொள்கை.

இக்கொள்கையைப் பின்பற்றித்தான் வைணவ ஆசாரியர்கள் 'பிரம்மம் குணமில்லாதது' என்று சொல்லும் அத்வைதத்தைக் கண்டிக்கிறார்கள்.

உடல்மிசை உயிர்எனக்
கரந் (து) எங்கும் பரந்துளன்

[கரந்து—மறைந்து]

என்ற வாக்கை இராமானுஜர் தம் கொள்கைகளுக்கெல்லாம் அடிப்படையாகக் கொள்கிறார் என்பர்.

உடலில் உள்ள உயிர்போல் பரமாத்மா உலகமெல்லாம் பரந்து வியாபித்திருக்கிறது என்கிறார் நம்மாழ்வார். கடவுளாகிய உயிர் இயற்கையாகிய உடம்பு மூலமாக உயிர்களுக்கெல்லாம் உயிராகி நலம் செய்கிறது என்று இந்த வாக்கிற்கு விளக்கம் கூறுகிறார்கள். புலனாகும் உடம்பைக் கொண்டே புலனாகாத உயிருண்மையை உணர்வது போல், உடலாகிய இயற்கையைக் கொண்டு உயிராகிய கடவுளுண்மை உணரப்படும்.

உடம்பு உயிருக்கு அடிமை என்ற நிலைமையில்தான் உடம்பை வளர்க்க வேண்டும், உயிரைப் பாதுகாக்க வேண்டும். அப்படியே ஆத்மாவுக்கு பரமாத்மாவாகிய இறைவனோடு உள்ள இயற்கையுறவு 'தாசன்' அல்லது அடியவன் என்ற உறவுதான். இதனால், கைங்கர்யமே புருஷார்த்தம் என்பது ஊகிக்கப்படும்.

ஆண்டான் — அடிமை என்பது பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள உறவு. அடிமையாக உழைப்பது துக்கமன்றோ? இக்கேள்விக்கு விடையாக, உகந்த விஷயத்திற்கு அடிமை செய்வது சுகம்தானே என்று வைஷ்ணவ ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இதன் பொருள் என்ன? வாழ்க்கை அன்பு மயமாகிவிட்டால் இன்பமயமாகிவிடுகிறது அடிமைபோல் கைங்கர்யம் புரிவதும்.

ஆழ்வார் வாக்கல்லவா! — இதில் இன்னும் ஆழமான பொருளைக் கண்டு காட்டலாம். "நான், எனது' என்ற அகப்பற்றையும் புறப்பற்றையும் விட்டு 'எல்லாம் அவன் அருள்' என்று நம்பி, ஆண்டவனையே சரணமாக அடைய| வேண்டும். உயிர், உயிர்க்குயிரான இறைவனுக்கு அடைக்கலப் பொருள். இவ்வுண்மையை உள்ளபடி உணர்ந்து கொண்டால், உள்ளத்துறவே உண்மைத் துறவு என்ற உண்மை புலனாகும்.

இறைவன் தாயிலும் அன்பன், அவன் தாயாகவும் தந்தையாகவுமிருக்கிறான். தாய்க்கு மன்னிக்கும் தன்மை அதிகம். எனவே அருள் வடிவமான திருமாமகளை முன்னிட்டு விஷ்ணுவைச் சரணமடைய வேண்டும் என்று ஸ்ரீவைஷ்ணவர்கள் சொல்லுகிறார்கள்.

இத்தகைய கொள்கைகளெல்லாம், சிறப்பாக நம்மாழ்வாரின் திருவாய்மொழியை ஆதாரமாகக் கொண்டு ஸ்ரீவைஷ்ணவத்தின் முதலாவது ஆசாரியரான நாதமுனிகள் காலந்தொட்டு இராமானுஜர் காலம் வரை உருவாகி வந்திருக்கின்றன. திருவாய்மொழிக்கு இராமநுஜர் காலத்திலிருந்து விளக்க உரைகள் என்ற வியாக்கியானங்கள் நூல் வடிவில் எழுதப்பட்டு வந்தன.

ஆழ்வார் — ஆசாரியர்களுடைய உபதேச ரத்தினங்கள் எல்லாம் சாரமாகத் திருவாய்மொழியில் காணப்படுகின்றன என்பர். வியாக்கியானங்களோடு கூடிய திருவாய்மொழியைப் 'பகவத் விஷயம்' என்று சிறப்பித்துப் பேசுகிறார்கள். ஸ்ரீ வைஷ்ணவத்தின் பரமாசாரியர் நம்மாழ்வார் என்பர். இவரை ஸ்ரீ வைஷ்ணவம் என்ற ஞான பக்தி மதத்தின் பெற்ற தாயாகவும், இராமாநுஜரை வளர்ப்புத் தாயாகவும் கூறுவதுண்டு.

இவரது திவ்ய சொரூபத்தைப் பின்வரும் பக்தரி வாக்கு நமக்குப் படம் பிடித்துக் காட்டுவது போல் அமைந்திருக்கிறது.

தேன்அறாமகிழ்த் தொடையலும் மவுலியும்
திருக்கிளர் குழைக்காதும்,
கான்அறாமலர்த் திருமுகச் சோதியும்
கயிரவத் துவர்வாயும்,
மோன மாகிய வடிவமும் மார்பமும்,
முத்திரைத் திருக்கையும்,
ஞான தேசிகன் சரணதா மரையும், என்
நயனம்விட் டகலாவே!

[அறா—அறாத; இடையறாது காணப்படும் **தொடையலும்** மாலையும். **மவுலியும்**—கிரீடமும். **திருக்கிளர்**—அழகு விளங்கும் **குழைக்காதும்**—குழை என்ற குண்டலம் அணிந்துள்ள காதுகளும், **கான் அறாமலர்**—வாசனை அற்றுப் போகாமல் வீசும் மலர் (போன்ற) **கயிரவம்**—**ஆம்பல். துவர்**—சிவப்பு. **சரணதாமரை**—அடிகளாகிய தாமரை. **நயனம்**—கண்.]

நம்மாழ்வாருக்குப் பிரியமான பூ மகிழம்பூ. மகிழம்பூ மாலையணிந்த இவரை மகிழ்மாறன் என்கிறார்கள். இவருடைய கொண்டை, இவருக்குக் கிரீடம்போல் அமைந்திருக்கிறதாம். கொண்டையும் குழையணிந்த காதும் முகத்தின் ஜோதியைச் சிறப்பாய்க் காட்டுகின்றனவாம். அதிலே சிவந்த உதடுகள் அடியவர்களின் நலனை வினவவும், அருள்மொழிகள் கூறவும் துடித்துக் கொண்டிருக்கின்றனவாம். அடியார்கள் வாழத் திருவாய்மொழி சொன்ன உதடுகள் அல்லவா!

ஒருவிதமான ஆரவாரமோ, ஆவேசமோ, இல்லாமல் மோன வாக்கினாலேயே இவ்வுருவம் அன்பர்களை மங்களம் உண்டாகும்படி ஆசீர்வதிக்கிறது.

அந்த மார்பிலே (நெஞ்சிலே) கருணை; கடல்போல் பொங்குகிறது அலை அடங்கிய ஆழ்கடல் போலே.

ஞான சமுத்திரமே உருவெடுத்து வந்ததுபோல் இருக்கிறது இந்தத் தேசிக வடிவம்; ஞான முத்திரைக் கையும் தானுமாக.

"இத்திரு உரு எப்போதும் என் உள்ளத்திலிருக்கிறது' என்று கூடச் சொல்லவில்லை, இப்பாடல் பாடிய தொண்டர், என் கண்ணைவிட்டு அகலாதே என்கிறார். கண்ணன் என் கண்ணிலே இருக்கிறான் என்று கூறும் நம்மாழ்வாரைப் போலே.

நம்மாழ்வார் என்ற ஞான தபோதனர் ஸ்ரீவைஷ்ணவர்களின் இதயத்தில் குடிகொண்டிருக்கும் கோலமும் சீலமும் இது.

உலகறிந்த பக்த மகாகவி

மாணிக்கவாசகர் நிகரற்ற கவியுள்ளம் படைத்த ஓர் அன்புத் துறவி. நம்மாழ்வாரைக் காட்டிலும் உலகப் புகழ் பெற்றிருக்கிறார் இந்தச் சிவநேசர். 'அன்னிய மதத்தினர்கள் கூட நமது ஆசாரிய மூர்த்தியின் (மாணிக்க வாசகரின்) சரிதத்தையும் அவர் அருந்திருவாக்கையும் அறிந்து பழகிப் பயன்பெற விரும்புகிறார்கள்' என்று சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் கூறியிருப்பது உண்மைதான்.

இவர் செய்தருளிய நூல்கள் திருவாசகமும் திருக்கோவையாரும். இவற்றில் திருவாசகம் டாக்டர் ஜி.யு. போப் என்பவரால் ஆங்கில ஆக்கமும் விளக்கமும் பெற்றிருக்கிறது. இது **ஆக்ஸ்போர்டு** நகரிலுள்ள பல்கலைக்கழக அச்சுக்கூடத்தில் கி. பி. 1900-ல் பதிப்பிக்கப்பட்டது. அறுபது ஆண்டுகளுக்குப்பின் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை வெளியீட்டாரால் முதலாவது மறு பதிப்பாகவும் 1970-ல் இரண்டாம் மறுபதிப்பாகவும் வெளி வந்திருக்கிறது. திருவாசகத்தை அறியாத தமிழனும் சைவனும் இல்லை;

உலகப் பேரறிவாளனும் இல்லை என்றே சொல்லி விடலாம்.

தென்னகத்தின் முக்கியமான சமயம் சைவம். அடுத்த படியாக ஸ்ரீ வைஷ்ணவம், தமிழ் மக்களுடைய சிந்தனை களையும் உணர்ச்சிகளையும் உருவாக்கியிருக்கிறது. இலங்கையின் வடக்குப் பகுதியிலும் சைவம் பரவியிருக் கிறது. சைவ சமயத்தின் சிறந்த அம்சங்களான தத்துவக் கொள்கைகளைச் சைவ சித்தாந்தத்தில் காணலாம். திருவாசகத்திலுள்ள ஐம்பத்தொரு கவிதைகளும் சைவ சமயத்தின் சாரத்தை வடித்துத் தருகின்றன.

சென்ற பல நூற்றாண்டுகளாகப் பக்தி உள்ள சைவ நன்மக்களின் உள்ளங்கள், திருவாசகத்தை ஓதி ஓதிப் பண்பட்டிருக்கின்றன. 'மனம் கரைத்து மலம் கெடுக்கும் வாசகம்' என்று மனோன்மணீய ஆசிரியர் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

தொல்லை இரும்பிறவி சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

என்ற வெண்பாவில், திருவாசகத்தின் பொருளையும் பயனையும் பற்றிச் சைவ சமயச் சான்றோர் கருதி யிருப்பது சுருங்கக் கூறி விளக்கப் பெற்றிருக்கிறது.

திருவாதவூரடிகள் என்னும் மாணிக்கவாசக சுவாமி கள் அருளிய திருவாசகம் என்னும் சைவ உயிர்நூல், பிறவித் தளை நீக்கித் துன்பத்திற்குக் காரணமாகிய அறியாமையைப் போக்கி அறிவுடைமையைத் தந்து, இதயத்திற்கு ஆனந்தமும் ஆறுதலும் தருகிற மருந்தும் உணவுமாகும். இது மேலே சொன்ன வெண்பாவின் பொருள். தேன் உணவாகவும் மருந்தாகவும் ஒருங்கே பயன் தருவது என்பதை அனைவரும் அறிவர்.

அன்பு நெறியால் இயன்றது திருவாசகம். இது வெளிப்படை. இந்த நெறியில் இறைவனிடம் ஈடுபட்டு ஒழுகும் ஒழுக்க நெறி ஆண்டான்-அடிமை என்ற தொடர்போடும் பொருந்தும்; காதலன்—காதலி என்ற தொடர்புடனும் இசைந்து நிற்கும்; பெற்றோர்—மக்கள் என்ற முறையிலும் அமைந்திருக்கும். இவற்றுள் காதலர் முறை மிக்கச் சிறப்புடையது. இந்நெறியை மணிவாசக அடிகள் விரும்பி மேற் கொண்டிருக்கிறார் இத்திரு வாசகத்திலே.

'திருவாசகமும் திருக்கோவையாரும் ஒரு திருநூலின் இரு பேருறுப்புகளாம்' என்று பண்டிதமணி க. சு. நவநீத கிருஷ்ண பாரதியார் கூறியுள்ளார். இந்த நூல்களில் மாணிக்க வாசகர், பக்தி கனிந்த காதலைப் புலப்படுத்தியிருக்கிறார். இவற்றுள் திருவாசகப் பாடல்கள் பக்தி அனுபவ நிறைவில் பொங்கித் ததும்பிய கவியமுதம்.

இராமலிங்க அடிகள் திருவாசகத்தை ஓதி ஓதி உணர்ந்து உணர்ந்து பெறும்பேறு பெற்றவர். இதைப் பொதுவாக இராமலிங்கரது அனுபவத் திருவாக்காகிய பாடல்களிலிருந்தும் அறிந்துகொள்ளலாம். இவர் வெளிப்படையாக மாணிக்கவாசகரைப் புகழ்ந்திருக்கும் ஒரு செய்யுள் வருமாறு :

வான்கலந்த மாணிக்க
வாசக! நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து
செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே.

இராமலிங்கரும் ஒரு நல்ல கவிஞர்; இவர் கவியுள்ளம், திருவாசகப் பாடல்களில் தோய்ந்து பாடற் பொருளுடன் ஒருமை நிலையை அடைந்தது. அப்படிக் கலந்து அனுபவித்த திருவாசகச் சுவையை ஊன் கலந்து உயிர் கலந்து இனிக்கும் உத்தமக் கவிச்சுவையாக இராமலிங்க அடிகள் சுட்டிக் காட்டுகிறார். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்.' என்னும் பழமொழியின் கருத்தை உள்ளபடி உணர்ந்து கூறியுள்ளார் வள்ளலார் என்ற இராமலிங்கர்.

கவிதைப் பொக்கிஷம்

திருவாய்மொழியைத் தமிழ்வேதம் என்பர். திருவாசகத்தையும் அப்படிக் கூறுவது பொருந்தும் வாய்மொழிக்கும் வாசகத்திற்கும் பொருள் ஒன்றே. சிவப்பிரகாச அடிகள் திருவாசகத்தை மனங்கரைத்து உருக்கும் கவிதைப் பொக்கிஷமாகிய வேதம் என்கிறார்.

வாதவூர் அன்பர் மலர்வாய்ப் பிறந்த
திருவா சகம்இங்கு ஒருகால் ஓதில்,
கருங்கல் மனமும் கரைந்துஉகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே.

மாணிக்கவாசகரைக் குறித்து கடவுள் மாமுனிவர் உலகில் மாயப் பொங்கு இருள் அகல, எம்மை ஆளுடையான் அன்பர் இதய தாமரைகள் எல்லாம் செம்மையாய் மலர, ஞான தினகரர் (சூரியன்) உதயம் செய்தார்' என்று சிறப்பாகப் போற்றுகிறார். நம்மாழ்வாரைக் குறித்தும் மகிழம்பூ மாலையை அணிந்த ஞானசூரியன் உதயஞ் செய்ததாகப் பெரியோர் பாராட்டுவதுண்டு. மாணிக்கவாசகரின் கவித்திறன் அன்பர்களின் இதய

தாமரைகளைச் சிறப்பாக மலரச் செய்தது என்றால், நம்மாழ்வாரின் ஞான மாதவம் அன்பர்களின் உள்ளங்களை ஒளிமயமாகத் திகழச் செய்தது எனலாம்.

மாணிக்கவாசகர் என்ற பெயரே இவரது கவிச்சுவை நிரம்பிய அருள்வாக்கைப் புலப்படுத்துவதுதான் என்பர். மிக இனிமையோடும் கேட்போர் மனத்தை எல்லாம் உருக்கித் தன்வயம் ஆக்கவல்ல அருட்பிரகாசத்தோடும் மாணிக்கம் போன்று விளங்கிய' வாக்கின் தன்மையினாலே இவரது ஞானசாரிய மூர்த்தி' உனக்கு **மாணிக்கவாசகன்** என்று பெயர் தந்தோம்' என்று தீட்சா நாமம் சூட்டினாராம்.

இவருக்குத் திருவாதவூரடிகள் என்றும் ஒரு பெயர் உண்டு. திருவாதவூரில் பிறந்ததால் இவரைத் **திருவாதவூரர்** என்றனர்; சிவநேசச் செல்வராக ஞானப்பிறவி எடுத்துப் பேரும் புகழும் பெற்றபின், திருவாதவூரடிகள் என்றனர். மாணிக்கவாசகர் என்ற பெயரைத் தீட்சைப் பெயர் என்றும் திருவாதவூரர் என்பதைப் பிள்ளைப் பெயர் என்றும் கூறுகிறார்கள். திருவாதவூரில் பிறந்தவர்களை யெல்லாம் குறிக்கும் பொதுப்பெயர் இவருக்கு எப்படிப் பிள்ளைத் திருப்பெயராகப் பெற்றோரால் இடப்பட்டதோ என்பது ஆராய்ச்சிக்குரியது.

'சிவபெருமானை வேதத்து ஒலிகொண்டு வீணை கேட்பார்' என்கிறது தேவாரம். பரமன் இரசிகர்களுள் சிறந்த பரம ரசிகன் என்பது கருத்து. இன்பக் கலைகளுள் ஒன்று இசை; இது கவிதைக்கே உரிய—கவிதையோடு இசைந்தும் இணைந்தும் ஒன்றுபட்டிருக்கும்—இசையுமாகும். சுவை கனிந்த பாடல்களிலிருந்து இசையைப் பிரிக்கமுடியாது. மாணிக்கவாசகரே 'பண்சுமந்த பாடல்' என்கிறார். இத்தகைய பாடல்களின் சிகரத்தைத் திருவாசகம் எட்டிப் பிடித்திருப்பதாகக் கருதலாம்.

'இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்' என்று சம்பந்தரைச் சிறப்பித்துக் கூறுவர்.' திருவாசகப் பாடல்களின் சொற்களையும் எழுத்துக்களையும் சுர நிலங்களில் அமைத்துப் பாடினார். சுரங்களுக்குப் பாடல் அமைந்ததோ, பாடல்களுக்குச் சுரம் அமைந்ததோ என்று இசை வல்லார் பெருவியப்பு எய்துவர்' என்று திருச்சி வானொலியில் பேசிய தமிழறிஞர் ஒருவர் கூறினார்.

இத்தகைய இசைப்பாடல்களாகத் திருவாசகத்தை மதிப்பிடுவது மாணிக்க வாசகருக்கு உள்ளபடி முழு நீதியும் செலுத்துவதாகாது. உண்மையில் இவருக்கு உயர்ந்த தமிழ்க் கவிகளின் வரிசையில் தக்க இடம் உரியதாகும். ஆழ்வார்-நாயன்மார் திருக்கூட்டத்திலே மாணிக்கவாசகருக்கே கவிக்கிரீடம் உரியதாகும் என்பது என் கருத்து.

இவருக்குக் கவிதை வேறு, சிவபக்தி வேறு என்பதில்லை. இறைவன் கழல் ஏத்தும் இன்பமே இவர் கவியின்பம். 'கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால் கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை!' என்றும் இவர் கூறியுள்ளார். பாட்டிலும் ஆனந்தக் கூத்திலும் இவர் பரம்பொருளைக் கண்டவர் எனலாம். அன்பும் சிவமும் இரண்டல்ல, ஒன்றே என்பது திருமூலர் கருத்து. தமிழ்க் கவிதையும் அதற்கு உரிய இசையும் போல, இவர் கண்ட சிவனும் சிவனருளும் இசைந்து ஒன்றுபட்டிருப்பதாக ஊகிக்கலாம்.

அம்மானை, பொற்சுண்ணம் இடித்தல், சாழல், தெள்ளேணம், ஊசல் (ஊஞ்சல்) முதலிய மகளிர் விளையாட்டுக்களைக் குறிக்கும் பாடல்களில் இவர் அருமையான சிவானுபவ உண்மைகளையும் கவிதானுபவ உண்மைகளையும் எளியமுறையில் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார்.

சிவமயமாகக் கண்ட சப்தசித்திரங்களை இச்சிவ நேசரின் நிகரற்ற கவித்திறன், கவிமாணிக்கங்களாக உருவெடுக்கச் செய்திருக்கின்றன. இவற்றில் சாதி-குலம், பிறப்பு, பொருள் முதலியவை பற்றிய உயர்வு தாழ்வுகளுக்கு இடம் சிறிதும் இல்லை. 'மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே' என்று அருவிச் செய்கிறார். சகோதர மக்கள்பால் உள்ள கருணை யால்.

சைவ சித்தாந்த அடிப்படை உண்மைகளை நாம் திருவாசகத்தில் காண்பதுபோல் வேறு ஒரு வாசகத் திலும் எளிமையாகவும் இவ்வளவு தெளிவாகவும் காண்பது அரிது. இவர் தமது கவிதைப் பொக்கிஷ வாசலைத் திறந்து, 'இறைவனது அருட்பெருஞ் செல்வத்தைப் பகிர்ந்துகொள்ள வாருங்கள்' என்று கூவி அழைக்கிறார்.

சைவர்களுக்கு மட்டுமல்ல, பல்வேறு சமயத்தின ருக்கும் இவர் சைவம் இடம் கொடுக்கிறது. கவிதை யோடு இரண்டறக் கலந்து நிற்கிறது சமய உணர்ச்சி. எனவே மணிவாசகரின் அருள்வாக்கு ஆத்திகரோடு சிந்தனையாளரான நாத்திகருக்கும் சிறந்த நற்பயன் விளைக்கும் என்பது திண்ணம்.

* * *

நம்மாழ்வாரின் ஞானவாக்கும், ஆத்திக — நாத்திக வேற்றுமையின்றி, வைதிக — அவைதிகர் என்ற பேத மின்றி, அனைவர்க்கும் சிந்தனைச் சுடர்களைத் தூண்டி விடும் அருள் விளக்குத்தான். அங்கே அதிக அளவில் தத்துவ ஞானம் சமய அடிப்படையில் கலந்திருக்கிறது. அவர் வைஷ்ணவமும் இவர் சைவம்போல் அடிப்படை யுண்மைகளைத் தெளிவுபடுத்தியிருக்கிறது. அவரும் இவரைப்போல் கருணைக்கடல். ஒரே நூற்றாண்டில் இருவரும் முன்—பின்னாக வாழ்ந்தார்கள்.

மாணிக்கவாசகரை அன்புருவாகிய கவிச் செல்வ ராகவும் அனுபூதிக் கலைஞராகவும், நம்மாழ்வாரை அநுபூதிக்கலையை ஞான சிகரத்திலே கண்ட வித்தக ராகவும் நான் காண்கின்றேன்.

2 குழந்தைமுனி

பக்தி, ஞானம், வைராக்கியம் முதலியவற்றை நம் தமிழ் நாட்டிலே ஊன்றிப் பரவச் செய்தவரும், சமரச நோக்கு உடையவருமான நம்மாழ்வார் வாழ்க்கை வரலாறு அனைவராலும் போற்றி வாசிக்கத் தக்கது. பக்த கவிஞர்களுடைய கருத்துகளுக்கு ஆற்றல் அதிகம். உண்மைத் தொண்டர்கள் உண்மைக் கவிகளாகவும் இருந்து விட்டால் அவர்களுடைய கருத்துக்கள் சமுதாயத்தை ஊடுருவிப் பரவும் ஜீவசக்தி வாய்ந்தனவாகும். அத்தகைய சக்தி சைவ சமய ஆசாரியர்களான நால்வருக்கும் (அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்க வாசகர் ஆகியவர்களுக்கும்) ஆழ்வார்கள் பன்னிருவருக்கும் உண்டு.

ஆழ்வார்களில் சிறப்புற்றுத் தலைவராக விளங்கியவர் நம்மாழ்வார். இவர் வேளாளர் வகுப்பினராயினும் "சது மறைப் புரோகிதர்' என்று பார்ப்பனர்களாலும் போற்றப்பட்டு வந்திருக்கிறார், பல நூற்றாண்டுகளாக இத்தாலியில் **கரிபால்டி**யும் ரஷ்யாவில் **டால்ஸ்டா**யும் தம் கருத்துக்களால் நாட்டின் போக்கையே மாற்றி விட்டது போல் நம்மாழ்வாரும் தம் காலத் தமிழகத்தின் போக்கைச் செம்மைப் பெரு நெறியில் திருப்பி விட்டார்.

உருக்கமாகவும் தெளிவாகவும் சமயப்பெருங் கருத்துக்களை மக்களிடையே பரப்பிய நம்மாழ்வார் தத்துவப் பெருங்கலைஞர் ஆவர். நம்மாழ்வார் என்ற தனிச்

சிறப்புப் பெயரே இவருடைய உண்மைப் பெருமையை உலகிற்கு உணர்த்துவதாகும்—பொதுவாகச் சமய உலகிற்கும் சிறப்பாக வைணவ உலகிற்கும்.

சரித ஆராய்ச்சியும் கால நிலையும்

காந்தியடிகள் போன்ற பெரியோர்களை அறிந்து கொள்ள வேண்டுமானால் அவர்களுடைய வரலாற்றை அறிய வேண்டும் ஆராயவேண்டும். பக்தமணிகளின் சரித்திரங்களிலே அற்புத நிகழ்ச்சிகள் விரவிக் கிடக்கும். இவற்றை உற்று நோக்கியும் ஊடுருவிப் பார்த்தும், வாழ்க்கை வரலாற்றின் உண்மைகளைக் கண்டு பிடிப்பது சிரமமான காரியம்தான். நம்மாழ்வாரைச் சூழ்ந்து அற்புத மயமாகக் கதைகள் படர்ந் திருக்கின்றன என்பதில் அதிசயமில்லை.

வாழ்க்கை வரலாறு என்றால் பிறந்த தேதியும் இறந்த தேதியும் திட்டவட்டமாகத் தெரிந்து கொள்வது மட்டுமன்று. திருமணமான காலம், நூல் எழுதிய காலம், முதலியவற்றை அறிந்து கொள்வது மட்டு மன்று. ஒரு பெரியார் பிறந்தகால நிலையை முக்கியமாக அறிந்து கொள்ள வேண்டும். காலம் மனிதனை உருவாக்குகிறது; பெரியவர்களோ காலத்தால் உருவாகி வந்தபோதிலும் அக்காலத்தையும் உருவாக்க வல்லவர் ஆவர். இவ்வுண்மை நம்மாழ்வாருக்குப் பெரிதும் பொருந்துவதாகும்.

காலம் என்ற வயலிலே பெரியவர்களின் கருத்து—விதைகள் பயிராகின்றன. அவைஎப்படிப் பக்குவப்பட்டு மக்களுக்குப் பயன்படுகின்றன என்ற ஆராய்ச்சி உண்மை வரலாற்றைப் புலப்படுத்தும். சுருங்கச் சொன்னால் பெரியோர்களின் சரிதத்தைக் காட்டிலும் கருத்துச்சரிதம் மேலானது. எனவே, நம்மாழ்வாரின் பாசுரங்களில் காணும் கோட்பாடுகளும் கருத்துக்களும் முக்கியமாக ஆராயத்தக்கன.

இந்த ஆராய்ச்சியில் கதைகளையும் செவிவழிச் செய்திகளையும் கூடப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பண்பட்ட ஆராய்ச்சி உள்ளம், தள்ள வேண்டியதைத் தள்ளி விட்டு மற்றைச் செய்திகளைக் கோவைப் படுத்திக் கொள்ளும். வைதிகர்களும் குருட்டு நம்பிக்கை உள்ளவர்களும் ஆத்திகர்களாயினும், நாத்திகர்களைப் போலவே 'இத்தகைய ஆராய்ச்சிகள்' பயனற்றவை என்றே கருதுகிறார்கள்.

எனினும் நடுநிலையில் நேர்மையாக ஆராய்ச்சி செய்வோர் நம்மாழ்வாரைப் போன்ற பெரியவர்களைப் பற்றியும், ஆராய்ச்சி செய்துகொண்டே போவார்கள் என்பதில் ஐயமில்லை.

சைவ வைணவப் புது மலர்ச்சி கி. பி. 6 அல்லது 7-ம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை ஒருவாறு தொடர்ச்சியாக ஏற்பட்டது. இந்த இரண்டு பெருஞ் சமயங்களும் ஏறத்தாழ ஒரே காலப்பகுதியில் மறு மலர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று தெரிகிறது. இந்து வைதிக சமயம் என்ற ஞான கங்கை நம் தமிழகத்திலே சைவம், வைணவம் என்ற இரண்டு கிளை ஆறுகளாய்ப் பெருகிக் குமரி முதல் இமயம் வரை நிலவிய இந்து சமயத்திற்குப் புதுவாழ்வு தந்துவிட்டன. இது அதிசயமான உண்மை, இதற்குக் காரணமான மகா புருஷர்களில் நம்மாழ்வாருக்கு முக்கிய இடம் உண்டு.

இந்து சமய மறுமலர்ச்சி சங்க காலத்துக்குப் பின்பே ஏற்பட்டது. சங்ககாலக் கொள்கைகளில் சாரமானவற்றை சமய ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டார்கள். காலப்போக்கில் வடமொழிக் கலப்பு அதிகமாகித் தமிழ் நடையும் தற்காலத்துக்கு ஏற்றவாறு மாறத் தொடங்கியது. சங்க காலத்துக்கு மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுகளுக்குப் பின் தொடங்கிய பக்தியுகம் என்ற மறுமலர்ச்சிக் காலத்தின் பிற்பகுதியில் தோன்றி அந்த யுகத்தைப் பூர்த்தி செய்தவர்கள் நம்மாழ்வாரும்

மாணிக்கவாசகரும் என்பது தெள்ளத் தேறித் தெளிந்த உண்மையாகும்.

சமண பௌத்தக் கொள்கைகளும் தமிழர்கள் கண்டு மறந்தவைதாம். சமண சமயம் மட்டும் இன்றளவும் தமிழர்களில் சிறுபான்மையோரால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. சைவ வைணவ சமயங்கள் சீரழிந்த பௌத்த சமயக் கொள்கைகளை வென்று வலியழித்தன; அவற்றின் சாரத்தை ஏற்றுக் கொண்டு தங்கள் மேம்பாட்டைப் பெருக்கிக் கொண்டன. சைவம் வைணவம் என்ற இரு பெருஞ் சமயக் கொள்கைகளுக்கிடையே—முக்கியமாகத் தத்துவங்களுக்கிடையே — சாராம்சத்தில் வேற்றுமை இல்லை. முழு முதற் கடவுளை வைணவர்கள் திருமால் என்றனர், சைவர் சிவன் என்றனர், பெயரில் பேதம், சில கொள்கைகளிலும் வேற்றுமை; ஆனால் இந்துவைதிக சமயத்தில் உயிர் நிலைக்கொள்கைகளை சைவவைணவச் சமயங்கள் ஒருங்கே ஏற்றுக் கொண்டன. இந்த மகத்தான உண்மையை நம்மாழ்வாரையும் மணிவாசகரையும் ஒப்பிட்டுக் கற்பவர்கள் உணர்ந்து கொள்ளுவார்கள்.

கதைகளின் கருப்பொருள்

நம்மாழ்வார் பிறந்தபோதே சாதாரண மக்கள், உணர்ச்சிகள் இல்லாமல் இருந்தார்கள் என்பதுஒருகதை. குருகூர் என்ற ஆழ்வார் திருநகரிக் கோயிலில் புளிய மரப் பொந்தில் அமர்ந்திருந்தார் என்கிறது இக் கதை. பேச்சில்லாமலும் உணவில்லாமலும் மூச்சு இருந்தது. வளர்ச்சியும் இருந்ததாம் 16-ம் ஆண்டுகள் வரை. பிறக்கும் போதே பரிபூரண ஞானத்துடன் தோன்றினார் என்பதைப் பிரசாரம் செய்வதுதான் இக்கதையின் நோக்கம்.

அடுத்த கதை நம்மாழ்வார் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்த மதுரகவி யாழ்வாரைப் பற்றியது. இவர் குருகூருக்கு அருகிலுள்ள திருக்கோளூரில் பிறந்தவர்.

ஜைமினி சாமத்திற்குரிய தீட்சிதர் வகுப்பினர். (இவ் வகுப்பினரான பார்ப்பனர்கள் இப்பொழுது திருநெல் வேலி-திருச்செந்தூர் சாலை மார்க்கத்தில் உள்ள தென் திருப்பேரை என்ற ஒரு கிராமத்திலும், பாலக்காட்டுக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூரிலும் காணப்படுகிறார்கள்.)

இந்தியாவின் தெற்குக் கோடியிலுள்ள குக் கிராமத் தைச் சேர்ந்த மதுரகவி சமய உலகில் உண்மையைக் காண்பதற்காக இராமன் பிறந்த அயோத்திக்கேபோய் அருந்தவம் புரிகிறார். தெற்கே ஒரு ஜோதி கண்டு அதைப் பின்பற்றித் திரும்புகிறார். அது திருக்குருகூர் வரை தோன்றி, புளிய மரத்தடியில் வாய் பேசாக் குழந் தையிடம் மறைந்து போவதைக் காண்கிறார்.

உண்மையைத்தேடி எங்கெங்கேயோ போகவேண்டு மென்பதில்லை, அது நமக்கு அருகிலேயே காத்திருக் கிறது, கண்ணுள்ளவர்கள் பார்க்கட்டுமென்று! இந்த அற்புத உண்மையை வெளியிடுவதற்காக அற்புத நிகழ்ச்சி ஒன்றைக் கற்பனை செய்திருக்கிறது பக்த மனோபாவம். இத்தகைய அற்புதக் கதை எத்தனையோ உண்மைக் கதைகளைக் காட்டிலும் உண்மையானது என்று சொல்லக்கூடும் இல்லையா?

முனிவர்போல் அமைந்திருக்கும் குழந்தையைப் பார்க்கிறார். கல்லையெடுத்துக் குழந்தைக்கு அருகே போடுகிறார். குழந்தை விழிக்கிறது.

செத்ததின் வயிற்றில்
சிறியது பிறந்தால்,
எத்தைத் தின்று
எங்கே கிடக்கும்?

என்று கேட்க,

அத்தைத் தின்று
அங்கே கிடக்கும்

என்று மறுமொழி வருகிறது குழந்தையிடமிருந்து. உடனே பேசுகிறது. அதுவரை பேசாதது. அடிமையா கிறார் அவர் குழந்தை குருநாதனுக்கு. கவி வெள்ளமிடு ற து. ஒன்றா, இரண்டா? ஆயிரம் அருட் பாசுரங்களில் முதியவர் வெகுதூரம் போய்த்தேடிய உண்மை கிடைத்து விடுகிறது.

'நிஜமாகவே நடந்ததா?' என்று பகுத்தறிவாளர் மூளையைக் குழப்பிக்கொள்ள வேண்டாம். கிறிஸ்து பெருமான் திரு அவதாரம் செய்தபோதும் விண்ணில் தோன்றிய ஜோதி தான் மதுரகவிக்கும் தோன்றுகிறது. கிழக்கேயிருந்து ஞானிகள் அதைக் குறியாகக் கொண்டு வருகிறார்கள். தெய்வக் குழந்தையைக் கண்ணுற்றுக் காணிக்கை செலுத்திப் போகிறார்கள். கிறிஸ்தவக் கதையைத் தழுவியது தான். மதுரகவி ஜோதியைக் குறிக்கோளாகக்கொண்டு குழந்தை முனியாகிய நம் மாழ்வாரைக்கண்டு பிடித்ததும்.

16 வயது வரை குழந்தைபோல் இருந்துவிட்ட சிறு வன் வாய் திறந்து பேசியது திருவாய்மொழி - இயற்கை யும் செயற்கையுமான அழகு வருணனைகளோடும் அரிய தத்துவ அனுபவ ஞானம் உலக அனுபவங்களுடன் கலந்து வருகிறது. சமய உணர்வு அரிய செந்தமிழ் நடை யில் சிறந்த கவிப்போக்கில் கிடைத்து விடுகிறது.—மதுர கவிக்கும் நமக்குந்தான்.

அதிசயத்திலும் அதிசயம், குழந்தை முனி அகப் பொருளாகிய காதல் துறையிலும் சமய உண்மைகளைப் புலப் படுத்தி உள்ளார் என்பது. காதலை பக்தியாக்கும் இரசவாத வித்தையில் தேர்ந்த சித்தர் இந்த பக்தர். சங்கப் புலவர்கள் வெகு நன்றாகக் கையாண்டது அகப் பொருள் துறை. அவர்களைப் பின்பற்றிக் குழந்தை முனி யும். அத்துறையையும் சமய ஞானத்திற்குப் பணிபுரியச் செய்திருக்கிறார்.

இவற்றையெல்லாம் இவர் எப்படி ஓதாது உணர்ந்து கொண்டார்? எல்லாம் பகவானுடைய அருள் என்பர் பக்தர். இவரைத் திருமாலின் அவதாரம் என்றும் போற்றுவர். ஆராய்ச்சியாளரோ, நம்மாழ்வாரும் பிள்ளைப் பிராயத்தில் தக்க கல்விப் பயிற்சி பெற்று அப்பால் உலக அனுபவமும் பெற்று இப்பாசுரங்களைப் பாடியிருக்கவேண்டும் என்பர். அருளும் அனுபவமும் கலந்ததுதான் இவர் கதை என்றும் முடிவு கட்டலாம்.

இக்கதைகளின் கருப்பொருள் தான் என்ன? தாவர வர்க்கம், பிராணி வர்க்கம், மனித வர்க்கம் என்று சாதாரணமாகப் பகுத்துப் பேசுகிறோமே, இவையெல்லாம் ஒன்றோடொன்று இசைந்து, விஞ்ஞானிகளுக்கும் மெய்ஞானிகளுக்கும் ஒருமையுணர்வு தரக்கூடும்.

தாவரமா, பிராணிதானா என்ற நிலையில் தாவர வர்க்கத்திற்கும் பிராணி வர்க்கத்திற்கும் இணைப்பாயிருக்கும் ஒருவகைப் பிராணிகளையும் காணலாம். அப்படியே பிராணி வர்க்கத்திற்கும், மனித வர்க்கத்திற்கும் இடையே ஒருவகை வாலில்லாக் குரங்குகளைப் பார்க்கிறோம். காட்டு மனிதர்களில் 'இருகால் விலங்குகளா இவர்கள்?' என்று சொல்லத்தக்க நிலையில் உள்ள மனிதப் பிராணிகளும் உண்டு.

மானிட வர்க்கத்திற்கு மேலாக தேவ வர்க்கம் உண்டு என்பது சமயவாதிகளின் நம்பிக்கை. இந்த வர்க்கங்களுக்கிடையே "இவன் மனிதனா; தேவன்தானா?" என்று அதிசயிக்கத்தக்க மானிடர்களும் உண்டு என்பதைச் சமீப காலத்தில் வாழ்ந்த ரமண முனிவர், ராமகிருஷ்ண பரம ஹம்ஸர் முதலானோர் மெய்ப்பித்து இருக்கின்றனர். காந்தியடிகளும் இந்த நிலையிலுள்ள மகாத்மாவாக மதிக்கப்பெற்றார் என்பதை நாம் மறந்து விட்டோமா?

நம்மாழ்வாரையும் அவரை அறிந்தவர்கள் 'இவர் பக்தரா, பகவானா?' என்று மனிதனையும் தெய்வத்தையும் சமப்படுத்தும் நிலையில் பேசியிருக்கிறார்கள். இக்கருத்துக்களைச் சிந்தையில் கொண்டு பின்வரும் வெண்பாவைப் பார்க்கலாம்:

சேமம் கூறுகையோ, செய்யதிருப் பாற்கடலோ?
நாமம் பராங்குசனோ, நாரணனோ? – தாமம்
துளவோ வகுளமோ? தோள் இரண்டோ, நான்கும்
உளவோ பெருமான் உனக்கு?

நம்மாழ்வார் என்ற ஞான தேசிக வடிவத்தைப் பார்க்கும்போது, தோன்றும் உணர்ச்சிகளை இவருடைய பரம பக்தர்களில் ஒருவர் குறிப்பிடுவதாக அமைந்திருக்கிறது மேலே சொன்ன வெண்பா. குருகூர் என்ற ஆழ்வார் திருநகரியில் தான் வீற்றிருக்கிறது இந்த ஞான சௌந்தரிய வடிவம். ஆனால் தாம் இருக்கும் இடத்தைத் தெய்வம் பள்ளி கொண்டிருக்கும் பாற்கடல்போல் அவ்வளவு சுத்தமாகச் செய்து விடுகிறாராம் இவர்.

இந்தத் தெய்வ உணர்ச்சி பார்க்கப் பார்க்க அதிகப்படுகிறது. அலைமேல் அலையாக உயர்கிறது. 'நாமம் பராங்குசனோ, நாரணனோ?' என்று கேட்கத் தோன்றுவதுபோல், நம்மாழ்வாரின் பெயர்களில் ஒன்று பராங்குசன்.

நம்மாழ்வார் மகிழம்பூ மாலை அணிந்திருப்பவர். நாராயணனோ துளசிமாலை அணிந்திருப்பவன். இப்போது மகிழம்பூ மாலை துளசி மணி மாலைபோல் தோற்றமளிக்கிறதாம் குரு பக்தி ததும்பும் கண்களுக்கு. ஆழ்வாருக்கு. நம்மைப் போல் தோள்கள் இரண்டே எனினும் திருமாலைப் போல் நான்கு தோள்களும் உளவோ?—என்று பிரமிக்கிறது மனோபாவம். இது பிரமிப்பு அன்று, மயக்கம் அன்று, ஞானத்தெளிவுதான் என்பது குறிப்பு.

இத்தகைய கருப்பொருளை நம்மாழ்வார் கதைகளில் காண்கிறோம். 'பராநர்த்தம்' (பிறர் துன்பம்) நெஞ்சிலே படுகையாலே நாட்டுக்காகத் தாம் மன்றாடுகிறார்

என்று வியாக்கியான சக்கரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை போற்றும் இந்த ஆழ்வாரைத் தெய்வசமானர் ஆக்கியிருக்கிறது பக்தர்களின் மனோபாவம். இந்த மனோபாவம் அற்புத நிகழ்ச்சிகள் நிறைந்த கதைகளை வளர்த்து விட்டிருக்கின்றது என்றால் அதில் அதிசயம் என்ன?

அற்புதம் எது?

ஞானக் குழந்தையாக மாறிப் பிறந்து ஒரு பிறவியை இருபிறவி ஆக்கிக்கொள்வதைக்காட்டிலும் ஓர் அற்புதம் இருக்க முடியுமா? இயற்கைச் சட்டங்களை மீறி நிகழும், அல்லது நிகழ்வதாகக் கருதப்படும் நிகழ்ச்சிகளையே அற்புதங்கள் என்று மதிக்கிறது சாதாரண மக்களின் மனப்பான்மை. ஆனால் இந்த அற்புதங்கள் மீது உள்ள நம்பிக்கை மூட நம்பிக்கை ஆகி முக்தி நெறியையும் பக்தி நெறியையும் இலவசமாக்கிவிடக்கூடும். இதை நன் குணர்ந்த மேலைநாட்டு வித்தகர் ஒருவர் ஒரு கற்பனைக் கதை புனைந்திருக்கிறார், மூட பக்தர்களுக்கெல்லாம் ஓர் எச்சரிக்கையாக.

நம்மைப்போல் கிறிஸ்தவர்களும் அற்புதங்களை நம்புகிறார்கள். கிறிஸ்து பகவான் குஷ்டரோகி யைக் குணப்படுத்தினார் என்கிறார்கள். கண்கெட்ட வனுக்குக் கண்ணைத் தந்தார் என்கிறார்கள். பாவி களின் பாவங்களை மன்னித்தார் என்கிறார்கள். பரம பிதாவின் அருளுக்குச் சாட்சிகள் வேண்டுமே என்று தேவ குமாரர் அத்தகைய அற்புதங்களைச் செய்தார் என்பர்.

ஆனால், இந்தச் சாட்சிகள் ஏசுபெருமான் எதிர் பார்த்தவாறு தெய்வ அருளுக்குச் சான்றாக வாழ்ந்த னரா? இப்படி ஒரு வினாவை எழுப்புகிறது மேலே சொன்ன கற்பனை.

சாட்சிகளைச் சரிபார்க்கவேண்டும் என்று பூமிக்கு விரைந்து வந்தாராம் உலக ரட்சகர். பழைய குஷ்ட ரோகியின் இருப்பிடத்திற்கு வந்தார் முதன் முதலாக. பகட்டான மாளிகையில் படாடோபமாக வாழ்ந்து வந்தவன் மது வெறியில் மதிமயங்கி இருந்தான். 'நான் யார் தெரிகிறதா?' என்று கேட்டார் பெருமான். 'குஷ்ட நோயைப் போக்கி உடல் நலம் தந்த உபகாரியை மறப் பேனா?' என்று உடனே பதில் வந்தது 'இதுவோ உன் வாழ்க்கை இப்பொழுது?' என்றார் அவர். 'ஆரோக் கியம் அளித்தீரே அப்பொழுது அந்த ஆரோக்கிய வாழ்வை வாழ வேண்டாமா, அனுபவிக்க வேண் டாமா?' என்று பதில் வந்தது.

இனி மற்ற இரண்டு சாட்சிகளையும் "காண்போம்' என்று புறப்பட்டார் கருணாகரரான கிறிஸ்து பெரு மான். அந்த இருவரையும் ஒரே இடத்தில் சந்திக்க நேர்ந்துவிட்டது. பாவ மன்னிப்புப்பெற்ற பாவையைப் பின் தொடருகிறான் கண்பெற்ற பாக்கியசாலி. 'தெரி கிறதா? என்ற கேள்விக்கு 'நன்றாகத் தெரிகிறது, கண் கொடுத்த கருணைமூர்த்தியே' என்றுபதில் கிடைக்கிறது. கண் படைத்த பயனைப் பெற்று விட்டதாகவும் ஒப்புக் கொள்கிறான் அவன்.

அவளுக்கோ உள்ளம் பாவம் துடைத்த சுத்தமான கற்பலகை ஆகிவிட்டது; மீண்டும் எழுத வேண்டியது தானே?

இந்தக் கற்பனையில் அற்புதங்களால் மட்டும் சமயம் நிலைபெறுவதில்லை என்ற பாடம் எல்லா சமயிகளுக்கும் கற்பிக்கப்படுகின்றன. இக்கருத்தை ஒட்டி நம்மாழ் வாரும், ஒரு பிறவியிலேயே இரு பிறவிபெற்று வீடு பெறு வதற்குத் தவம் கிடந்துதான் வழி காணமுடியும்' என் கிறார். ஆனால் அந்தத் தவநெறியையும் அருள் நெறி யாகக் காட்டுகிறார். அருள் நெறியில் துன்பமும் இன்ப

மாகிறது. காதலும் பக்திக் காதலாகித் துறவு நிலையின் தூய்மை பெற்று விடுகிறது. இந்த நிலையில் பக்தனுக்கு கைங்கரியமே தவமாகிறது.

மேகங்களின் உபதேசம்

நம்மாழ்வாரின் தூய தவநெறிக் கொள்கையையும் அருள்நெறிக் கொள்கையையும் ஒருங்கே காண்கிறோம், ஓர் அழகிய பாசுரத்திலே. திருமாலின் திருமேனி ஒக்கும் பாக்கியம் மேகங்களுக்குக் கிடைத்திருக்கிறதே அதற்கு அவை செய்த தவம்தான் என்ன? இந்த வினாவை மேகங்களுக்கே போடுகிறார் நம்மாழ்வார்,

இலவசமாகவோ, அற்புதமாகவோ தங்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைத்து விடவில்லை என்கின்றன வாம் மேகங்கள். திருமாலை ஒத்திருக்கத் திருமாலைப் போல் உயிரைக் காக்கும் பணியில் மேகங்கள் தங்களை முழுக்க இழந்து விடுகின்றனவாம். இந்த லோகோபகார கைங்கர்யமாகிய தவத்தைத் 'தவமாம் அருள்' என்று குறிப்பிடுகிறார் நம்மாழ்வார்.

இப்போது பாருங்கள் வினாவும் விடையுமாக அமைந்திருக்கும் ஆழ்வார் பாசுரத்தை:

மேகங்களோ! உரையீர்; திருமால்
    திருமேனி ஒக்கும்
யோகங்கள் உங்களுக்கு எவ்வாறு
    பெற்றீர்? — உயிர் அளிப்பான்
மாகங்கள் எல்லாம் திரிந்து
    நன்னீர்கள் சுமந்துநுந்தம்
ஆகங்கள் நோவ வருத்தும்
    தவமாம் அருள்பெற்றதே!

ஒரு மெல்லியல் தன் உடல்நோவக் குடத்தில் நன்னீர் சுமந்துகொண்டு போய்த் தாகம் உடையவர்களுக்கெல்லாம் பட்சபாதம் இன்றி அந்த நீரை வழங்குவது போல; மேக கன்னிகைகளும் உடல்நோவ வருந்தச் செய்யும் தவமாகிய அருளைப்பெற்றுப் பணி புரிகிறார்களாம். இத்தகைய உழைப்பை கைங்கர்யத்தைப் பேரின்பமாக்குகின்றன. அருள் நெறியும் அன்பு நெறியும்.

இத்தகைய கைங்கரிய நெறியில்தான் திருமால் திருமேனி ஒக்கும் யோகங்களின் இரகசியம் அடங்கியுள்ளது என்பது இக்கவிச் சித்திரத்தின் திரண்ட பொருள். மேகங்களைப்போல் பக்தர்கள் 'காராளும் மேனிக் கருணாகர'க் கடவுளுக்கு உகப்பான லோகோபகார மான கைங்கர்யம் புரியவேண்டும்; அதை நற்பெருந் தவமாகக் கொள்ள வேண்டும். அதனால் பக்தர்களும் பகவானை ஒக்கும் பாக்கியசாலிகள் ஆகின்றார். குணத்தில் மட்டுமல்ல; திருமேனிப் பொலிவிலும்தான்.

இந்தத் தனிப்பெருங் கொள்கையை மேகங்களின் ஒழுக்கமாகவும் உபதேசமாகவும் கண்டு காட்டுகிறது நம்மாழ்வாரின் ஞானக் குழந்தை உள்ளம். இவருக்கு ஒழுக்கமும் உபதேசமும் ஒன்றே. ஆகவே, இவருடைய திருமேனி திருமாலின் திருமேனியை ஒத்திருந்தது என்று பக்தர்கள் கருதுவதில் வியப்பில்லை.

ஆழ்வார் திருநகரியை நோக்கி நடந்துவந்த இராமா நுஜர் 'இதுவோ திருநகரி?' என்று அதிசயித்தாராம்; அந்த ஞான வளம் கண்டு. ஆழ்வாரின் தெள்ளத் தெளிந்த மனம் போலத் தாமிரபருணி ஓடிக் கொண் டிருந்தது. அது சாரற் காலத்து வெள்ளமாக இருக்கக் கூடும். 'இதுவோ 'பொருநை!' என்று அதிசயித்த வண்ணம் குருகூரின் எல்லையில் அடி வைத்துச் சென்றார்.

ஆழ்வாரின் அருமந்த பக்தர்களால் அமைந்திருக்கும் வசீகரமான சூழ்நிலை கண்டு.

இதுவோ பரம பதத்து எல்லை!

என்று ஒரே வியப்பில் மூழ்கி ஆனந்தபரவசரானார் யதிராஜராகிய இராமாநுஜர்.

இராமாநுஜ முனியின் குழந்தை உள்ளம், குழந்தை முனியின் மான்மியத்தை உள்ளவாறு உணர்ந்து கொண்டது.

3. கதையும் கருணையும்

நம்மாழ்வார் கதையை 'நம்மாழ்வார் தாலாட்டு' என்ற சிற்றிலக்கியத்தின் துணை கொண்டு தெரிந்து கொள்வோம். இப்பிரபந்தத்தை ஏட்டுச்சுவடியிலிருந்து முதலில் அச்சு வாகனம் ஏற்றியவர் என் தந்தையார் ஸ்ரீ உ.வே. பிச்சு அய்யங்கார். இவர் பதிப்பு 1900-ஆம் ஆண்டில் வெளி வந்தது. இந்நூலை இயற்றியவர் உபய கவி அப்பா என்பவர். நம்மாழ்வாரின் வைபவத்தை விரிவாக ஆண்களோடு பெண்களும் பெரியோரைப்போல் சிறுவர்களும் சுலபமாய் அறிந்து கொள்ளும்படி இந்நூல் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆழ்வார் திருநகரி என்ற திருக்குருகூரைத் தலைமை ஊராகக் கொண்டது திருவழுதி வளநாடு. இந்நாட்டை ஆண்ட காரியார் என்ற வேளிர் தலைவர் திருவெண் பரிசாரம் என்ற திருப்பதிசாரத்தைச் சேர்ந்த உடைய நங்கை என்ற செல்வியைத் திருமணம் செய்து கொண் டார்.

நெடுநாள் அரசு செய்த பின் காரியார் தமக்குப் பிள்ளை இல்லாக்குறை பெருங்குறை என்று உணர்ந்தார். இவர் தம் மனைவி மீது கொண்டிருந்த காதலைப் புலப் படுத்துகிறது இவர் அவளை அழைத்துப் பேசுவதாகத் தாலாட்டில் வரும் முதல் வார்த்தை.

மானே விலையில்லா மாணிக்கமே! தெவிட்டாத

தேனே! ஒரு வார்த்தை செப்புவது கேள் என்றார்

நாடும் நகரமும் வளமாய் இருக்கின்றன. தேடி வைத்த பொருளும் இரத்தினங்களும் ஏராளமாய் இருக்

கின்றன. ஆனால் ஒரு பொருள் இல்லாத குறையால் நம் வாழ்வை வாழ்வாக மதிப்பதற்கில்லை என்று சொல்லி அதற்கு விளக்கமும் தந்தார் காரியார்.

குதலை மொழிக் கிண்கிணிக்கால் கோகனகச்
செவ்வாய்

மதலையரை இல்லாத வாழ்வுமொரு வாழ்வாமோ

என்று கூறி, மழலைமொழியும் காலில் கிண்கிணி ஓசையும் கேட்கும் செவிச் செல்வமே செல்வம் என்றார். மக்கள் முகம் காணாத வாழ்வும் ஒரு வாழ்வாமோ?'' என்றும், மைந்தரைப் பெற்று உய்யாத வாழ்வுமொரு வாழ்வாமோ என்றும் பலபடியாகக் கூறினார்.

இத்தனைக் காலமும் இதைக் குறித்துஎண்ணினோம் இல்லை என்று காரியாரும் உடைய நங்கையும் மன வருத்தம் அடைந்தார்கள். பிறகு திருநகரிலுள்ள பெருமாள் கோயிலுக்குப்போய் ஆதிநாதரை வழிபட்டார்கள். அவர் ஆகாச வாணியாகி, ''நீங்கள் திருக்குறுங்குடி சென்று வழிபாடு செய்யுங்கள்; குழந்தைப் பேறு கிடைக்கும்' என்று அருளிச் செய்தார்.

அதுகேட்ட காரியும் உடைய நங்கையும் மனவாட்ட மொழிந்து திருக்குறுங்குடி சென்றார்கள். அங்கே நம்பியைத் தரிசித்து மனம் உருகிப் பிரார்த்தனை செய்து கொண்டார்கள்! 'ஏழு தலைமுறையாக நாங்கள் உன் தொண்டராக இருந்திருக்கிறோம். உன் அருளும் பொய்யாமோ? எங்களுக்கு மகவு அளித்து வாழ்வளிக்கலாகாதோ? என்று கனவில் தோன்றிய நம்பியை நோக்கி முறையிட்டுக் கொண்டார்கள்.

புருஷோத்தமனாகிய நம்பி அருள் கூர்ந்து, 'நாம் உமக்கு மைந்தனாக வருவோம்' என்று அருளினான். அவர்கள் அந்த வரப் பிரசாதம் பெற்று, வேதாந்த மூர்த்தியையே பிள்ளையாகப் பெறப்போகும் பாக்கியம்

பெற்றோமே!' என்று அகமிக மகிழ்ந்து முகமலர்ச்சியுடன் ஊருக்குத் திரும்பினார்கள்.

குருகாபுரியில் காரியார் செங்கோல் செலுத்தி வருகையில், உடையநங்கை கருவுற்று வைகாசி விசாகத்தில் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். பன்னிரண்டாம் நாளில் ஆதிநாதர் சந்நிதியில் தொட்டிலிட்டுப் பிள்ளையைக் கண் வளரச்செய்தாள். பிள்ளைக்கு மாறன் என்ற பெயரையும் சூட்டினார்கள் என்கிறார் தாலாட்டுக் கவிஞர். மாறன் என்று பாண்டியனுக்கு ஒரு பெயர். பாண்டிய வம்சத்தைக் குறிக்கும் இப்பெயரை இவர்கள் இக்குழந்தைக்கு இட்டதே மதுரைப் பாண்டிய மன்னருக்கும் திருவழுதி நாட்டுக்குக் குறுநில மன்னருக்கும் உள்ள தொடர்பைப் புலப்படுத்துகிறது எனலாம்.

நம்மாழ்வாரின் மரபினரான குறுநில மன்னர்கள் பாண்டிய மன்னர்களுக்குப் போரில் படைத் துணையாக உதவினார்கள். பாண்டிய ராஜ குடும்பத்தினரோடு திருமணத் தொடர்பு கொண்டிருந்தனர். ஆனால், பெண்ணைக்கொடுக்கும் உரிமைதான் இவர்களுக்கு உண்டு. இவர்கள் முடிமன்னர் அல்லர். இத்தகைய தொடர்புபற்றி மாறன் என்ற பெயர் நம்மாழ்வாருக்குப் பிள்ளைப் பெயராக இடப்பட்டது என்று கருதலாம். வரலாற்றுத் தொடர்பை அறியாத நிலையில், உலக இயற்கைக்கு மாறி இருந்ததால் குழந்தைக்கு மாறன் என்ற பெயர் வந்தது எனச் சில குருபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

தாலாட்டின் ஆசிரியர் புதிய ஆராய்ச்சி நெறியை அறியாதவர்; வைதிக ஸ்ரீவைஷ்ணவர்களிடையே வழங்கி வந்த குரு பரம்பரைக் கதைகளையும் செவி வழிச் செய்திகளையும் தழுவித் தம் கதையை நடத்திச் செல்கிறார்.

அக்கதையைத் தம் மனோபாவத்தால் மெருகிட்டுப் புதுப்பித்திருக்கிறார்.

பெண்கள் தாலாட்டும் இசைக்கு உருகிய தாயின் உள்ளம் மகிழ்ச்சியடைவில்லை.

கன்றுமுலை உண்ணாது
காலம் கழிக்குமோ?

என்று பதறினாள், அள்ளி எடுத்தணைத்து,

அப்பா என் ஆருயிரே!
ஆருயிர்க்கும் ஆருயிரே
ஒப்பாரும் மிக்காரும்
இல்லா ஒளி விளக்கே.

என்று கொஞ்சினாள்.

குழந்தையையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கண்ணுக்கு இனியானே!
கட்டழகில் மிக்கானே!
பண்ணுக்கு இனியானே!
பாலொழுகும் சர்க்கரையே!

என்று சிராட்டிப் பாராட்டினாள். பாலூட்ட முயன்றாள் அது கடைவாய் வழியே வழிந்து ஒழுகியது. மனம் நைந்து பயப்பட்டாள்.

பாலுண்ண வில்லை,
பசித்து அழவோ தானுமில்லை;

என்ற குழந்தையின் நிலைகண்டாள். இயக்கமும் இல்லாமல் போயிற்று.

அருகிலிருந்த பெண்களைப் பார்த்து 'இது என்ன மாயமோ எடுத்துக்கிடத்தினால் நான் கிடத்திய வண்ணமே அசைவின்றிப் படுத்திருக்கும் குழந்தைகளை நீங்கள் கண்ட துண்டோ? என்று கேட்டாள். கணவருக்குச் செய்தி அனுப்பினாள்.

ஆதிநாதப் பெருமாள் முன் குழந்தையை எடுத்துக் கிடத்திவிட்டு, காரியாரும் உடைய நங்கையும் உற்றாரும் ஊராரும் ஒருமுகமாய்ப் பிரார்த்தனை செய்தார்கள். குழந்தையின் உடம்பில் அசைவு தோன்றியது.

காதசையத் தோளசையக்
கை அசையத் தாள் அசைய,

குழந்தை தவழ்ந்து சென்றது. 'தவழ்ந்து ஓடியது' என்று சொல்லும்படி விரைந்து சென்று அங்கிருந்த புளிய மரத்தின் கீழ்த் தெற்கு முகம் நோக்கிப் பத்மாசனத்தில் அமர்ந்தது. ஞான முத்திரை தரித்த கையுடன், மார்பு நிமிர்ந்து, நாசி நுனி நோக்கி நாட்டம் பிறழாமல் மூச்சு மடங்கி யோகாசனத்தில் இருந்த குழந்தையைக் கண்டனர் பெற்றோர்.

'குழந்தை தவழ்ந்தது போதும்' என்று உவந்து பார்த்துப் பார்த்து உள்ளம் களித்து நின்ற தாய் புளிய மரத்தின்கீழ் வீற்றிருந்த குழந்தையை எடுத்துக்கொள்ள விரைந்தாள். திடுக்கிட்டு, 'ஐயோ மலை அசைந்தாலும் மைந்தன் அசையான்' என்று கூவினாள். காரியார் ஓடி வந்து, பரிவாய்ச் சீராய் அணைத்து எடுக்கப்பார்த்தார். பயனில்லை.

அங்கே வந்திருந்த தாய்மார்கள் எல்லாம், பெண்கள் எல்லாம், குறுநில மன்னர்களெல்லாம் வந்து எடுத்தார்கள். நானாவிதமாக எடுத்துப் பார்த்தும் இயலவில்லை. உடைய நங்கை, கை சோர்ந்து மெய்சோரக் கால் சோரக் கண்ணீர் சொரிந்து, வாய்விட்டு அழுது அரற்ற முடியாமல் விம்மல் பொருமலாய் நின்றாள்.

'தவழ்ந்து ஓடவைத்த எம்பெருமானே இரங்காய்!' என்ற வார்த்தைகள் சிறிது நேரம் கழிந்தபின் மெல்ல வெளிப்பட்டன. பிறகு 'அறமே இரங்காய்' என்று அழுதாள். 'விண்ணே! இரங்காய். மண்ணே இரங்காய்'

என்று புலம்பினாள். 'விதி வலியே! சற்று இரங்காயோ? என்றாள்.

மந்திரவாதிகள் வந்தார்கள். மருத்துவ பண்டிதர்கள் வந்தார்கள். மூலிகையும் மந்திர தந்திரங்களும் பயன் அளிக்கவில்லை. அவர்கள் மனம் சலித்துத் தடுமாறித் திரும்பினர். பெற்றோர் மட்டும் குழந்தைக் கருகே இருந்தனர். அன்னம் உண்ண, வாய் பேசப் பண்ணிவைப்பார் ஆரோ?' எனக் காத்திருந்தனர்.

வாரங்கள் மாதங்களாகி ஆண்டுகளும் ஒவ்வொன் றாய்க் கழிந்தன. அவயவங்களின் வளர்ச்சிக்குக் குறை வில்லை. ஆனால் இது போதுமா தாய் தந்தையரின் மன நிறைவுக்கு, 'வழுதி குல வாழ்வே, குருகூரா!' என்று தாயும் செவிலித்தாய்மாரும் கூவி அழைத்தனர். தந்தையார் பொற்பந்து, பொற் பூ முதலிய விளை யாட்டுச் சாமான்களைக் கொண்டு வந்தார், விளை யாடும் பருவம் வந்துவிட்டதே என்று.

பாண்டிய மன்னன் சிறுதேர் சிறுபறை முதலிய வற்றை அனுப்பி வைத்தான். இவைகளைக் கொண்டு தன் மைந்தன் எப்போது விளையாடப் போகிறானோ? என்று உடைய நங்கை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏங்கினாள். சிறு வீடு கட்டி மற்றக் குழந்தைகள் விளை யாடுவதைக் கண்டிருந்தவர்கள் 'இந்த மாறனும் தன் சிற் றிடையைத் தூக்கி மணலால் கட்டிய சிறு வீட்டைச் சிதையானோ?' என்று புலம்பித் தங்கள் கண்கள் அதைக் காணப் பாக்கியம் செய்யவில்லையே என்றனர்.

வயது ஏற ஏற யோக சக்தியால் வளர்ந்து கொண் டிருந்த திரு உருவம் அற்புத அழகுடன் ஜொலித்தது. இவன் தனக்குரிய பெண்ணுக்கு மாலையிட்டு நிற்கும் மணக்கோலம் காண்போமோ? என்று கனவுகண்ட பெண் களும் உண்டு. தாய்பிள்ளை முகம் பார்த்து, 'என் கணவன், உன் கணவன் என்று போட்டியிட்டு இளம் பெண்கள் மையல் கொண்டு நிற்கிறார்களே; மணப் பருவம் வந்து விட்டதே உனக்கு?' என்று வாய்விட்டுக் கதறினாள்.

'இளவரசு தேவரீர்! எங்களுக்கு' என்று காரியாருக்கு அடங்கிய குறுநில மன்னர்கள் கப்பம் குவித்து நிற்கிறார்

களே—என்கிறாள் தாய் ஒரு சமயம். இவ்விதமாக நாள்கள் கழிந்த வண்ணமாய் இருந்தன.

சீடர் வருகை

சாம வேதத்தைச் சிறப்பாகக் கற்றவரும் நாலு வேதங்களையும் ஓதித் தம் வாழ்க்கையைப் புனிதமாக்கிக் கொண்ட வரும், குருகூருக்கு அருகே உள்ள திருக் கோளூரில் பிறந்தவருமான ஒருவர் கங்கையாற்றங்கரையில் கடுந்தவம் புரிந்து வந்தார். உண்ணா நோன்பில் சூரிய ஒளியையும் காற்றையும் பருகி இவர் கழித்த நாட்கள் பல. ஐம்புலனையும் அடக்க ஐந்து அக்கினிகளுக்கு நடுவே தவமிருந்த நாட்களும் பல.

"உண்மையைக் காணவேண்டும், அதற்கு வழி காட்டும் குருவின் தரிசனம் கிடைக்கவேண்டும் என்று தொலைதூரம் போய் வழி ஒன்றும் காணாமல் திகைத்துக் கொண்டிருந்தார் இத் தவசி. இப்படி இருக்க ஒரு நாள் இரவில் தெற்கே சூரியோதயம் போல் ஒரு ஜோதி கண்ணுக்கு இலக்காயிற்று. வேறொருவர் கண்ணுக்கும் அது காணப்படவில்லை.

'நம் முகத்தைத் தென் திசையை நோக்கித் திருப்பி விட்டது இந்த ஜோதி!' என்று எண்ணமிட்டார் இவர். தாம் செய்த தவமே வெளிப்பட்டு ஜோதி வடிவாகத் தனக்கு வழி காட்ட வந்தது என்று துணிந்தார். ஜோதியைப் பின் தொடர்ந்து நடந்து போனார். தாமிரபருணியின் கரைக்கு வந்து சேர்ந்ததும் ஜோதியைக் காண வில்லை. கூர்ந்து நோக்கினார். 'ஐயோ!' என்று தாபத்துடன் நிற்கும்பொழுது குருகூரில் ஒருபுறம் அந்த ஜோதி அடங்கியதாக உணர்ந்தார்.

செங்கழுநீர்த் துறையில் நீராடினார். அருகே இருந்தவர்களை நோக்கி, 'இங்கே ஏதாவது விசேஷம் உண்டோ?' என்று கேட்டார். எங்கள் அரசனின் குலக் குமரன் வாயும் திறவான்; கண்ணும் திறவான்; தாயை முகம் பாரான்; தந்தையையும் பாரான். எப்பொழுது தவழப்படித்தானோ அன்று முதல் இன்றளவும் ஒரே இருப்பில் ஒழியாது வீற்றிருக்கிறான் என்று பதில் சொன்னார்கள் அவர்கள்.

அந்தத் தவசியின் உள்ளத்தில் அருள் சுரந்து பொங்கியது. அவர் குழந்தை இருந்த புளியமரத்தை நோக்கி நடந்தார்.

ஊசி நுழையாத
உரோமச் சடைமுடியான்

சொன்னதையும் செய்ததையும் மக்கள் ஓடிப்போய்த் தங்கள் அரசருக்குத் தெரிவித்தார்கள்.

மந்திரிமார் முன் கூட்டியே முனிவர் பெருமானைச் சந்தித்து, 'குழந்தை பேசினால் இந்த ராஜ்ஜியமே உமக்குக் கிடைத்து விடும்' என்று சொன்னார்கள். மைந்தன் பேசினால் நாங்கள் உமக்குத் தொண்டு செய்வோம்!' என்றனர் காரியாரும் உடைய நங்கையும். கோயிற்புறமாக ஒரு பெருங் கூட்டம் கூடி விட்டது. தவசி குழந்தைக்கு அருகே சென்றார்.

இச் சோதி யோ என்
இதயம் உருக்கியது?

என்று அதிசயமாய்க் கூறினார். ஜோதியும் மோனமும் ஒன்றாய்க் கலந்து ஒருருவாய்ச் சமைந்தது போல் இருக்கும் இளங்குமரனை நோக்கு.

ஆடிப்பாடினார். அங்குமிங்கும் ஓடி நாடி நாடிப் பார்த்தார். 'நில உலகின் பாக்கியமோ? வானவர் பாக்கியமோ இல்லை. என்பாக்கியம் இது!' என்று அன்பும் இன்பமும் ஒருங்கே பெருகத் தனக்குத் தானே சொல்லிக் கொண்டார்.

தவசியும் அங்கமெலாம் ஆனந்தக் கடலாடியது போல் புதிய அழகு பெற்றுப் பொலிந்தது. முகம் மலர்ந்தது. சுந்தரத் தோள் பூரித்தது.

சென்று ஆடும் தீர்த்தம் எதிர்
வந்து ஆடப் பெற்றதே

என்றார். பித்து ஏறினவர் போல் பூமரத்தில் பூக்களைக் கூடையோடு பறித்தெறிந்தார் அற்புத இளைஞர் மீது

தன்னையே புகழ்ந்து கொண்டார். தன்மீதே பூக்களையும் போட்டுப் பூசனை புரிந்தார். 'பிழைத் தோம்' எனத் தெளிந்தார்.

கரியதிரு மேனிஎங்கே?
கைநான்கில் இரண்டு எங்கே?

என்று கேட்டு, 'அவனோ இவர்?' என்று ஐயுற்றார்.

பிறகு மரத்தையும் குளிர்ந்த தாமிரபருணித் தீர்த் தத்தையும் நோக்கி, 'மரமே! குளிர்புனலே பாதுகாப் பாய் இருங்கள் இப்பாலருக்கு' என்று கட்டளையிட் டார். தாயை நோக்கும் தனிக்கன்றுபோல் நின்றார் பெரியவர், ஞான இளங்கன்றின் முன்.

மெய்யொடுக்கிக் கையொடுக்கி தலைவணங்கித் தாழ்ந்து நின்றார். வாய் புதைத்து இளைஞர் செவி அருகே சென்று ஒரு ஞானப் புதிர் வடிவமான கேள்வி கேட்டார். உடனே திறவாத ஜோதி வாய்திறந்து புதிர் வடிவமாகவே விடையளித்தது அந்த மோன வடிவம். அது கணீரென்று வீரகண்டாமணி முழங்கியது போல் பத்துத் திக்கிலும் ஒலித்தது என்கிறார் தாலாட்டுப் பிரபந்த ஆசிரியர்.

உடனே கூட்டத்திலிருந்து, 'புத்திரனைப் பேசுவித்த புண்ணியனே' என்ற குரல்கள் எழுந்தன. பத்தி பத்தி யாகப் பொன்னும் பொன்னாடைகளும் குவிந்தன. தவசி அவற்றைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. 'அன்பாகக் கொடுத்த பரிசுப் பொருள்களைப் புறக்கணித்ததேன்?' என்று கேட்டார்கள் காரியாரும் பிறரும்.

தவசியே, 'மகவாசை உங்களுக்கு மாற்ற வந்தவர் சாதாரணப்பிள்ளை இல்லை; வேதத் தமிழை விரித் துரைத்து மக்களை உய்விக்க வந்தவர்' என்றார். அவரும் சாதாரணத் தவசி இல்லை; குருவைத் தேடி வந்த அருமைச் சீடரான மதுரகவி.

திருவாய் மலர்ந்தது
தமிழ்மறை பிறந்தது

காரியாரும் உடைய நங்கையும் மதுரகவியைத் தாழ்ந்து வணங்கினார்கள்; 'வாழ்ந்தோம்; குறுங்குடி நம்பி உரைத்ததை நாங்கள் மறந்துவிட்டோம்; தேவரீர் நினைப்பூட்ட நாங்கள் தெளிந்தோம்' என்று ஒருவாறு மனம் தேறினார்கள். அவர்களும் மதுர கவியைப் பின்பற்றி, த்ாங்கள் ''மைந்தன்' என்றுஎண்ணி யிருந்த வடிவத்தை மூன்று தடவை வலம் செய்து முதல்வர்' எனப் போற்றினார்கள்.

பதினாறு ஆண்டுகளாக 'கண்ணுள் மணிபோல் காத் திருந்தோம்; ஐயா! உமக்கே அடைக்கலம் இப்பாலன்!' என்று சாமானியர்கள் போல அவர்கள் மறுபடியும் மதுர கவியை நோக்கிச் சொன்னார்கள். மதுரகவியும் இடைவிடாது பணி செய்து வந்தார் காரிமாறப் பிரானுக்கு.

நம்மாழ்வார் திருப்புளிக்கீழ் இருந்தபடியே பல்வேறு திருப்பதிகளில் கோயில் கொண்டிருக்கும் எம்பெரு மானைத் தரிசித்து முதல் முதல் 'திருவிருத்தம்' என்ற பிர பந்தத்தைப் பாடினார். பிறகு திருவாசிரியத்தைபும் திரு அந்தாதியையும் பாடினார். அப்பால் சாம வேத சார மான திருவாய்மொழியைப் பாடத் தொடங்கினார். அவர் சொன்னதை எல்லாம் மதுரகவி பட்டோலையில் எழுதிவைத்தார்.

மாறன் என்ற நம்மாழ்வார் தாம்வந்த காரியம்முடிந் தது என்று சீடரிடம் விடைகொண்டு பரமபதத்திற்கு

எழுந்தருளச் சித்தமானார். அது கண்ட மதுரகவி என்னையும் அழைத்துக் கொண்டு சென்றால் நாயேன் குறை முடியும்' என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

அப்படியானால் தமிழ் மறையை உலகத்தில் பரப்புவார் வேறு யார் இருக்க முடியும் என்று ஆலோசித்த நம்மாழ்வார்,

மெய்யன்பனை நோக்கி,
"மேதினியில் உள்ளோர்க்குச்
செய்ய மறைத்தமிழைச்
செப்புவதார் நீ அல்லால்'

என்று பதில் சொல்லி அவர் இந்த உலகில் இன்னும் வாழ்ந்து பணி செய்ய வேண்டும் என்றார்.

மறுபடியும் மதுரகவி, "எந்தை பெருமானே இருக்க முடியாது. உம்மையடைந்த நான் இனிப் பிரிந்து தடுமாற மாட்டேன்' என்று ஏங்கிக் கரைந்து உருகி நின்றார். நம்மாழ்வாரோ, நாம் உரைத்த வண்ணமே இங்கு நீர் வாழ வேண்டும். இன்று முதல் நாமும் நீரும் இருவர் அல்லர்; நாம் உம்முடனே நித்தியமாகச் சத்தியமாகப் பொலிந்து நிற்போம்' என்று உறுதி கூறி வற்புறுத்தினார்.

பிறகு மதுரகவியின் சிந்தையில் அமைதி நிலையாகக் குடி கொண்டது. அவர், நம்மாழ்வாரைத் தெய்வமாகவே வழிபடலானார்; குருவின் விக்கிரகத்தை மஞ்சன நீராட்டி மலரால் அர்ச்சித்து, 'இவர் சரணாரவிந்தமே தஞ்சம் அடியேனுக்கு' என்று வாழ்ந்தார். நித்திய பூஜைகளாலும் விழாக்களாலும் ஆழ்வார் வைபவத்தைப் பரப்பியதோடு, திருவாய் மொழியைப் பாடி மக்களைத் திருத்திய வண்ணம் நீண்டகாலம் பல இடங்களிலும் சஞ்சரித்தார்.

கண்ணினுட் சிறுத்தாம்பு என்ற பதிகம் மதுரகவியால் இயற்றப்பட்டது. இதில் குரு பக்தியே தெய்வ

பக்தியாகக் கொண்டாடப்படுகிறது. இப் பதிகம் திவ்ய பிரபந்தத்தில் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறது.

ஆழ்வார்களின் பாடல்கள் எல்லாம் ஸ்ரீ வைஷ்ணவக் கொள்கைகளை வெளியிடுகின்றன எனினும், ஸ்ரீவைஷ்ணவத்தின் உயிர்நிலைப் பாடல்கள் திருவாய்மொழிப் பாசுரங்களே. இதை உள்ளத்தில் கொண்டுதான் ஸ்ரீ வேதாந்த தேசிகர் நம்மாழ்வாரை 'அருமறைகள் தமிழ் செய்தான்' எனக் குறிப்பிடுகிறார்.

நம்மாழ்வாரின் தமிழ்மறை மதுரகவி வாயிலாகத் தான் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

அருமறைகள் தமிழ் செய்தான்
  தாளே கொண்டு
துன்பற்ற மதுரகவி
  தோன்றக் காட்டும்
தொல்வழியே நல்வழிகள்
  துணிவார்கட்கே.

என்பது வேதாந்த தேசிகன் வாக்கு.

நம்மாழ்வாரின் அடிமலரைத் தஞ்சமாகக் கொண்டு அவரது அருமறைத் தமிழால் தம் துன்பத்தைப் போக்கிக் கொண்டாராம் மதுரகவி. அதையே பிறர் துன்பங்களுக்கும் அருமருந்தாகக் காட்டினாராம். இது பழமையான வேதமார்க்கம், இதுவே நல்ல வழி; பின் பற்றத் துணிவு வேண்டும்—என்கிறார் வேதாந்த தேசிகர்.

மதுரகவி யாழ்வார் மூலமாகக் கிடைத்த நம்மாழ்வாரின் உபதேசமே ஸ்ரீ வைஷ்ணவம் என்பது திரண்ட பொருள்.

32128
ANDAVAR ... KOVILOOR

4. வாழ்க்கையும் வாக்கும்

ஆழ்வார் என்றால் நம்மாழ்வார்தாம். இராமன் என்றால் சீதா ராமன் என்பது போல. பரசுராமன், பலராமன் என்றுதான் மற்ற இராமர்களைக் குறிக்க வேண்டும். அப்படியே பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் முதலான பெயர்களைச் சொல்லித்தான் மற்ற ஆழ்வார்களைக் குறிக்க வேண்டும்; பகவத் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவோர் ஆழ்வார்கள் என்றால், பகவத் விஷயத்திலும் குணங்களிலும் அருள்விளையாட்டாகிய— திருவிளையாடல்களிலும் முழுக்க, முழுக்க, ஆழ்ந்து ஈடுபட்டு, அவற்றிற்கு உரிய தத்துவ அடிப்படையையும் அமைத்துக் காட்டுபவர் ஆழ்வார்களுள் தலைவரான நம்மாழ்வாரே.

நம்மாழ்வாருக்கு சடகோபன் என்றும் ஒரு பெயர். தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிவரும் போது, ஞானத்தை அளிப்பது சடம் என்னும் வாயு என்பர். இந்த வாயுவைக் கோபித்துத் துரத்தி அறிவு மயமாகத் திகழ்ந்தவரைச் சடகோபன் என்றார்கள். "உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்' என்று வாழ்ந்த இவரது வாழ்க்கையே வாக்காகி, திருவாய்மொழி என்ற தமிழ் வேதம் ஆகியிருக்கிறது என்பர்.

'அயர்வறமதிநிலம்' அருளப்பெற்ற ஆழ்வார்கள் அறிவுக்கும், கல்வி கேள்விகளால் பெறக்கூடிய அறிவுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உண்டு என்பர். அருளோடு ஒன்றிய அறிவே அறிவு— சுத்த அறிவு. இம்மெய்யறிவு நம்மாழ்வாருக்குப் பரிபூர்ணமாக வாய்த்திருந்தது என்பது ஸ்ரீவைஷ்ணவர்களின் நம்பிக்கை.

இதனால் இவர் கல்வி கேள்விகளில் பயிற்சி இல்லாதவர் என்பதில்லை. ஆழ்வார்கள் எல்லாரும் இராமகிருஷ்ண பரமஹம்ஸரைப்போல் ஓதாது உணர்ந்த உயர் ஞானிகள் மட்டுமல்லர்; கல்வி கேள்விகளிலும் கவிப் புலமையிலும் வல்லவர்களும்கூட. நம்மாழ்வாரோ, செந்தமிழ் நடையில் சங்கத் தமிழில் காணும் அழகும் ஆற்றலும் புலப்படப் பாடியுள்ளார்.

ஆழ்வார் செந்தமிழ்

செந்தமிழ் என்றும் தூய தமிழ் என்றும், சொல்லப் படுவது தனித் தமிழாக — அதாவது பிறமொழிக் கலப் பில்லாத தமிழாக இருக்க வேண்டும் என்பதில்லை அநாவசியமாகப் பிறமொழிச் சொற்களைக் கலப்பது தமிழ்ச் சுவையைக்கெடுத்துவிடக்கூடும் என்பது உண்மை தான். ஆனால், தமிழர்கள் வடமொழியைப் பிறமொழி யாக ஒதுக்கிவிட்டார்கள் என்று கருத இடமில்லை. காலப்போக்கில் வடசொற்கள் அதிக அளவில் தமிழிலே புகுந்து தமிழ்நடையை உருவாக்கி வந்தன. நம்மாழ் வார் பெரும்பாலும் மொழித் தூய்மையைப் பாதுகாத் துள்ளார் என்றே சொல்ல வேண்டும்.

நம்மாழ்வார் வாக்கில் சங்கத் தமிழின் சாயலும் திருவள்ளுவர் முதலான பண்டைப் பெரும் புலவர்களின் அருங் கருத்துக்களும் காணப்படுகின்றன. சங்கப் புலவர் களின் இயற்கைப் பாநலத்தையும், நம்மாழ்வார் வாக்கில் காணலாம். திருமாலிருஞ்சோலை என்ற அழகர் கோயிலைப்பற்றிய பாடல்கள் இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

திருமாலிருஞ்சோலை வருணனைகளிலும் திருக் குடந்தை என்ற கும்பகோணத்தில் கோயில் கொண் டிருக்கும் ஆரா அமுதப் பெருமானின் சூழ்நிலை வருண னைகளிலும், வேறு இடங்களிலும் சங்கப் புலவர்களின் செந்தமிழும் இயற்கைப் பாநலமும் ஒரு சேரப் பரிமளிப் பதைக் காண்கிறோம்.

நம்மாழ்வாரின் வாக்கிலே இயற்கைப் பொருள்களில் இறைவனைக் காணும் சிறப்பியல்பையும் நாம் காண்கிறோம். இயற்கையில் வெறும் இயற்கை அழகைத் தான் வேட்ஸ் வொர்த் முதலிய ஆங்கிலப் புலவர்கள் கண்டு காட்டுகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் அழகுத் தெய்வத்தைக் காண்பதில்லை. ஆனால் செந்தமிழ்ப் பெரியோர்களான நம்மாழ்வார் அப்பர் முதலானவர்கள் இயற்கையழகுகளிலும் தெய்வ அழகு ததும்பி நிற்பதைக் கண்டு காட்டுகிறார்கள். அப்பர் திருநாவுக்கரசர் என்றால், நம்மாழ்வார் திருநாவீறு உடையபிரான் என்று போற்றப் படுகிறார்

நம்மாழ்வாரும் அகப்பொருளும்

அகப் பொருள் ஆகிய காதல்துறையைச் சங்கப் புலவர்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். காதலும் வீரமும் சங்ககாலத்துப் பண்பாட்டை வளர்த்து விட்டிருக்கின்றன என்பது வெளிப்படை. நம்மாழ்வார் வாக்கிலே வீரம் ஞான வீரமாகிறது; காதல் பக்திக் காதலாகப் பரிணமித்திருக்கிறது.

நம்மாழ்வாரின் அகத்துறைப் பாடல்களைக் கூர்ந்து படித்தால், அப்பாடல்களைப் பாடியவர் அனுபவ அறிவும் கல்விப் பயிற்சியும் நிறைந்த பெரும் புலவர் என்பது இனிது புலனாகும். தம்மைத் தலைவியாகக் கொண்டு தலைவனாகிய புருஷோத்தமனிடம் நாரையைத் தூது அனுப்புவதாகவும் அன்னத்தையும் குருகையும் பூவையையும் தூது அனுப்புவதாகவும் பாடல்கள் பாடியிருக்கிறார்.

'காடும் செடியும் வளாகத் தோன்றும் என் கண்களுக்கே!' என்று ஒரு புலவர் பாடியதாக வரும் செய்யுளடியில் காதலியின் உருவத்தைதயே இவ் வகைப் பொருளிலும் காதலன் கண்டதாகக் கூறப்படுகிறது. இது காதலின் அதீத நிலை. பக்திக் காதலில் பரமனை எங்கும்

காணும் நிலையும் சாராம்சத்தில் இதுதான் என்று உய்த்துணருமாறும் வெளிப்படையாகவும் நம்மாழ்வார் பாடியுள்ளார்.

சந்திரனைக் கண்டாலும், மலையைக் கண்டாலும் மழை பெய்வதைக் கண்டாலும் எல்லாம் புருஷோத்த மனை இவருக்கு நினைவூட்டுகின்றன என்பது மட்டு மில்லை; எல்லாம் புருஷோத்தமனாகவே காட்சியளிக் கின்றன. இப்படியெல்லாம் மையல்கள் செய்கிறான் மாயன் என்கிறார்.

இவர் அகத்துறையை மிக உருக்கமாகச் செந்தமிழ் நடையில் எடுத்தாளுவதைக் காண்கிறோம். தேடிக் காணாத தவிர்ப்பிற்குக் காரணமாகிய காதலன், காதலியை நாடித் தானே வந்துவிடுகிறான். வாய் திறந்து பேசவில்லை முதல் முதல். ஆனால் கண்களும் முகமும் பேசாத பேச்சாகப் பேசி விடுகின்றன இடையே இசை.

இவ்வளவு வசிகரமாக வரும் செய்யுட் பகுதியைக் கூர்ந்து நோக்குவோம்:

தூதுசெய் கண்கள்கொண்டு ஒன்று பேசி,
  தூமொழி இசைகள் கொண்டு ஒன்று நோக்கி,
பேதுறு முகம்செய்து நொந்து நொந்து
  பேதை நெஞ்சு அற அறப் பாடும் பாட்டை
யாதும் ஒன்று அறிகிலம், அம்ம அம்ம!
  மாலையும் வந்தது, மாயன் வாரான்!

இதில் நாடக பாணியில் ஒரு காதற்காட்சியைக் காண்கிறோம். திடீரெனக் காதலன் தரிசனம், ஓர் இருட்டறையில் விளக்கு வந்து விட்டது போலே. தூது ஒன்றும் முன் கூட்டி அனுப்பாமல் வந்துவிட்ட காதலனின் கண்களே தூது பேசுகின்றனவாம். வசனத் தால் பேசமுடியாததைக் கண்களால் பேசுவது போல் இசைகளாலும் பேசிவிடலாம் என்பர்.

இங்கே பார்க்க வேண்டிய கண்கள் பேசுகின்றன; இசைகள் நோக்குகின்றன—தொழில்களில் தடுமாற்றம்! இசையைப்போல் இதயம் புகுந்து எந்த மூலையிலாவது கள்ளம் கவடு பதுங்கி இருக்கிறதா? என்று பார்க்கும் சக்தி வேறு எதற்குத்தான் உண்டு.

காதலனின் முகம் வாய்திறந்து பேசாவிட்டாலும், அகத்தை அப்படியே பளிங்கில் வைத்துக் காட்டுவது போல் காட்டி விடுகிறதாம் காதலிக்கு. அவள் அப்படி நினைக்கிறாள். 'நான் உன் மேல் எவ்வளவு பயித்திய மாய் இருக்கிறேன்! நீயே பார்த்துக்கொள்' என்பது அந்த முகத்தின் மோனப் பிரசங்கத்தில் ஒரு பகுதி.

'நொந்து நொந்து'—என்ன நோவு! எவ்வளவோ காலமாகத் தவிக்கிற தவிப்பையும் துடிக்கிற துடிப்பை யும் காட்டும் நோவு புலப்படுகிறது முகத்திலே; காதலி யைப் பிரிந்து இருப்பதால் மனம் நைந்து நொந்துபோய் இருக்கிறதாம்.

ஆ, அந்த இசைபாட்டுத்தான் என்ன பாடு படுத்து கிறது காதலியை! பேதை நெஞ்சு 'அற அறப்பாடும் பாட்டு' அது என்கிறாள். நெஞ்சை ரம்பம்போட்டு அறுப்பதுபோல் அறுக்கிறதாம் இசைப் பாட்டு' 'என் பேதை நெஞ்சுக்கு அவ்வளவும் வேணும்!' என்று காதலி தன் நெஞ்சைக் கடிந்துகொள்ளுகிறாள்.

தலைவன் விரைவில் மறுபடியும் வருவான் என்பது தலைவியின் முழு நம்பிக்கை. இல்லாவிட்டால். அப்படி நெஞ்சைத் திறந்து காட்டியிருப்பானா? இசை பாடுகிற வன் நெஞ்சையும் திறந்து காட்டுகிறது. கேட்பவர் மனக் கதவையும் திறந்து பார்த்து விடுகிறது. காதலாகிக் கசிந்து கண்ணீர் துளிக்கப் பாடும் இசைப்பாட்டில் விளை யும் அற்புதம் இது.

நம்மாழ்வாராகிய தலைவி (வகுள பூஷண நாயகி) புருஷோத்தமனாகிய நாயகனைத் தரிசித்துப் பாடும் பாட்டு இது.

மாலையும் வந்தது;
 மாயன் வாரான்

என்று முடிகிறது இக்கவிதை. அந்த இசைப் பாட்டின் பொருளை அப்பொழுது அறிந்து கொண்டது போலத் தான் தோன்றியது. இப்பொழுதோ, 'பாடும் பாட்டை யாதும் ஒன்று அறிகிலம், அம்ம அம்ம!' என்கிறாள் தலைவி. மாலையும் வந்தது மாயன் வாரான்! என்று கூறிப் பெருமூச்சு விடுகிறாள்.

'அவா அறுத்து வீடுபெற்ற குருகூர் சடகோபன் என்று ஸ்ரீவைஷ்ணவ உலகம் ஒரு முகமாய்ப் போற்றும் நம்மாழ்வாரின் அகத்துறைக் கூற்று இது. எவ்வளவு உலக அனுபவம் முதிர்ந்து பொதிந்து கிடக்கிறது இந்த வாக்கிலே பாருங்கள்.

சுடர்மிகும் ஞானம்

தம்மைச் 'சுடர்மிகும் அறிவு'டன் படைத்துப் புழுதி யில் எறிந்த வீணைபோல் ஆக்கிவிட்டாள் உலக அன்னை என்கிறார் பாரதியார். நம்மாழ்வாரின் ஞானத்தை சுடர்மிகும் ஞானம் என்று குறிப்பிடலாம். இறையருள் இத்தகைய ஞானியைப் படைத்துச் சிந்தனைச்சுடர்கள் மயமாக இருக்கும் பாடல்களை உலக நன்மைக்காகப் பாடுமாறு செய்திருக்கிறது.

உதாரணமாகத் திரு விருத்தத்தில் ஒரு பாட்டைப் பார்க்கலாம். பரம பதத் திரு நாட்டில் நித்திய சூரிகள் பரம பதநாதனை நீராட்டுகிறார்களாம். பிறகு தூப தீபங்கள் காட்டுகிறார்கள். தூபம் கட்டும்போது புகை யினால் திருமுக மண்டலம் மறைந்துவிடுகிறதாம். பிறகு

தீபம் காட்டும் போது திருமுக மண்டலம் காட்சியளிக்கிறது. இந்தத் தூப தீபங்களின் இடையில் மறைந்த பரமபதநாதன் எங்கே போய்விட்டான்?

விண்ணிலிருந்தும் நழுவி மண்ணுலகின் ஒருமூலையில் வந்து கண்ணனாய்ப் பிறந்து, வளர்ந்து அவதார காரியங்களையெல்லாம் முடித்துக் கொண்டு விண்ணகத்தில் தீபாராதனை ஆகும்போது திருமுக மண்டலம் காட்டச் சித்தமாக இருக்கிறானாம் பரமபதநாதன்.

அவதார காரியங்களில் பாரதப்போர் முடிந்தது; பகவத் கீதையை உபதேசித்தது, முதலியவற்றைக் குறிப்பிடாமல், வெண்ணெய் திருடியதையும், முரட்டுக்காளை மாடுகளின் கொம்புகளுக்கிடையே கூத்தாடி அவற்றை அடக்கி அச்செயலுக்குப் பரிசாக ஆய மங்கையை மாயன் மணந்ததையும் குறிப்பிடுகிறார் நம்மாழ்வார்.

சூட்டுனன் மாலைகள் தூயன
ஏந்தி விண்ணோர்கள் நன்னீர்
ஆட்டி அம்தூபம் தராநிற்கவே
அங்குஓர் மாயையினால்
ஈட்டிய வெண்ணெய் தொடு உண்ணப்
போந்து, இமிலேற்று வன்கூன்
கோட்டிடை ஆடினை கூத்து
ஆடல்ஆயர்தர் கொம்பினுக்கே.

கண்ணனுடைய பால லீலைகள் பகவத் கீதையைக் காட்டிலும் ஆழ்வார்களின் பக்தி நெறியில் முக்கியமான இடம்பெற்றிருக்கின்றன. ஜெகன்மோகன பால கோபாலன் கீதாசாரியனைக் காட்டிலும் பிரேம பக்திக்கு அன்பை அடிப்படையாகக் கொண்ட பக்திக்குக் குறிக்கோளாகத் திகழ்கிறான்.

கண்ணனது 'திவ்விய சேஷ்டிதங்கள்' என்று பால லீலைகளை ஸ்ரீவைஷ்ணவ ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். 'என்னை உன்செய்கை நைவிக்கும்' என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடி கண்ணனுடைய சரிதை எதுவும் புனிதமாகவே மதிக்கத்தக்கது என்பர். இந்த லீலைகளிலும் பொதுவாகப் பகவத் விஷயத்திலும் ஏற்பட்ட ஆழ்ந்த அனுபவமும் அதை வெளியிடும் சுடர்மிகு ஞானமும் இந்த ஆழ்வாரின் தனிச் சிறப்பு.

பரம புருஷனை உள்ளபடியே ஆழ்வார் தாம் தம்முடைய திருவுள்ளத்தாலே அனுபவித்து,.... அவனை அனுபவித்தபடியே பேசுகிறார்' என்பது திருக்குருகைப் பிரான் பிள்ளானின் வாக்கு. இது திருவாய்மொழியைக் குறிப்பது. இது போல் ஏனைய மூன்று பிரபந்தங்களான திரு விருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ஆகியவற்றிலும், நம்மாழ்வார் புருஷோத்தமனை அனுபவித்தபடியே பேசுவதாய்க் கருதுவர்.

அருளிச் செயலைப்பற்றிய சில செய்திகள்

நான்கு பிரபந்தங்களிலும் மொத்தம் பாசுரங்கள் 1296. திருவாய்மொழி ஆயிரம் என்று சொல்லப்பட்டாலும் உண்மையில் 1102 பாசுரங்களை உடையது. இதை 'த்ரமிடோ பநிஷத்' என்பர். 'த்ரமிடம்' என்ற சொல் திராவிடத்திற்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறது. தமிழ் என்ற சொல்லே திராவிடம் ஆகியிருக்க வேண்டும் என்று ஊகிப்பது தவறாகாது.

ஆழ்வார் தம் பிரபந்தங்களிலே கையாண்ட முறையைச் சுருக்கமாகக் கூறும்போது ஒரு நண்பர் 'ஞானத்தில் தன் பேச்சு, பிரேமத்தில் (மிகுதியான அன்பில்) பெண் பேச்சு' என்றார், ஞானம் பிரேமையில் முதிர்ந்து பேசும் போது பெண் உடை உடுத்துத் தாயின் பேச்சும் தோழியின் பேச்சும் தலைவியின் பேச்சுமாகப் பேசுகிறது. இப்பாசுரங்களிலே. உள்ளத்திற்கும் வாக்குக்கும் எட்

டாத அனுபவங்களை வேறு எப்படித்தான் வெளியிடுவது?

நம்மாழ்வாரால் பாடப்பெற்ற நவ திருப்பதிகள் என்ற ஒன்பது தலங்கள் உண்டு. அதில் ஒன்று சீடரான மதுரகவி யாழ்வாரின் ஊர், இவ்வூர் பெருமாள்மீது உருக்கமான பத்துப் பாசுரங்கள் நம்மாழ்வார் பாடியிருக்கிறார். இவற்றில் ஒன்று தாயின் பேச்சாக அமைந்திருக்கிறது.

தலைவி தாயைவிட்டுப் பிரிந்து, காதலனைத் தேடிச் செல்லுகிறாள். இடைமேல் கையை வைத்து நொந்து கசிந்த நெஞ்சினளாய்க் கண்ணீர் துளும்பச் சொல்லுகிறாளாம் காதலி, காதலன் யார்?

ஒசிந்த நுண் இடைமேல் கையை
வைத்து நொந்து நொந்து
கசிந்த நெஞ்சினளாய் கண்ணநீர்
துளும்பச் செல்லும் கொல்?
ஒசிந்த ஒண்மலராள் கொழுநன்
திருக்கோளூர்க்கே
கசிந்த நெஞ்சினளாய், எம்மை
நீத்த எம் காரிகையே

என்பது நம்மாழ்வார் வாக்கு.

திருக்கோளூர் திருமால்மீது தமக்கு ஏற்பட்ட பக்திக் காதலைத்தான் இப்படி வெளியிடுகிறார். தென் திருப்பேரையும் நவதிருப்பதிகளில் ஒன்று. இப்பெருமாள் மீதும் காதல் துறையில் பக்தி செலுத்துகிறார் நம்மாழ்வார்.

சோர்வன் சென்று—என்னுடைத் தோழியீர்காள்!
அன்னையர்காள்! என்னைத்தேற்ற வேண்டா;
நீர்கள் உரைக்கின்றது என்குதற்கு?
நெஞ்சும் நினைவும் எனக்கு இங்கு இல்லை;

கார்வண்ணன், கார்க்கடல் ஞாலம் உண்ட
கண்ணபிரான் வந்து வீற்றிருந்த
ஏர்வள ஒண் கழனிப் பழனத்
தென் திருப் பேரெயில் மாநகரே.

தாய்மாரும் தோழிமாரும் தலைவியைத் தடுக்கிறார்களாம் காதலனிடம் போக வேண்டாம் என்று. நீங்கள் என்னைத் தடுத்து நிறுத்தி ஆறுதல் கூறவேண்டாம் என்கிறாள் தலைவி. அவர்கள் சொல்லும் ஆறுதல் தேறுதல் எல்லாம் என் நிலையில் எப்படிப் பயன்படும்? என் நெஞ்சும் நினைவும் இங்கு இல்லை. காதலுடன் போய் விட்டன. உடம்புதான் பின் தங்கிவிட்டது. என்கிறாள். *திருப்பேரைக் குழைக்காதர் மீது ஆழ்வார் பக்திக் காதல் செலுத்தும் பாணி இது.

ஆழ்வார் திருநகரிக்கு அருகில் உள்ள நவ திருப்பதிகளையும் நம்மாழ்வார் பாடியிருப்பதோடு வேறு 27 திருப்பதிகளையும் பாடியிருக்கிறார். மொத்தம் 108 திருப்பதிகள்: மூன்றில் ஒரு பங்கான 36 இவர் பாடியுள்ள திருப்பதிகள். திருப்பதிகளைப் பாடாத வேறு பாசுரங்களும் உண்டு.

ஸ்ரீவைஷ்ணவத் துறவிகள் மூன்று கோல்களை ஒன்றாகக் கட்டிக் கையில் ஏந்தி இருப்பார்கள். முக்கோல் பகவரை (பாகவதர்களை) சென்ற காலம் தொட்டுத் தமிழர்கள் அறிந்திருக்கிறார்கள். வைணவத்தின் தொன்மைக்கு முக்கோல் ஒரு சாட்சி. இம்முக்கோலின் பொருள் என்ன?

---

* திருப்பேரெயில் என்பது ஊரின் பெயர். பெரிய கோட்டை சூழ்ந்தது என்பது பெயரின் பொருள். திருப்பேரெயில் என்பது சுருங்கித் திருப்பேரை ஆகியிருக்கிறது—புதுச்சேரி புதுவை ஆனதுபோல, நாகப்பட்டினம் நாகை ஆனது போல. தென்திருப்பேரை என்பதால் வடக்கே ஒரு திருப்பேரை உண்டு என்பது

சித்து, அசித்து, ஈசுவரன் எனத் தத்துவம் மூன்று என்பது ஸ்ரீவைஷ்ணவக் கொள்கை. இதற்கு அடையாளம் முக்கோல் என்பர். இம்மூவகைத் தத்துவம் நம்மாழ்வாரால் பிரஸ்தாபிக்கப்படுகிறது. இத்தத்துவத்தின் முடிவுகண்ட நம்மாழ்வார் போதிக்கும் நெறியை பிரபத்தி என்பர்.

இறைவனே நமக்குத் தஞ்சம் என்று திடமாகச்சிந்தித்துச் சரணாகதி செய்வதே பிரபத்திநெறி. மற்றொன்றில்லை. சுருங்கச் சொன்னோம். 'மாநிலத்து எவ்வுயிர்க்கும், சிற்ற வேண்டா, சிந்திப்பே அமையும் கண்டீர்' என்பது திருவாய் மொழி. பிரபத்தி நெறியின் பழக்கம். சிந்தனை வடிவான ஒரு பெருந்துணிவு. எல்லாப் பாரங்களையும் இறைவனிடம் ஒப்பித்து அவன் திருவடி நிழலில் வாழ்வதே பிரபத்தி ஒழுக்கம். திருவாய் மொழியை பிரபத்தி சாஸ்திரம் என்பர்.

பிரபத்தியில் ஊன்றி நிற்பவர்கள் பிரபத்தர்கள். ஸ்ரீ வைஷ்ணவர்களை பிரபந்த குலத்தினர் என்பர். இந் நெறியில் நெறி வேறு: குறி வேறு என்பதில்லை: நெறியும் குறியும் ஒன்றே. இதைத் "தீதில் நன்னெறி என்றும், பிரபத்தரை நன்நெஞ்சர் என்றும் கூறுவதுண்டு.

நன்நெஞ்சே! நம்பெருமான்
நமக்கருள்தான் செய்வானே

என்பது நம்மாழ்வாரின் அருள்வாக்கு—இவர் உலகிற்குக் கூறும் நற்செய்தி.

பிரபத்திக்கு தேச கால நியமம் இல்லை; சாதி குலம் என்ற வரையறைகளும் இல்லை. அவனுடைய நினைவே அவனை அடைவதற்கு உபாயம். இக்கொள்கை தமிழகத்தில் சங்ககாலத்திலேயே பரவியிருந்தது என்று பரிபாடலிலிருந்து தெரியவருகிறது.

ஊகிக்கப்படும். இது சோழ நாட்டில் உள்ளது என்றும் ஊகிக்கலாம்.

இந்நெறியை உரைத்த பெருந்தமிழர்கள் அத்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்கள். இவர்களின் தலைவர்—இவர்களுள் மிகச் சிறந்தவர் நம்மாழ்வார். இவரே ஸ்ரீ வைஷ்ணவ சமயத் தலைவர். இவரைப் 'பிரபந்த ஜன கூடஸ்தர்' என ஸ்ரீவைஷ்ணவர்கள் போற்றி வருகிறார்கள். கூடஸ்தர் என்றால் குலபதி.

அருளிச்செயல் என்ற பெயரின் பொருள் என்ன? அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்' என்ற வாக்கிலிருந்து இறைவன் திருவருளால் உதித்தவை அருளிச்செயல் எனலாம். அன்புருவாகிய அழகனை நன்கு அனுபவித்த நிலையில் அனுபவம் உள்ளடங்காமல் பெருக்கெடுத்து வழிந்த ஈரத் தமிழே அருளிச்செயல்கள்.

அருளிச்செயல்கள் உலகம் எல்லாம் உய்யத் தோன் றின எனினும் சிறப்பாகத் தமிழ் உலகுக்கு உரியன. தமிழர்களாய்ப் பிறந்த எவரும் நன்றியும் வணக்கமும் செலுத்தி நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களின் அருளிச் செயல்களைக் கற்க வேண்டும். இவை தமிழர்களின் செவிக்கு இனிய செஞ்சொற்களால் ஆனவை. வெண் சொல்லும் புதை பொருளும் உடையவை. அருளிச் செயல்களின் தொகுதியே நாலாயிர திவ்வியப்பிரபந்தம்.

ஸ்ரீவைஷ்ண சமயத்திற்கு இலக்கியச் சுவையும் இசைச் சுவையும் வாய்ந்த அருளிச்செயல்கள் பக்திக் களஞ்சிய மாகும். இவற்றில் திருவாய்மொழி உயர்வற உயர்ந்த ஞான பக்திக் களஞ்சியம்., சிறப்பாகத் திருவாய்மொழிக் கும் பொதுவாக அருளிச்செயல்களுக்கும் வியாக்கியானங் கள் மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டுள்ளன. இவ் வியாக்கியானங்களில் மிகவும் போற்றப்படுவது நம்மாழ் வாரின் அருளிச்செயலுக்கு அமைந்துள்ள பேருரையாகிய ஈடுமுப்பத்தாயிரம்.

நம்மாழ்வாரின் இதயம்

நம்மாழ்வாரை ஆசாரியன் என்றும் பரமாசாரியன் என்றும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒரு முகமாக மதிக்கிறார்கள் இவருடைய இதயத்தைப் புலப்படுத்துவது—கண்ணாடி யில் காட்டுவது போல் பிரதிபலிக்கச் செய்து காட்டுவது ஆசார்யஹ்ருதயம்' என்னும் அருமந்த ஞானநூல்.

'தொண்டே செய்து என்றும் தொழுது வழி ஒழுகப் பண்டே பரமன் பணித்த பணிவகையே' என்ற திருவாய் மொழிக்கு இணங்க இறைவனைத் தொழுது தொண்டு புரிவதே ஸ்ரீ வைஷ்ணவர் வாழும் முறையாகும். அவனுக்குத் தொண்டு என்றால் அவனுக்கு உடம்பாகி யிருக்கும் உலகுக்குத் தொண்டு.

ஸ்ரீ வைஷ்ணவ குலம் "ஏக சந்தானம்' என்பர். ஸ்ரீவைஷ்ணவர்கள் ஜாதிகர்வம், ஐசுவரிய கர்வம், வித்யா கர்வம் என்ற முக்குறும்பு அறுத்து ஒரு குடும்பமாக வாழ வேண்டும் என்பது இதன் பொருள். எக்குலத்தினரா யினும் பாகவதர்களைத் தாழ நினைப்பது பெருங்குற்றம் அதிலும் அவர்கள் சாதியைத் துலக்குவது இறைவனால் பொறுக்க முடியாத கொடிய குற்றம் ஆகும்.

ஜீவகாருண்யம் ஸ்ரீ வைஷ்ணவத்தின் உயிர் நிலைக் கொள்கை. பொறுமையையும் இச்சமயம் வற்புறுத்து கிறது. 'குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும் (பொறு மையும்) கிருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரச்மிருதி யும் (நன்றியறிவும்) நடக்கவேணும் என்பர் பிள்ளை லோகாசாரியர். பிறர் குற்றத்தையும் தன் குற்றமாக நினைப்பவரே ஸ்ரீவைஷ்ணவ லட்சணம் என்பர் பெரியவாச்சான் பிள்ளை,

இத்தகைய உயிர்நிலைக் கொள்கைகளை எல்லாம் நம்மாழ்வார் வாக்கின் வாயிலாகத் தெரிந்து கொண்டார் கள் ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்கள், எத்தகைய மகாத்மா வாக வாழ்ந்திருக்க வேண்டும் நம்மாழ்வார் என்பதை இவர் வாக்கிலிருந்துதான் நாம் ஊகிக்க வேண்டியிருக் கிறது அந்த வாழ்க்கையை மறைத்துவிட்டன, இவரைச் சுற்றி வளர்ந்தும் படர்ந்தும் இருக்கும் கதை களும் கற்பனைகளும்.

5. மாணிக்கவாசகர்

திருவாதவூரர் என்ற மாணிக்கவாசகர் இளம்பருவத் திலே, அரசியல் நூல்கள் முதலிய உலகியல் நூல்களை யும் சமய நூல்களையும் கற்றுத் தேர்ந்தவர் என்றும், பாண்டிய மன்னருக்கு அமைச்சராவதற்கு முன் தம் பதவிக்கு உரிய பயிற்சி அளிக்கும் கல்வி பயின்றிருந்தார் என்றும் ஊகிக்கலாம். இத்தகைய பயிற்சியையும் அறிவின் மாண்பையும் உணர்ந்துதான் பாண்டியன் இவரை அழைத்து அரசியல் நடத்த அமைச்சருள் தலைவராக்கினான் என்று கருதுவது பொருந்தும்.

நம்பி திருவிளையாடல், திருவாதவூரடிகள் புராணம்- திருப்பெருந்துறைப் புராணம், முதலிய வற்றில் மாணிக்கவாசகரின் சரித்திரம் கூறப்படுகிறது. ஆனால் திருவாசகத்தின் அகச் சான்றுகளோடு கதைகள் முரண்படுவதைக் காண்கிறோம். புராண வரலாறுகள் ஒன்றோடு மற்றொன்று சிற்சில இடங்களில் மாறுபட்டும் காண்கின்றன.

கால ஆராய்ச்சியும் பிறவும்

மணிவாசகர் காலம் முதலிய வரலாற்றுச் செய்தி களைப் பற்றித் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறுவ தற்கில்லை. இத்துறையில் ஆராய்ச்சி இன்னும் தொடர்ந்து நடைபெற வேண்டியதிருக்கிறது. எனினும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவர் வாழ்ந்தார் என்று ஆராய்ச்சியாளர் முடிவுகட்டி யிருப்பது சரி என்றே தோன்றுகிறது.

புராணச் செய்திகளில் புராண மனோபாவம் செவி வழிச் செய்திகளை ஒருவகை மெருகு கொடுத்துக் கையாண்டிருக்கிறது. இக்கதைகளில், மூடுபனிக்குள் பார்ப்பது போலத்தான் மணிவாசகப் பெருமானைப் பார்க்க முடிகிறது. அப்படிப் பார்க்கும்போது, தென்னகத்தில் பௌத்த சமண சமயங்களோடு, வைதிக சைவம் போராடி வெற்றிபெற்றதற்குக் காரணமான சிவநேசச் செல்வர்களின் பரம்பரையில் மாணிக்கவாசகரும் ஒருவர் எனத் துணியலாம்.

புறச் சமய ஆதிக்கத்தை அறவே ஒழித்த சிவநேசர்களின் நீண்ட வரிசையில் மாணிக்கவாசகரைக் காலத்தால் முதல்வர் என்கிறார் திருவாசகத்தின் ஆங்கில ஆக்கத்தை உருவாக்கிய ரெவ ஜி.யூ.போப்.உண்மையில் அந்தப் பரம்பரையிலே இவர் இறுதியாகத் தோன்றி அந்த வெற்றியைப் பூர்த்தி செய்தவர்.

தென்னிந்தியாவில் பௌத்த சமயத்தின் செல்வாக்கு அழிந்து கொண்டிருந்த காலத்தில் இவர் வாழ்ந்திருக்க வேண்டும் என்று முடிவு கட்டுகிறார். **போப் ஐயர்** என்று தமிழர்களால் கௌரவிக்கப் பெற்ற ஜி.யு. போப்துரை. கி. பி, ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டை மணிவாசகர் காலம் என்கிறார் இவர். போப் திருவாசகத்தை மொழி பெயர்த்த காலம் கி.பி. 1900. சென்ற எழுபது ஆண்டுகளில் ஆராய்ச்சி வளர்ச்சியுற்று அடிகள் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று வரையறுத்திருக்கிறது.

சிவநேசச் செல்வர்களின் தலைமைப் பதவியைச் சைவசமயம் மணிவாசகருக்கு அளிக்கவில்லை; திருஞானசம்பந்தருக்கே அளித்திருக்கிறது. இவர் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர், இதற்கும் முன்பே பௌத்த சமயம் தன் செல்வாக்கை முற்றும் இழந்து விட்டது.

இலங்கையையே புகலிடமாகக் கொண்டிருந்தது. இலங்கையிலிருந்து வந்த பௌத்தர்களைத்தான் மாணிக்கவாசகர் வாதில் வென்றதாகத் தெரிகிறது.

வாதவூரர் புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றில் கிடைக்கும் மணிவாசகர் சரித்திரத்தைக் காட்டிலும் இவர் கவிகளிலிருந்துகிடைக்கும் வரலாற்று துணுக்குகளே முக்கியமானவை என்று டாக்டர் போப் முதலானவர்கள் கூறுவதைப் பொதுவாக ஒப்புக்கொள்ளலாம். ஆனால் தற்சரிதக் குறிப்புக்கள் இவர்களுடைய நூல்களான திருவாசகத்திலும் திருக்கோவையாரிலும் அதிக அளவில் காணப்படவில்லை. ஆத்ம சரித்திரத்தை ஊதித்துக் கொள்ளக்கூடிய நிகழ்ச்சிகளே இந்நூல்களில் அங்குமிங்கும் காணப்படுகின்றன.

வைகை ஆற்றங்கரையில், மதுரைக்கு அருகே உள்ளது திருவாதவூர். இவரது இயற்பெயர் மறக்கப் பட்டு, திருவாதவூரைச் சேர்ந்தவர் இவர் என்பதை நினைப்பூட்டும் **திருவாதவூரர்** என்ற பெயரே இயற் பெயரின் ஸ்தானத்தை வகிக்கிறது. இவர் அமாத்தியப் பிராமண வகுப்பினர். இவ்வகுப்பிலிருந்து அமாத்தியர் அல்லது அமைச்சர்களை அரசர்கள் தேர்ந்தெடுத் தார்கள் என்று ஊகிக்கலாம்.

படிப்பையும் பண்பாட்டையும் குலதனமாகப் பெற்றிருந்த இவர் இளமையிலேயே சுடர்மிகும் அறி வுடன் விளங்கினார் என்பதையும், அக்காலத்துக் கல்வி முறையில் கற்கவேண்டியதை எல்லாம் 16 வயதிற்குள் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் கற்று முடித்து விட்டார் என்பதையும் நம்பலாம்.

இவரது கல்வி மாட்சியையும் மதிநலத்தையும் கேள் விப் பட்ட பாண்டியன் இந்த இளைஞரை வரவழைத் தான். இவரது தோற்றப் பொலிவும் வசீகரமாய் இருந் தது **தென்னவன் பிரமராயன்** (பாண்டியனின் பிராமண

அரசன் என்ற பட்டப் பெயருடன் இவரைத் தன் முதல் மந்திரியாக நியமித்தான்.

நாளடைவில் சமய உணர்வு மேலிட்டு இவரைத் துறவி யாக்கியது. வாதவூரர் வாதவூரடிகள் ஆனார். குருவைத்தேடினார். ஆரிய பூமியிலிருந்து கப்பலில் வந்து இறங்கிய குதிரைகளைப் பார்வையிட்டு, தேர்ந்தெடுத்து விலைக்கு வாங்கி வரும்படி அரசன் இவரை அனுப்பி வைத்தான். ஆரிய பூமி என்று கதையில் வருவது அரேபியாவாக இருக்கலாம் என்று ஊகிக்கிறார் டாக்டர் போப்.

குதிரைகள் வாங்குவதற்கு ஏராளமான பொருளைப் பாண்டியன் கொடுத்தாகவும், மணிவாசகர் திருப்பெருந்துறைக்குக் குதிரை வாங்கச் சென்றதாகவும், அப்பொருளைச் சிவனடியார்களுக்கு உபயோகித்து விட்டதாகவும் கதை. முடிவு ராஜ தண்டனையால் சிறைபுகுதல், சிவனருளால் அற்புதம் நிகழ்ந்து விடுதலை! கடைசியாகச் சிதம்பரத்தில்—இவர் சிறப்பாகப் போற்றும் தில்லை மூதூரில் முக்தியாகிய விடுதலை.

வேறு ஆராய்ச்சிக் குறிப்புகள்

இவர் அருளிய இருநூல்களான திருவாசகமும் திருக்கோவையாரும் சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் எட்டயவது திருமுறையாக அமைந்துள்ளன. திருவாசகம் மட்டும் எட்டாவது திருமுறை என்ற கொள்கையினரும் உண்டு. இக்காலத்தில் 'திருக்கோவையார், மாணிக்கவாசகரின் வாக்குத்தானா?' என்று ஐயுற்றுக் கேட்பவர்களும் உண்டு. காலம் சென்ற இரசிகமணி டி. கே. சி, திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் திருக்கோவையாரைப் பாடியிருக்க முடியாது என்று கூறக் கேட்டிருக்கிறேன்.

திருக்கோவையார் அகப்பொருளின் துறைகளோடு, அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாய் அமைந்தி

ருக்கிறது. 'இந்தச் செயற்கை நடை எங்கே?' திருவாசகத்தின் அன்பிலே ஊறிய அமுதத்தமிழ் நடை எங்கே?' என்று இரசிகமணி கேட்டதுண்டு. இதைக் கொண்டு திருக்கோவையார் மணிவாசகரின் திருவாக்கு அன்று என்று முடிவு கட்டுவது சரியன்று.

திருக்கோவையாரின் முழுப் பெயர் திருச்சிற்றம்பலக் கோவையார் என்பது. 400 பாடல்களால் அமைந்திருக்கும் இந்நூல், 'காமநன்னூலாகத் தோற்றமளித்தாலும், வேதாகமசாரமான சைவ சமய சாரத்தை வெளியிடுவதென்றே நம் முன்னோர் கருதி வந்திருக்கின்றனர். நூல் முழுவதும் கட்டளைக் கலித்துறையால் அமைந்த அகப்பொருள்-துறைகளாயிருப்பதால் இக்காலத்து இரசிகர்கள் திருவாசகத்தைப் போல் இந்நூலை மதிப்பது அரிதுதான். எனினும் வழி வழி வந்த கொள்கையைப் புரட்சிகரமாக மாற்றிக் கொள்வதற்குத் தக்க சான்றுகள் வேண்டும் அல்லவா?

அகப் பொருள் இலக்கணம், அகப் பொருளின் வளர்ச்சியையே கட்டுப்படுத்தும் உருக்குச் சட்டையாகி விட்ட பரிதாப நிலையைத்தான் கோவைப் பிரபந்தங்களில் காண்கிறோம். திருக்கோவையாரும் இந்த விதிக்கு விலக்கன்று. திருவாசகமோ கட்டளைக் கலித்துறையோடு வேறு பலவகைப் பாட்டுகளால் அமைந்த அபூர்வ எளிமையும் தெளிவும் வாய்ந்த-தற்காலத் தமிழை ஒத்த செந்தமிழ் நடையில் அமைந்திருக்கிறது.

இது மணிவாசகரின் வாழ்க்கைப்பகுதிகளையும். சித்தாந்தக் கருத்துக்களையும் வெளியிடுவதுபோல் அவ்வளவு தெளிவாகவும் சுலபமாகவும் திருக்கோவையாரில் கண்டு கொள்ள முடியாது. பூ என்றால் தாமரைப் பூ; அப்படியே வாசகம் என்றால் திருவாசகம் என்ற மணிவாசகம் தான்.

திருவாசகத்தில் மணிக்கவாசகர்

இவர் அமைச்சராக இருந்த காலத்திலும் அவம் துடைத்துச் சிவம் பெருக்கும் சீலராகவே அந்தரங்க வாழ்க்கை நடத்தி வந்தார் எனக் கருதலாம். திருவாத வூரடிகள் புராணத்தில் இந்த இளவயதுள்ள மந்திரி, அந்த அமைச்சர் குழுவில் நட்சத்திரங்களுக்கு இடையே முழுமதி போல் விளங்கினார் என்ற குறிப்பைக் காண் கிறோம், இந்திர போகம் அமைந்த சூழ்நிலையில், அரச உடைகளையும், மணி மாணிக்க வைர வைடூரியங்கள் முதலான இரத்தின அணிகளையும் அணிந்து கொண்டு பல்லக்கில், கொற்ற வெண்குடை நிழலில் போவார் என்று புராணம் தெரிவிக்கிறது.

இது புறத் தோற்றத்தின் வருணனைதான். அக வாழ்க்கையில் இவர் சிவனடியாராகவே வாழ்ந்தனர் எனக் கருதலாம்.

> சித்தத்திலே சிவம் நாடுவார்—இங்குச்
> சேர்ந்து களித்து உலகாளுவார்,
> மத்த மதவெங்களிறுபோல்—நடை
> வாய்ந்து இறுமாந்து திரிகுவார்

என்று பாரதியார் கூறும் இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்தார் எனத் துணியலாம்.

திருவாசகத்தில் இவர் தம்மைச் சிவபெருமான் **பித்தன்** ஆக்குவித்தார் என்கிறார், பேயன் ஆக்கி உலகம் சிரிக்க வைத்தார் என்றும், நாட்டார் நகை செய்யத் தமக்கு மேலை வீடு (விடுதலை) உறுதிப் பட்டது என்றும் சொல்லுகிறார். அமைச்சராய் இருக் கும்போது, தாமரை இலைத் தண்ணீர் போல் சகத் தொடும் (உலகத்தோடும்) கூடி வாழ்ந்த இவர், குரு மூர்த்தியால் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் ஆடம்பரப் புறவாழ்க்கையை உதறித்தள்ளினார் என்றும், அப் பொழுது உலகத்தார் இவரை இகழ்ந்து நகையாடினர் என்றும் ஊகிக்கலாம். பிரசித்தராகப் பேசப்பட்டவர் பிறகு ஏசப்பட்டார்!

இவரது ஆன்ம நிலையை இவர் அறிவார், திருவாசகம் அறியும் என்றுதான் சொல்லக்கூடும். குரு

தரிசனம். குருமூர்த்தி வேதியராக வந்துஆட்கொண்டது. இவருக்காக அவர் குதிரைச் சேவகனாகக் கோலம் பூண்டு வந்தது. சிதம்பரத்திற்கு வரும்படி இவரைக் கட்டளையிட்டுக் குருவும் அடியார்கள் பலரும் முன் கூட்டியே அங்குச் சென்றது; இவர் அவர்களது விரி வாற்றாது வருந்தியது திருப்பெருந் துறை நீங்கித் தல யாத்திரைகள் செய்தது முதலான முக்கியமான வாழ்க்கைப் பகுதிகளுக்குத் திருவாசகத்தில் ஆதாரம் காணலாம். திருக்கோவையாரில் சிற்சில வாழ்க்கைப் பகுதிகளுக்குத்தான் ஆதாரங்கள் கண்டுபிடிக்கமுடியும்.

சைவசித்தாந்தக் கருத்துக்கள் இரண்டு நூல்களிலும் காணப்படுகின்றன என்பது பக்தர்களின் கொள்கை எனினும், தொட்ட தொட்ட இடங்கள்தோறும் கடவுளைக் காணலாம் என்று பிரகலாதன் இரணிய னுக்குச் சொன்னது போல் திருவாசகத்திலேதான் தொட்ட தொட்ட இடங்களில் உயர்ந்த சிறந்த சைவக் கருத்துக்களைத் தெளிவாகக் காண்கிறோம்.

பதி ஒருவன் உண்டு, எல்லாப்பொருள்களும்அவனே. ஆனால் அவை ஒன்றும் அவன் அல்ல. வாக்கிற்கும் நினைப்பிற்கும் எட்டாதவன் அவன். அறிவுக்கு எட்டாத அவன் கருணையால் எல்லாம் காட்டுகிறான். வழி காட்டுகிறான், அமுது ஊற ஊற நீ கண்டுகொள் என்று காட்டுகிறான் இறைவன். பக்தி நெறியைக் கடைப் பிடித்து அடியவர் சித்தமலம் அற்றுப் பசு பாசம் அற்றுச் சிவமாகும்படி அவன் ஆட்கொள்ளுகிறான். அந்த நிலையிலும் அடியார் கூட்டம் பக்தனுக்கு இன்றி யமையாதது. அதுவும் அவனது திருவடிக் கலப்பும் நித்தி யானந்தமாக அனுபவிக்கப்படும்.

இக்கொள்கைகள் சைவ சித்தாந்தத்தின் இதயமாக மதிக்கத்தக்க அரும்பெருங் கருத்துக்கள். இவற்றைத் திரு வாசகம் நிகரற்ற கவிதை ரூபமாகத் தேனூறு செந்தமிழ் சொற்களில் நமக்கு ஊட்டி உபகரிக்கிறது. பூவிரு மணம் போல் ஒழிவின்றி நிறைந்த இறைவனின் பெருமை, அறிவில் ஒளித்து அருளில் புலனாகிறது என்று போதிக் கிறது திருவாசகம்.

திருவாசகத்தின் பொருள் எது? இந்த வாசகத்திற்கு வாச்சியம் (வாசகத்தால் சொல்லப்படுவது) எது? இப்படி ஒரு கேள்வியைத் தில்லை வாழ் அந்தணர்கள் கேட்ட போது மாணிக்கவாசகர் ஆனந்தக் கூத்தரான நடராஜப் பெருமானைச் சுட்டிக் காட்டி, 'திருவாசகத்திற்குப் பொருள் இவரே' என்று பதில் சொன்னாராம்.

மெய்ப்பொருளும் வேதமுதல் பொருளும், சிவமெனும் செம்பொருளும் சிவனே என்கிறது திருவாசகம்.

இருளிடத்து உன்னைச்
சிக்கெனப் பிடித்தேன்!

என்கிறார் மணிவாசகர். 'குறி ஒன்றும் இல்லாத கூத்தனை'த் தாம் கண்டுபிடித்த அனுபவத்தைக் கூறும் போது.

தன் பெருமையைத் தானும் அறியான் இறைவன்; அப்படி இருக்க வேறுயார் அறிவர் இறைவன் பெருமையை.

புல்லாகிப் பூடாய்ப்
புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப்
பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்
பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி
முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்
தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்
பிறந்து இளைத்தேன்

என்று கூறுகிறவர் தமக்கு வழிகாட்டிப் பக்தி நெறியும் முக்தி நெறியும் அறிவித்து சிவமாக்கிக் கொண்டான் இறைவன் என்கிறார். தம்மை ஆட்கொண்ட குருமணி யை இறைவனாகவே மதிக்கிறார்.

'சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவம் ஆக்கும்' இரகசியத்தை இறைவனே அருளினான் குருவடிவில்வந்து என்பது இவர் நம்பிக்கை. இதுவே அற்புதம். இந்த அற் புதம் நிகழ்ந்ததும் பேரின்பமயமான பெருமித உணர்வு பிறந்து விடுகிறது பக்தனுக்கு.

'இவ் வுணர்வு இன்னதென்று, அதைத் தாம் அனுப விப்பதாக அறியாமலே அனுபவித்துக் கொண்டிருப்பதை **அற்புதம்** என்று குறிப்பிடுகிறார் மாணிக்கவாசகர் அது இன்னதென்று உணர்ந்து அனுபவிப்பதை **அதிசயம்** என் கிறார். இப்படி இரண்டு வடசொற்களை எடுத்துக் கொண்டு அவற்றிற்கு இடையே உள்ள வேறுபாட்டை நுணுகி நோக்கிக் கண்டு தெளிந்து **அற்புதப் பத்து** என்ற ஒன்றையும், அதிசயப் பத்து என்ற வேறொன்றையும் இருவேறு பதிகங்களாக அமைத்துள்ளார் இவர் தம் திருவாசகத்திலே.

நாம் திருவாசகத்தில் காணும் மணிவாசகர். தமிழை யும், வடமொழியையும் இரு விழிகள் என மதித்தவர் எனலாம். இரு மொழிகளையும் சம நிலையில் கற்றும் தாம் தமக்கென உருவாக்கிக் கொண்ட செந்தமிழ் நடை யில் திருவாசகத்தை இவர் பாடியிருக்கிறார். இந்த மெய்ஞ்ஞானி அற்புதம் அறியேனே' என்றும், அதிசயம் கண்டோமே என்றும் கூறுகிறார். இங்கே அற்புதம் ஆண்டவன் கூட்டத்தையும் அதிசயம் அடியவர் கூட்டத் தையும் குறிப்பிடுகிறது என்பர்.

ஆண்டவன் வழிபாட்டைக் காட்டிலும் அடியவர் களாகிய அன்பர் பணிக்குச் சிறப்பான பெரும்பயன் உண்டு என்பது மாணிக்கவாசகரைப் போன்ற மெய்ஞ்

ஞானிகளின் தேர்ந்தகொள்கை. இவருக்கு ஆசைஎல்லாம் அடியார்க்கு அடியேன்' என்பதில்தான். இத்தனிப் பெருங் கொள்கையை மாணிக்கவாசகரின் சைவ சித்தாந்தத்தில் நாம் காண்பது போல், நம்மாழ்வாரின் ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்திலும் காண்கிறோம்.

அடியவர்களின் இயல்பைத் திருவாசகம் பல இடங்களில் குறிப்பிடுகிறது. தொழுது உளம் உருகி, ஆடியும் பாடியும் தம் அன்பைப் புலப்படுத்துகிறார்கள் அடியவர்கள்:

அன்பெனும் ஆறு
    கரையது புரள
நன்புலன் ஒன்றி
    நாத! என்று அரற்றி

நாள்தோறும் அவர்கள் தழைக்கிறார்களாம், தங்களைத் "தாயே ஆகி" வளர்ப்பவன் ஈசன் என்ற முழு நம்பிக்கையுடன்.

இந்த இலக்கணம் இல்லாதவர்கள் அடியவர்கள் அல்லர் என்கிறார் மாணிக்கவாசகர் - அடியவர் கூட்டமே பக்தரின் குறிக்கோள், வாச நீக்கத்திற்கு உபாயம் என்கிறார். இதனால், கடவுள் வழிபாட்டைக் காட்டிலும் மக்களாகிய அடியவர்களின் வழிபாடும், பணியும் முக்கியமானவை. லோகோபகாரமான கைங்கரியத்திற்கும் இது சரியான வழி என்ற உண்மைகளை நாம் தெரிந்து கொள்ளுகிறோம்.

6. கதைகளின் வளர்ச்சி

மாணிக்க வாசகர் வாழ்ந்த காலத்தில் அவரை மக்கள், உள்ளபடி அறிந்து கொள்ளவில்லை. அமைச்சராக இருந்தபோது அவரது ஆடம்பரச் சூழ்நிலைதான் மக்கள் கண்களுக்குத் தெரிந்தது; இவரது அந்தரங்க வாழ்வும் ஆன்ம விசாரணையும் அரசனாலும் அறியப்படவில்லை, பொது மக்களாலும் அறியப்படவில்லை. குரு தரிசனத்திற்குப் பின் ஏற்பட்ட மாறுதல், இவரைப் பித்தர் என்றும் பிசாசர் என்றும் மக்களை நம்பச் செய்தன. அரசனோ இவரை மோசக்காரர் என்று கருதி விட்டான்.

அது காரணமாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளோடு இயற்கைக்கு அதீதமான அற்புத நிகழ்ச்சிகளும் பின்னிப் பிணைந்து கொண்டன. அதன் பின் இவர் செய்த தலயாத்திரைகளிலும், நாட்டில் உள்ளவர்கள் இவரை ஒரு மகாத்மாவாக மதித்ததாய்த் தெரியவில்லை. வெகு காலம் தில்லையில் இவர் வாழ்ந்த காலத்திலும் தில்லை வாசிகள் இவரை உண்மையாக அறிந்து கொண்டார்கள் என்று சொல்ல முடியாது.

தம் காலத்தில் அறியப்படாத இவரைச் சுற்றிப் புராணக் கதைகள் புனையப்பட்டன. இவற்றில் நாம் காணும் செவி வழிச் செய்திகளையும், உயர்வு நவிற்சியாக வரும் கூற்றுக்களையும் முற்றும் தள்ளிவிட முடியாது. கிடைக்கும் செய்திகளையெல்லாம் ஆராய்ச்சிக் கண் கொண்டு உற்று நோக்குவதும் ஊடுருவிப் பார்ப்பதும் நமது கடனாகும்.

இவர் தந்தையார் பெயர் **சம்புபாதாசிரிதர்** என்றும், தாயார் பெயர் **சிவஞானவதி** என்றும் திருப்பெருந்

துறைப் புராணம் தெரிவிக்கிறது. முதல் அமைச்ச ராக இவர் விளங்கிய காலத்தில் ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் இவர் ஏற்றுக் கொண்டு அரசாங்கத் திற்குப் பெருஞ்செல்வத்தையும் புகழையும் தேடிக் கொடுத்தார் என்று புராணம் கூறுவதை நாம் நம்ப லாம். இப்பாண்டிய அரசனை அரிமர்த்தன பாண்டி யன் என்று குறிப்பிடுகிறது பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணம்.

ஒரு நாள் அரசனிடம் குதிரைக் காவலர் வந்து பல குதிரைகள் நோய்களால் இறந்து விட்டன ; எஞ்சிய வைகள் நோயுற்றுப் பிழைக்குமோ பிழையாவோ என்று கவலைப்படும்படி இருக்கின்றன என்று செய்தி சொன்னார்கள். பேரரசராகிய தங்களுக்கு லட்சம் குதிரைகளாவது இருக்க வேண்டாமோ ? என்றும் அவர்கள் சொன்னதாகத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் தெரிவிக்கிறது.

புதிய குதிரைகள் வாங்க வேண்டும் என்று தீர்மானித்த மன்னனிடம் சில ஒற்றர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள், ஆரிய தேசத்தார் (அரேபிய தேசத்தார்) அருமையான சாதிக் குதிரைகளைக் கொண்டு வந்து இறக்கிச் சோழ நாட்டின் கடற் கரையில் தங்கியிருக்கின்றனர். ,நாங்கள் கண்ணாரக் கண்டோம்' என்று சொன்னார்கள்.

அக்காலத்தில் இந்தியாவுக்கும் மேலை நாடு களுக்கும் கடல் வழிப் போக்குவரவு நடைபெற்ற ஷண்ணமாயிருந்தது, பொருள் வாணிபத்தோடுகருத்து —வாணிபமும் நடை பெற்றது. இதற்குக் காரணமாக இருந்தவர்கள் பெரும்பாலும் அரேபிய வணிகர்கள். இவர்கள் குதிரை வாணிபத்தில் கொள்ளை லாபம் சம்பாதித்தார்கள் என்று தெரியவருகிறது.

அரசன் ஆணைதாங்கி ஏராளமான பொன்னுடன் வாதவூரர் சொக்கரை வணங்கிப் படைகள் புடைசூழப் புறப்பட்டார். விநாயகரையும் அங்கயற் கண் அம்மையாகிய மீனாட்சியையும் வணங்கி விட்டுப் புறப்பட்டார் என்று திருவாலவாயுடையார் திருவிளையாடல் கூறுகிறது. வாதவூரரும் அரசனும் பொன்னறை அல்லது பொக்கிஷ சாலையுள் புகுந்தார்கள் என்பதும். அரசன் நாற்பத்தொன்பதினாயிரம் பொன்னை வாதவூரரிடம் கொடுத்துக் குதிரைகள் வந்திறங்கும் பட்டினத்திக்குற்குச் சென்று, நல்ல குதிரைகள் வாங்கி வருக என்று இவரை அனுப்பி வைத்தான் என்பதும் புராணச் செய்தி.

திருவாதவூரர் செல்லும் வழியில் திருப்பெருந்துறையை அடைந்தார், அங்கே ஒரு பெரியார் அடியார்கள் புடைசூழ, ஒரு சோலையில் குருந்த மரத்தின் நிழலில் வீற்றிருந்தார். அவரது திரு உருவமும் அதன் பொலிவு மாட்சியும் வாதவூரரைப் பெரிதும் கவர்ந்தது. இவர் அவரை நோக்கி தங்கள் திருக்கையில் உள்ள சுவடியின் பெயர் யாது? என்று கேட்டார். அவர், 'இது சிவஞான போதம்' என்றார்.

சிவஞான போதம் என்றால் என்ன? என்று கேட்டார் வாதவூரர். அதற்கு அவர் சிவம் என்பது மெய்ப்பொருள். ஞானம் என்றால் அறிதல்; போதம் என்றால் தெளிவு. உண்மைப் பொருளாகிய சிவபெருமானை அறிந்து தெளிவு பெறுதல் என்பது சிவஞான போதம் என்ற சொற்றொடரின் திரண்ட பொருள் என்று பதில் சொன்னார்.

'வாதவூரர் அவர் அடிகளில் வீழ்ந்தார். அடியேனை இப்பொழுதே ஆட்கொள்ள வேண்டும்' என்று வேண்டினார், அன்று நள்ளிரவில் குருமூர்த்தி தென்முகமாக இருந்து வாதவூரருக்குப் பஞ்சாட்சர உபதேசமும், திருவடிதீட்சையும் செய்தார். பொழுது புலர்ந்ததும். குரு, வாதவூரருக்கு ஆகமசாரங்கள் அனைத்தையும் விளக்கினார்.

குருவுக்குக் காணிக்கை கொடுக்க வேண்டுமல்லவா? குதிரை வாங்கக் கொண்டு வந்த பொன் அனைத்தையும்

குருவின் திருவடிகளில் வைத்து வணங்கினார் வாதவூரர். குருவும் அப்பொருளை அன்புடன் ஏற்றுக் கொண்டார். அடியார் ஒருவரிடம் அதை ஒப்பித்து, கோவில் திருப்பணி முதலியவற்றிற்கு இப்பொருளைச் செலவிடுக' என்று கட்டளையிட்டார்.

குதிரை வாங்கக் கொண்டு வந்த பொன்னை எல்லாம் திருவாதவூரர் தாமே வாரி வாரிப் பலருக்கும் கொடுத்ததாகத் திருவாலவாயுடையார் திருவிளையாடல் தெரிவிக்கிறது. 'நம்மைப் பாடுவாய்' என்றுகுரு சொன்னதாகவும் வாதவூரர் அற்புதப் பத்து முதலிய பதிகங்களைப் பாடியதாகவும் அதே புராணம் தெரிவிக்கிறது. குரு மூர்த்தியாக எழுந்தருளியுள்ளவர் தம்மை ஆட்கொள்ள வந்த இறைவரே என்பது வாதவூரரின் எண்ணம். அதற்குப் பொருத்தமாகவே குரு தம்மைப் பாடும்படி கட்டளையிட்டதாய்க் கருதலாம்.

அங்கு வேத பாராயணம் செய்யும் பிரமசாரிகளை வாதவூரர் கண்டார். இக் குருமூர்த்தியின் அருகிலிருக்கும் பாக்கியம் பெற்றீர்களே என்று அதிசயித்து, அதிசயப்பத்துப் பாடினார் என்றும் திருவாலவாயுடையார் திருவிளையாடல் கூறுகிறது. இப்பாடல்களைச் செவியுற்ற குருமூர்த்தி வாதவூரரைப் பார்த்து,'மாணிக்க வாசக!' என்று அழைத்தாராம், இவர் பாடியபாடல்களைப் பாராட்டி இவ்விதமாக வாதவூரருக்கு மாணிக்க வாசகர் என்ற காரணப் பெயர் கிடைத்தது என்பர்.

கடைசியாக மாணிக்க வாசகரை 'நீ இங்கு நில்லு' என்று கட்டளையிட்டுக் குருமூர்த்தி மறைந்தருளினார் என்கிறது திருவாலவாயுடையார் புராணம். வாதவூரர் வாதவூரடிகள் என்ற முனிவராகி மோன நிலையில் இருந்தார். அவருடன் வந்திருந்த படைத்தலைவர் முதலானோர், 'அமைச்சர்' பெருமானே, குதிரை வாங்கக்

கொண்டு வந்த பொன்னை எல்லாம் குருமூர்த்திக்குக் கொட்டிக் கொடுத்து விட்டீரே, இனி நாம் எப்படிக் குதிரை வாங்குவது?' என்று தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். இவரோ 'அப்புறப் போங்கள்' என்று அவர்களை அகற்றிவிட்டு மோன நிலையில் தொடர்ந்திருந்தார்.

சிவஞான போதத்தைக் குரு கையில் வைத்திருந்த செய்தி திருவாலவாயுடையார் புராணத்தில் காணப்படவில்லை. மெய்கண்டதேவரின் சிவஞான போதம் மாணிக்கவாசகர் காலத்துக்குப் பிறகு தோன்றியதே. இச்செய்தி திருவாலவாயுடையார் புராண காலத்திற்குப் பிறகு தோன்றிய நூல்களில் இடைச் செருகுதலாகச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

மாணிக்க வாசகருடன் வந்திருந்தவர்கள் உடனே புறப்பட்டு மதுரையை அடைந்து, திருப்பெருந்துறையில் நடந்த செய்தி முழுவதையும் பாண்டியனுக்குத் தெரிவித்தார்கள். அது கேட்ட அரசன் திடுக்கிட்டான். ஓலை ஒன்று எழுதிக்கொடுத்து, 'இதை வாதவூரருக்குக்காட்டி, அவரைப் பிடித்தப் பிடியாக இங்கே அழைத்து வாருங்கள், என்று கட்டளையிட்டான்.

அவர்கள் அவ்வாறே திரும்பி வந்து ஓலையை வாதவூரரிடம் காட்டினார்கள். இவர் குருமூர்த்தியிடம் (குருமூர்த்தி இவருடன் இச்சமயத்தில் இருந்ததாக மற்றப் புராண நூல்கள் கூறுகின்றன) அரசன் ஓலை எழுதி விடுத்த செய்தியை விண்ணப்பம் செய்து கொண்டார். அதற்குக் குரு 'நாமே' குதிரைகளைக் கொண்டு வருவோம். நீ போய் அரசனிடம் ஆவணி மூலநாளில் குதிரைகள் வந்து சேரும் என்று கூறுவாய்' என்று பதில் சொன்னார்.

மாணிக்கவாசகர் மதுரைக்குத் திரும்பிச் சென்று பாண்டியனைச் சந்தித்தார்; குருமூர்த்தி சொன்னபடியே

செய்தி சொன்னார். ஆவணிமூலம் வரும் வரையில் திருப்பெருந்துறையில் தங்கியிருக்க அனுமதி பெற்றார். குறித்த நாளில் குதிரை வாராமையால் அரசன் மிகவும் சினங் கொண்டான். சில ஒற்றர்களை ஏவி, திருப்பெருந்துறையில் குதிரைகள் உள்ளனவா, என்று பார்த்து வரும்படிச் சொன்னான். அவர்கள் போய்ப் பார்த்து வந்து, அங்கே குதிரைகள் இல்லை எனக் கூறினார்கள்.

அரசன் சிறித் தண்டலாளரை நோக்கி, நீங்கள் வாதவூரரிடம் சென்று, பொன்னை எல்லாம் வற்புறுத்திக் கொடுக்கும்படிக் கேளுங்கள், இல்லை என்றால் கடுஞ்சிறையிலிடுங்கள் என்றான், அவர்களும் அவ்வாறே சென்று அரசன் கட்டளையை அறிவித்தார்கள். அவர் பதில் எதுவும் சொல்லவில்லை. அவர்கள் அவரைப் பிடித்துச் சிறையில் வைத்தனர். வெய்யிலில் நிறுத்தித் துன்பம் கொடுத்தார்கள்.

அற்புதங்கள் நிகழ்கின்றன

குருமூர்த்தியாகிய சிவபெருமான் நரிகளைப் பரிகளாக மாற்றினாராம். தாம் குதிரை வணிகர்களைப் போல் உருக்கொண்டு வந்தாராம். அரசன் அகம் மிக மகிழ்ந்து, வாதவூரரை வரவழைத்துத் தம் அருகில் அமரச்செய்தான். குதிரைகளைப் பற்பல விதமாக நடத்திக் காட்டினார் குதிரை வாணிகர் போல் வந்த பெருமான். பிறகு அக்குதிரைகள் அனைத்தையும் கயிறு மாற்றிக் கொடுத்தார். அரசனிடம் விடை பெற்றுச் சென்றார். அரசன் அரண்மனைக்குச் சென்றான். மாணிக்கவாசகர் தம் இருப்பிடத்திற்குப் போனார்.

மறுநாள் காலையில் பரிகள் நரிகள் ஆகி ஊளையிடத் தொடங்கின. உண்மைக் குதிரைகளையும் கொன்று ஊராரையும் பயமுறுத்தி அந்நரிகள் ஓட்டம் எடுத்தன. அது கண்ட குதிரைப் பாகர் அரசனிடம்

முறையிட்டனர். அவன் மறுபடியும் தண்டலாளரை அழைத்து 'வாதவூரரிடம் என் பொன் முழுதும் பெற்றுத்தான் ஆக வேண்டும்' என்று கட்டளையிட்டான். அச் சேவகர்கள் அவரைத் துன்புறுத்துவது கண்டு வருணனை நினைத்தார் என்று திருவாலவாயுடையார் புராணம் தெரிவிக்கிறது. கங்கையை நினைத்து, நீ வைகையில் கலந்து வெள்ளமிட வேண்டும்' என்று கட்டளையிட்டதாக வேறு புராணங்கள் கூறுகின்றன.

பாண்டியன் பயந்து அமைச்சர்களை ஆலோசனை கேட்டான். அவர்கள், 'ஒரு கால் வாதவூரரைத் துன்புறுத்தியதால் வந்த கேடாக இருக்கலாமோ இது? என்றனர். அரசன் உடனே மாணிக்க வாசகரை வரவழைத்தான்; "பெரியீர்! இவ்வைகை வெள்ளம் ஊரை அழித்து விடாதபடி அடக்கவேண்டும்' என்று வேண்டிக் கொண்டான்.

மாணிக்கவாசகர் அருகில் நின்ற காவலரை நோக்கி, நீங்கள் பறையறைந்து ஊராரைக்கூட்டி வாருங்கள்; அவரவர்க்கு இடத்தை அளந்து கொடுத்துக் கரை கட்டச் செய்யுங்கள்' என்றார். நகரில் உள்ளார் வீட்டுக்கு ஒருவராகக் கூடித் தத்தம் பங்குக்கு உரிய கரைப் பகுதியை அடைத்து உயர்த்தலாயினர்.

மதுரை மாநகரில் பிட்டு வாணிச்சி ஒருத்தி பழுத்து நரைத்த கிழவி சொக்கரிடம் பேரன்புடன் தான் சுடும் பிட்டை முதல் முதல் அப்பெருமானுக்குப் படைத்துப் பிறகு விலைக்கு விற்று வந்தாள். அவள் பெயர் **செம்மனச் செல்வி** என்று புராணக் கதைகள் தெரிவிக்கின்றன. இப்பெயர் திருவாலவாயுடையார் புராணத்தில் காணப்படவில்லை. செம்மனச் செல்வி என்பது காரணப் பெயராக இருக்கலாம். பக்தியால் செம்மையாகிய மனத்தை உடையவள் என்பது தானே இப்பெயரின் பொருள்.

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடலில் **வந்தி** என்ற பெயர் காணப்படுகிறது. இதுவும் காரணப் பெயராகவே கருதப்படலாம்; வந்தி என்றால் பிள்ளை இல்லாத மலடி இவள் பங்கை அடைப்பதற்குப் பிள்ளையும் இல்லை; இவளோ மண்வெட்டி பிடித்து வேலை செய்ய இயலாதவள். இவள் சொக்கநாதர் கோவிலுக்குச் சென்று தன் குறையைச் சொல்லி முறையிட்டுக் கொண்டாள். அப்போது அங்கே ஒரு கூலி ஆள் வந்தான்.

'கூலி ஆளுக்கும் கிழவிக்கும் உரையாடல் நகைச் சுவையோடு சித்தரிக்கப்படுகிறது.

'அப்பா வேலை செய்து கூலி பெற்றுக்கொள்வாயா?

"நான் கூலிக்கு வேலை செய்கிறவன்; ஆகவே கூலி கொடுத்தால் வேலை செய்வேன்'

சரி; முன்பு கொஞ்சம் பிட்டு தருகிறேன்; பிட்டு விற்றதும் மாலையில் கூலி கொடுப்பேன்.

கூலியாள் உடன்பட்டான். வேறு யாரும் இல்லை சொக்கரே கூலி ஆளாக வந்திருந்தாராம்.

பிட்டை வாங்கி மடியில் கட்டிக் கொண்டார். கொஞ்சம் வாயில்போட்டு மென்று தின்றார். இந்தப் பிட்டு மிக மிகச் சுவையுடையது என்று சுவைத்துக் கொண்டே நடந்தார். அன்பையும் சேர்த்துச் சமைத்திருந்ததால் சிவபெருமானும் பாராட்டக்கூடியசுவையும் நறுமணமும் உடையதாயிற்று அப்பிட்டு.

கிழவியுடன் கூலியாள் ஆன பெருமான் வைகைக் கரையை அடைந்தார். தன் பங்குக்கு உரிய பாகத்தை அவள் காட்ட 'சரி' என்றார். மண்ணை வெட்டுவார்; கரையில் கொட்டுவார்; பசித்தவர் போல் பிட்டை வாயில் போட்டுச் கொள்வார். இரு புறங்களிலும் ஒதுக்கி மென்று நாவினால் சுவைத்துச் சாப்பிடுவார். 'நன்று நன்று' எனத் தலையை அசைப்பார்.

பிறகு ஒரு கூடை மண்ணை வாரிக் கொட்டுவார். கூத்தாடுவார். 'கரையை அடைத்த பாடில்லையே! என்று அவள் கவலைப்பட்டாள். சொக்கரோ "அம்மே! இது என் வேலை. உனக்கு ஏன் கவலை? வீட்டுக்குப் போ' என்றார். கிழவி திருப்தி இல்லாமலே தன் வீடு சேர்ந்தாள், கூடையைத் தலையணையாக வைத்துக் கொண்டு ஒரு கொன்றை மரத்தின் நிழலில் சுகமாகப் படுத்துக் கொண்டார் வேலையாளாகிய சொக்கர். இது சொக்கர் திருவிளையாடல் என்கிறது புராணக் கதை.

காவலர்கள் வந்து பார்த்தார்கள். பிட்டு வாணிச்சியின் பங்கு மட்டும் அடைபடவில்லை. இவ்வழியாகப் பெருகிய வெள்ளம் மற்றவர்கள் அடைத்த கரையை அறுத்துக்கொண்டு பாய்ந்தது. கூலியாளை இரத்தம் ஒழுகப் பிரம்பு கொண்டு ஒருவன் ஓங்கி அடித்தான். பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் அரிமர்த்தன பாண்டியனே அடித்ததாகக் கூறுகிறது. கூலி ஆளாக வந்திருந்த சொக்கர் மறைந்துவிட்டார். அப்பிரம்படி அரசன், அரசி, அமைச்சர், காவலர் முதலான அனைவர் மீதும் பட்டதாம். மாணிக்கவாசகர்மீது அந்த அடி விழுந்ததாம்-அனைவரும் திடுக்கிட்டனர். வையை வெள்ளம் வற்றியது.

'சிவபெருமான் திருவிளையாடல் இது!' என்று உணர்ந்த அரசன் தன் குற்றத்தை மன்னித்தருள வேண்டும் என்று மாணிக்கவாசகரை வேண்டிக்கொண்டான். மாணிக்க வாசகர் அரசனிடம் விடைபெற்றுக் கொண்டு திருப்பெருந்துறைக்குச் சென்றார். "நமச்சிவாய வாஅழ்க' என்னும் கலிவெண்பாவைப் பாடிக்கொண்டே சொக்கநாதர் கோவிலுக்குச் சென்று பெருமானை வணங்கிவிட்டு நேரே உத்திர கோச மங்கைக்கு மாணிக்கவாசகர் சென்றதாகத் திருவாலவாயுடையார் புராணம் தெரிவிக்கிறது.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறைக்குச்சென்றார். குருமூர்த்தி அவர்மீது அருட்கண் வைத்துத் திருநீறு இட்டார். திருவாதவூரர் அடியார் கூட்டத்தில் கலந்திருந்தார். அப்பால் குருமூர்த்தி தாம் கயிலாயம் செல்ல வேண்டும் என்று சொல்லி அடியவர்களை நோக்கி' 'அன்பர்காள் நீங்கள் இங்கே இன்புற்று வாழ்ந்திருங்கள்' என்றார். அவர்கள் குருமூர்த்தியைப் பிரிந்திருக்க விரும்பவில்லை.

அதன்மேல் குருமூர்த்தி இக்குருந்த மரத்தின் நிழலில் பீடம் அமைத்து, நம் திருவடிகளை வைத்துப் பூசித்துக் கொண்டிருங்கள். ஒருநாள் இப்பொய்கையில் தோன்றப் போகிறத் தீப்பிழம்பில் அனைவரும் மூழ்கி எம்மை அடைவீர் எல்று கூறிக் கயிலை நோக்கிஎழுந்தருளினார். மாணிக்க வாசகர் மட்டும் குருநாதரைப் பின்தொடர்ந்தார். அவரை நோக்கிக் குருமூர்த்தி, 'அன்ப! நீ இவ்விடத்திலேயே இரு பொய்கையில் தீம்பிழம்பு தோன்றும் போது, நீ மட்டும் உத்தரகோச மங்கை என்ற தலத்தை அடைவாய்; மற்றத் திருப்பதிகளையும் தரிசிப்பாய். முடிவில் சிதம்பரத்தை அடைந்து அப்பால் தம்மை அடையக்கடவாய்' என்று அருளிச் செய்தார்.

மாணிக்கவாசகர் அடியவர் கூட்டத்தை அடைந்து குருமூர்த்தியின் திருவடிகளைப் பூசித்து வரும் நாளில் திருவாசகத்தைச் சொல்லத் தொடங்கியதாகக் கதைகள் பலவும் கூறுகின்றன. இப்படி இருக்க ஒருநாள் பொய்கையில் தீப்பிழம்பு தோன்றவே, அதில் அடியவர்கள் மூழ்கினார்கள். அப்போது உமையம்மை சமேதராய்ச் சிவபெருமான் இடப வாகனத்தில் காட்சி வழங்க, அடியார்கள் சிவகணநாதராய் உருத்தாங்கி நின்றனராம் சிவபெருமான் அவர்களோடு மறைந்த காலத்தில்மாணிக் வாசகர் ஒரு கொன்றை மரத்தின் நிழலில் யோகத்தில் அமர்ந்த வண்ணம் இந்நிகழ்ச்சிகளைக் கண்டாராம். நாம் தனியே நின்றதை எண்ணி வருந்தித் **திருச்சதகம்** என்னும் பாமாலையைப் பாடினார் என்பர். பின்னர் குருமூர்த்தியின் கட்டளைக்கிணங்கத் திரு உத்தரகோச மங்கைக்குச் சென்றார். அங்கே குருவடிவம் காணாது **நீத்தல் விண்ணப்பம்** பாடினார். உடனே குரு உருவம் தோன்றியதாம்.

தல யாத்திரை

பிறகு பல தலங்களைத் தரிசித்துத் திருவிடைமரு தூருக்கும் திருவாரூருக்கும் சென்றார். திருவாரூரில் **திருப்புலம்பல்** என்னும் பதிகத்தை அருளிச் செய்தார். அதன்பின் சீர்காழிக்குச் சென்று அங்கே **பிடித்த பத்து** என்னும் பதிகத்தைப் பாடினார். மேலும் பலதலங் களைத் தரிசித்துக் கொண்டு திருவண்ணாமலையை அடைந்தார்.

அங்கே தங்கி இருக்கும்போது மார்கழி மாதம் வந்தது பெண்கள் மார்கழி நீராட்டத்திற்குச் செல்வதைக் கவனித்தார். அவர்கள் கூறும் வாக்காகத் **திருவெம் பாவையை** இயற்றினார். பின்னர் அம்மானை ஆடும் பெண்களைப் பார்த்தார். அவர்கள் வாக்காகத் **திருவம்மானை** பாடினார்.

காஞ்சீபுரத்திற்குச் சென்றபின் திருக்கழுக்குன்றத்தை அடைந்தார். இங்கே திருக்கழுக்குன்றப் பதிகம் பாடி னார். இங்கேயே சில தினங்கள் தங்கியபின் சிதம்பரத் திற்குப் போகவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அங்கேபோய் குருமூர்த்தியின் உருவம் கண்டு **கண்ட பத்து** என்னும் பதிகம் பாடினார். தில்லை மூவாயிரவர் வாழும் தெருக்களில் புகும் போது, சில பதிகங்களையும், அகவல் களையும் பாடினார் என்பர். பெண்கள் பொற்சுண்ணம் இடிப்பது கண்டு அவர்கள் வாக்காகத் திருப்பொற் சுண்ணம் பாடினார்.

அதன்பின் **திருத்தெள்ளேணம்** முதலிய பாடல்களைப் பாடினார். இப்பொழுதான் பொன்னூசல், கோத்தும்பி குயிற்பத்து, திருதசாங்கம் என்னும் பாடல்கள் பாடப் பெற்றன. இவை திருவாசகத்தின் முக்கிய உறுப்புகளா கும். மாணிக்கவாசகர் தில்லையில் ஒரு பர்ணசாலை அமைத்துக் கொண்டு நாள்தோறும் நடராஜப் பெரு மானைத் தரிசித்து வந்தார்.

பௌத்தரை வாதில் வென்ற கதை

மாணிக்கவாசகர் தில்லையில் வசித்துக் கொண்டிருக்கும் போது, சிவ பக்தரான தவசி ஒருவர் தல யாத்திரை செய்து வந்தார். அங்கங்கே சென்று சிவ தரிசனம் செய்தார். சோணநாட்டிற்கு வந்து தில்லையம்பதியில் பொன்னம்பலத்தை வணங்கினார். பிறகு ஈழநாட்டிற்குச் சென்றார். அவர் உட்காரும்போதும் எழும்போதும் பொன்னம்பலம் என்று சொல்லத் தொடங்கினார். ஈழநாட்டில் அரசன் இருக்குமிடத்திலும் பொன்னம்பலம் என்று சொல்வதையே வழக்கமாக்கிக் கொண்டார்.

பௌத்தர்கள் அச் செய்தியை அரசனுக்குத் தெரிவித்தார்கள். அத் தவசியையும் அரசனிடம் அழைத்துப் போனார்கள். அரசன் முன்பும் தவசி பொன்னம்பலம் என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தார். அது என்ன? என்றான் அவன். பொன்னம்பலத்தின் சிறப்புக்களை எடுத்துரைத்தார் அவர். அங்கிருந்த புத்த குரு ஆத்திரமடைந்தார். புத்த பகவானை அன்றி வேறொரு தெய்வமும் உண்டோ? என்று கேட்டார்.

பிறகு தில்லைக்குச் சென்று வாதம் புரிந்து புத்தரைப் பொன்னம்பலத்தில் அமைப்பதாகச் சபதம் செய்தார் புத்த குரு. குருவும் அரசனும் ஊமையான அரசிளங்குமரியைக் கூட்டிக் கொண்டு புறப்பட்டார்கள். புத்த குருவும் அரசன் முதலானோரும் நடராஜர் கோயிலுள் புகுந்தார்கள். கோயில் காப்பாளரை நோக்கிப் புத்த குரு 'புத்த சமயமே உயர்ந்தது என்பதைச் சோழ அரசன் முன்னிலையில் நிலை நிறுத்துவேன்" என்றார்.

தில்லை மூவாயிரவர் கோயிலுக்குத் திரண்டு வந்தார்கள். சோழ மன்னனுக்கு ஓலை எழுதிச் செய்தி தெரிவித்தார்கள். நடராஜப் பெருமான் அவர்கள்

கனவில் தோன்றி, இத்தில்லைத் தலத்தில் திருவாத ஊரன் வந்திருக்கிறான். அவன் இருக்கும்போது உங்களுக்கு அச்சம் ஏன்? என்றார். பின்னர் அனைவரும் மாணிக்கவாசகர் தங்கியிருந்த பர்ணசாலைக்குச் சென்றனர்.

அவர் குருமூர்த்தி திருப்பெருந்துறையில் தமக்கு உணர்த்தியதை நினைவூட்டிக் கொண்டு கோவிலுக்குச் சென்றார். நடராஜ தரிசனம் செய்துவிட்டு, பௌத் தர்கள் இருந்த மண்டபத்தை அடைந்தார். அதற்குள் சோழ மன்னனும் வந்து சேர்ந்தான். பௌத்த குரு மாணிக்கவாசகரை நோக்கி 'எங்கள் புத்த பகவானைப் பொன்னம்பலத்தில் பிரதிஷ்டை செய்ய வந்திருக்கிறேன்' என்றார்.

மாணிக்கவாசகர் புன்னகை புரிந்தார். பௌத்த குரு கூறியவற்றையெல்லாம் மணிவாசகர் தருக்க முறைப்படி மறுத்தார். 'சிவ பெருமான் சிற்சபையில் நடிப்பது ஏன்? பிறர் கண்டு மெச்ச வேண்டும் என் பதற்குத்தானா?' என்று கேட்டார். அதற்கு மாணிக்க வாசகர், 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்றபடி அவர் ஆடினால்தான் அகிலமும் ஆடும்' என்றார். நடராஜப் பெருமானின் ஆட்டம் அனைத்தையும் ஆட்டு விக்கிறது என்றார்.

புத்த குரு, 'சிவபெருமான் உடல் முழுதும் திருநீறு அணிவது ஏன்? தூய்மை அற்றதைத் தூய்மை ஆக்கு வதற்காக? அல்லது தூய்மை அற்றதைத் தூய்மை உள்ள தாக நினைக்கிறாரோ?' என்று குதர்க்கமாய்க் கேட் டார். அதற்கு மாணிக்க வாசகர், திருநீறு துன்பங்களை நீறுபடச் செய்வதற்கு அறிகுறி. சேய் அடைந்த நோய்க்குத் தாய் மருந்து உண்பதுபோலச் சிவபெருமான் தம் மேனியில் திருநீறு அணிகின்றார் என்று விடை கூறினார்.

பௌத்த குரு, 'சிவபெருமான் கையில் ஜெபமாலை எதற்காக? அவரைக் காட்டிலும் வேறொரு கடவுள் உண்டு என்பதை ஜபமாலை உணர்த்தவில்லையா? என்று கேட்டார். அதற்கு மணிவாசகர், 'உலகினர்

ஜபம் செய்யும் முறையைக் காட்டச் சிவபெருமான் ஜபமாலையைக் கையில் கொண்டார் என்று பதில் சொன்னார். பௌத்தர்கள் அனைவரும் பேச்சிழந்த ஊமைகளாயினர்.

திகைப்பும் வியப்பும் அடைந்த ஈழத்து அரசன் மணி வாசகரை வணங்கினான். சுவாமி; பேச வல்லார் பேச் சற்று ஊமைகளாயினர்; இனி ஊமையாய் இருப்பவர் பேசும் அற்புதத்தையும் தாங்கள் நிகழ்த்த வேண்டும் என்று சொல்லிப் பிறவி முதல் ஊமையாக இருக்கும் தம் அருமைப் புதல்வியை அறிமுகப்படுத்தினான். அடிகள் அருள் சுரந்து 'இப்புத்த குரு இப்போது கேட்ட வினாக்களுக்கு விடை கூறுவாய்! அம்மையே! என்று பணித்தார்.

அனைவரும் பிரமிக்கத்தக்க, கற்றோரும் கேட்டுக் களிக்கத்தக்க விடை இறுத்தாள் அவள். அந்த விடையை மாணிக்கவாசகர் சாழல் விளையாட்டாகத் தீச்சாழல் பாடினார். தன் ஊமைப் பெண் பேசியதைக் கேட்ட ஈழ அரசனும் அவன் பெண்ணும் மணிவாசகர் அடிகளில் பணிந்து வணங்கினார்கள். அவர் அவர்களை வாழ்த்தினார். சோழமன்னனும் தில்லை வாழ் அந்தணர் முதலிய அனைவரும் பொன்னம்பலம் வாழ்க எனப் போற்றினார்கள். பிறகு மணிவாசகர் ஊமைகள் ஆகி விட்ட பௌத்தரையும் புத்த குருவையும் முன் போல் பேசும்படி செய்தருளினார். பௌத்தர்கள் சைவர்கள் ஆயினர் என்று கதை முடிவு பெறுகின்றது.

கதைவளர்ந்து முடிவு பெறுகின்றது

மாணிக்க வாசகர் தம் பர்ணசாலைக்குத் திரும்பிச் சென்றார். அங்கே அமர்ந்து திருப்படையாட்சி முதலியவற்றைப்பாடிப் பரவசமுற்று வாழ்ந்திருந்தார். இவ்வாறு வாழும் நாள்களில் ஒரு நாள் அந்தணர் ஒருவர் வந்து நின்றார். நீர் பாடில் திருவாசகத்தை

எழுதிக் கொண்டு போய் ஓதும்பொருட்டு இங்கு வந்தேன். நீர் இடபவாகனராகிய சிவபெருமானைக் குதிரை ஏறி வரச் செய்தீர். மண் சுமக்கச் செய்தீர், பௌத்தரை வாதில் வென்று தில்லைத் தலத்திற்குப் பாதுகாப்பு அளித்தீர்' என்றெல்லாம் முகமன் இயம்பினார்,

மணிவாசகர், அவர் வேண்டுகோளுக்கு இணங்கித் திருவாசகத்தை முறையாகச்சொல்லிவந்தார். அந்தணர் எழுதி முடித்தார். பிறகு மணிவாசகர் முகம் நோக்கி பாவை (திருவெம்பாவை) பாடிய வாயால் கோவையும் பாடுக என்று கேட்டுக் கொண்டார். மாணிக்க வாசகர் திருக்கோவையார் என்னும் திருச்சிற்றம்பலக் கோவையையும் சொல்லி வந்தார். அந்தணர் அதையும் எழுதி முடித்தார். சுவடியைச் சிற்சபையின் படிமேல் வைத்தார். பளிச்சென்று மின்னலைப்போல் மறைந்து விட்டார் அந்தணர்.

பூஜை செய்யும் அர்ச்சகர் அம்பலத்தின் வாசற்படியில் சுவடி இருப்பது கண்டு ஊராருக்குத் வெரிவித்தார், அவர்கள் அதை எடுத்துக்கட்டவிழ்த்துப்பார்த்தார்கள், அதன் முடிவில். திருவாதவூரன் சொல்ல எழுதிய இச்சுவடி திருச்சிற்றம்பலம் உடையார் கையெழுத்து' என்று எழுதியிருந்தது. அறிஞர்கள் அதிசயமாக அதைப் படித்துப் பார்த்தார்கள்.

கலிவெண்பா முதலிய 656 செய்யுட்கள் திருவாசகத்தில் காணப்பட்டன, திருவாசகத்தோடு திருக்கோவை யாரையும் அவர்கள் கண்டு களித்தனர். இந் நூல்களின் திரண்ட உண்மைப் பொருள் என்ன ? இதை மணிவாசகரையே கேட்டுப்பார்ப்போம் என்று அவர்கள் இவர் இருந்த பர்ணசாலைக்குப் போனார்கள்.

திருவாசகமும் திருக்கோவையாரும் அம்பலத்தின்படி மேல் இருந்த விதத்யைும் ஈற்றில் திருச்சிற்றம்பலம்உடை

யார் கையெழுத்திட்டிருக்கும் அதிசயத்தையும் கேட்ட வாதவூரர், 'புன்மையாகிய என் பாடலுக்குக் கிடைத்த பேறுதான் என்னே' என்று ஆச்சரியத்திலும் ஆனந்தத்திலும் மூழ்கினார். பிரதி செய்த அந்தணர் வேறு யாருமில்லை! ஆனந்தக் கூத்தரேதான் என்று அனைவரும் துணிந்தனர்.

தில்லைவாழ் அந்தணர் முதலிய அறிஞர்கள் மணிவாசகரை நோக்கி 'தெய்வத் தன்மை திகழும் இந்நூலுக்கு அடிகள் தாமே உரை விரித்தருள வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொண்டார்கள். அப்பால் மணிவாசகர் திருவருளைப் புகழ்ந்து அன்பர்களுடன் அம்பலத்தை அடைந்தார். அம்பலவாணரை நோக்கி நின்று, "இத்தமிழ் நூலுக்குப் பொருள் இவரே! என்று சிற்றம்பல முடையாரைச் சுட்டிக் காட்டினார்.

அதிசயத்திலும் அதிசயம்! மாணிக்கவாசகரைக் காணவில்லை; அவரைத் தம்முள் ஐக்கியம் செய்து கொண்ட அம்பலவாணரே காட்சி வழங்கினார்.

கதைகள் வளர்ந்த கதை

கதைகளின் வளர்ச்சி குறித்து இங்கே விரிவாக ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை. நிகழ்ச்சிகள் உரையாடல்கள் மூலமாகப் பரவும்போது அவை கதைகள் ஆகி விடும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் பொதுவாகச் சுட்டிக் காட்டுவார்கள். மணிவாசகரின் சரித்திர நாடகத்தில் முதலாவது காட்சி இவர் திருப்பெருந்துறைக்குச் செல்லுவதோடு முடிவு பெறுகின்றது.

திருப்பெருந்துறையை இப்போது ஆவுடையார் கோயில் என்கிறார்கள். புதுக்கோட்டையிலிருந்து இது 27 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கே மாணிக்கவாசகருக்குச் சந்நிதி உண்டு. இந்த முதற் காட்சியோடு ஆடம்பரமான இவர் லௌகீக வாழ்க்கை முடிவு பெறுகின்றது. எதிர்பாராத இவர் வாழ்க்கையைப் புரட்சிகரமாக மாற்றக்கூடிய நிகழ்ச்சி திருப்பெருந்துறையில் நடைபெறக் காண்கிறோம்.

மணிவாசகரின் வாழ்க்கை, செயின்ட்பால், செயின்ட் பிரான்சிஸ் என்ற இரண்டு கிறிஸ்தவ முனிவர்களின் வாழ்க்கையின் ஒரு வகைக் கதம்பத்தை நினைவூட்டுகிறது என்கிறார் டாக்டர் ஜி. யு. போப். அரசாங்கப் பொருளை இவர் எவ்வாறு குருதட்சிணையாகக் கொடுத்தார் என்பதை நாம் உணர்ந்து கொள்வது கஷ்டமான காரியம்தான் என்றும், டாக்டர் போப் சொல்லுகிறார். எனினும் தீட்சையால் இவரும் இவருடைய உடைமைகளும் குருவுக்கே சொந்தமாகி அப்பொருள் அடியவர்களுக்கும் ஏழை மக்களுக்கும் வினியோகிக்கப்பட்டது என்பது சிவநேசர்களின் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது.

மூன்றாவது காட்சியாகக் குறிப்பிடத்தக்கவை மதுரை நிகழ்ச்சிகள். துன்பம் தொண்டரைச் சுட்டுத் தூய்மையாக்குகிறது. சிறையில் மணிவாசகர் வருந்துவது மகாத்மா காந்தியின் சிறைவாச நிகழ்ச்சிகளை ஒருவாறு நினைவூட்டுகிறது. மணிவாசகர் கதையில் அற்புதங்கள் பல நிகழ்வதைக் காண்கிறோம். சிவபெருமான் குதிரை ஏறி வருவதும் பிட்டுக்கு மண் சுமப்பதும் ஆகிய எளிமைச் செயல்களை மேற்கொள்ளும் திருவிளையாடல்களைப்புரிகின்றார் அருமைத்தொண்டருக்காக.

தில்லையில் நான்காவது காட்சியாகப் பௌத்தர்களை வாதில் வெல்லுகிறார், மணிவாசகர். பௌத்த சமயம் அந்நாளில் தென்னிந்தியாவிலாவது வட இந்தியாவிலாவது காணப்படவில்லை. இலங்கையிலிருந்து வந்த பௌத்தர்களைத்தான் மணிவாசகர் வென்று சைவர்கள் ஆக்குகிறார். தோற்றுப்போன பௌத்தர்கள்மீது வன்முறை ச்செயல் ஒன்றும் கையாளப்படவில்லை.

இனி ஐந்தாம் காட்சி, அடியார்க்கு அடியாராகி ஆட்கொள்ளுகிறார் சிவபெருமான், என்பது அந்தணராகி

வந்து இப்பெருமான் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் பிரதி செய்தார் என்பதன் ஆழ்ந்த பொருள் பகுத்தறிவாளரையும் பரவசப்படுத்தும்.

கடைஊழி வரும் தனிமை
கழிக்க அன்றோ, அம்பலத்துள்
உடையார் உன் வாசகத்தின்
ஒரு பிரதி கருதியதே

எனத் 'திராவிடத் தந்தை' என்று கூறப்படும் மனோன்மணீய ஆசிரியரே இக்கதையை வியந்துபாராட்டுவதைக் காண்கிறோம்.

* * *

மாணிக்க வாசகரைச் சுட்டிப் படர்ந்தும் வளர்ந்தும் இருக்கும் கதைகளில் உண்மைப் பகுதி எவ்வளவு, கற்பனைப் பகுதி எவ்வளவு என்று, இன்று நாம் அறிந்து கொள்ள முடியாது என்பதை சொல்ல வேண்டியதில்லை. கதைகளின் வளர்ச்சியைப் பற்றி ஆராய்ந்து அந்த ஆராய்ச்சி முடிவுகளையும் 'கதைகள் வளர்ந்த கதை' என்று தலைப்பிட்டு ஒருகதைபோல் ஜோடித்துக் காட்டலாம். ஆனால் அது இங்கே இப்போது அவசியமில்லை. கதைகளில் இவர் நிகழ்த்திய அற்புதத்தைக் காட்டிலும் அற்புதமானது இவரது அநுபூதி வாழ்க்கையிலும் சிவ பக்தி நிறைந்த வாழ்விலும் பூத்த திருவாசகம்தான்.

'கவிதை என் சமயம்' என்றார் பகுத்தறிவுவாதியான மாத்யூ ஆர்னால்ட். 'சைவ சமயம் என் கவிதை என்றும் மாணிக்கவாசகர் சொல்லக்கூடும். திருப்பெருந்துறையில் குருவைக் கண்டு சிவனையே கண்டேன் என்று முடிவு கட்டியவர், அது முதல் மாறிப் பிறந்தவர் ஆனார்— அதாவது இந்தப் பிறவியிலேயே புதியதொரு ஞானப் பிறவியும் பெற்றார். இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வந்தது போன்ற ஓர் உணர்ச்சி திருப்பெருந் துறையில் குருதரிசனம் ஆன அன்றே அப்போதேஇவருக்கு ஏற்பட்டு மகா விசுவாசம் அல்லது தனிப்பெரு நம்பிக்கையாகப் புலனாகி விட்டது.

இந்த உணர்ச்சியையும் நம்பிக்கையையும் நம்மாழ்வார் வாக்கிலும் காண்கிறோம். பகவத் கீதையின்

சாரமான பொருள் மாணிக்கவாசகரின் பாடல்களில் ஒவ்வொரு பகுதியையும் உருவாக்கியிருக்க வேண்டும் என்று கருதுகிறார் டாக்டர் ஜி.யு. போப். கண்ணன் என்ற ஸ்தானத்தை சிவனுக்கு அளித்திருக்கிறார் இச் சிவநேசர் என்கிறார். இதைச் சைவர்கள் பெரும்பாலும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் எனினும் சாராம்சத்தில் இது உண்மை என்றே தோன்றுகிறது.

அப்படியானால் திருவாய்மொழியையும் திருவாசகத்தையும் ஒப்பு நோக்கி ஆராய்ச்சி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். இரு பெரும் பக்தர்களின் கதைகளில் ஒற்றுமை காண்பதற்கில்லை. ஆனால் வாக்கிலே ஒற்றுமை இருக்கத்தான் செய்கிறது. வாழ்க்கையிலும்—அநுபூதி வாழ்க்கையில் சிறப்பாக—ஒற்றுமை அம்சங்கள் இருந்திருக்க வேண்டும்.

7. மண்ணிலே விண்ணகம்

திருப்பெருந்துறையில் குருதரிசனம் செய்து அடியவர் திருக்கூட்டத்தில் கலந்திருந்தபோது மணிவாசகப் பெருமான் மண்ணுலகில் விண்ணுலகத்தையே பார்த்து விட்டது போன்ற அனுபவத்தைப் பெற்றிருந்தார். இத்தகைய சிவநெறி எங்கும் பரவக் கூடுமானால், உலக மெல்லாம் சிவமயமாகி விண்ணக வாழ்வை இம் மண்ணிலே அனுபவிப்பதும் மக்களுக்குச் சாத்தியமே என்ற குறிப்பையும் உய்த்துணரவைக்கிறார் தமது திருவாசகத்திலே.

நம்மாழ்வாரின் திருவாய் மொழியில் கலிகெட்டுக் கிருதயுகம் என்ற பொன்யுகம் வந்துவிடும் ;என்பதை விவரிக்கும் தீர்க்க தரிசனப்பாடல்கள் ஒரு பதிகமாக அமைந்திருப்பதைக் காண்கிறோம். இப்பாடல்களின் தனிப்பெருஞ் சிறப்பை உணர்ந்து ஸ்ரீ அரவிந்த கோஷ் இவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்.

பொன்யுகப் பாடல்கள்

இப்பாடல்கள், 'பொலிக பொலிக பொலிக!' என்று தொடங்குகின்றன. 'போயிற்று வல்லுயிர்ச் சாபம்' என்ற உறுதிமொழியும், காதில் விழுகிறது. நரக பயமோ துன்பமோ இல்லை என்றும், இனி நமனுக்கு இங்கு வேலை கிடையாது என்றும் ஆழ்வார் கூறுகிறார்.

கலியும் கெடும், கண்டு கொண்மின்

என்கிறார்.

தொண்டர்கள் எல்லோரும் சேர்ந்து தொழ வேண்டும் என்கிறார். விண்ணகத்தார் மண்ணக மக்களோடு ஆடிப்பாடி வெற்றி முழக்கம் செய்ய இறங்கி வந்துவிட்டார்களாம்.

கண்டோம், கண்டோம், கண்டோம்.

கண்ணுக்கு இனியன கண்டோம் என்று ஆழ்வார் அந்தக் காட்சியைக் கண்டு காட்டுகிறார்.

கலியுகம் நீங்கிக் கிருதயுகம் வந்துவிட்டது. பேரின்ப வெள்ளம் பெருக்கெடுத் தோடுகிறது என்கிறார். அரக்கர் அசுரர் முதலானவர்களுக்கு இங்கே வாழ்வு இல்லை. காலம் அவர்களைத் தீர்த்து விடுகிறது. இதில் ஐயமில்லை என்கிறார்.

கொன்று உயிர் உண்ணும் விசாதி (வியாதி)
பகை, பசி தீயென எல்லாம்

கடிந்து விலக்குவதற்குத் திருமாலின் குழாத்தினர் வந்து விட்டார்கள்! அவர்கள் ஆடியும் பாடியும் இவ்வுலகமெங்கும் பரவி விட்டார்கள்! தொண்டர்களே சிந்தையைச் செம்மைப் பெருநெறியில் நிறுத்திக் கொண்டு தொழுவீர்கள்!—என்கிறார்.

கறுத்த மனம் வேண்டாம் என்கிறார். வெறுப்பின்றித் தொழுது உய்யுங்கள் என்று உபதேசிக்கிறார். ஒக்கத் தொழுவீர்களானால் கலியுகம் ஒன்றும் இல்லை என்று முடிகிறது இப்பதிகம்.

இந்த ஆழ்வாரின் ஒப்பற்ற செந்தமிழை ஆங்கிலத்தில் நிகரற்ற புலமையும் கடல்போல் ஞானமும் வாய்ந்த அரவிந்த யோகி, வசனத்தில் தான் மொழி பெயர்த்திருக்கிறார்—ஒப்பற்ற ஆங்கில வசனத்திலே திருவாய்மொழிப் பாசுரங்கள் பலவற்றில் திவ்யப் பெருவாழ்வின் (The life Divine) எல்லாவித நிலைகளையும் எடுத்துக் காட்டும் நம்மாழ்வார், பொலிக பொலிக பொலிக என்று

தொடங்கும் பாசுரங்களில் மண்ணிலே விண்ணகம் காணும் தீர்க்க தரிசனத்தைப் புலப்படுத்துகிறார் என்பது அரவிந்த கோஷின் அபிப்பிராயம்.

தூய்மையான தாபங்கள் அற்ற அறிவு நிலையும் சத்திய ஜோதியின் நேர்முகமான தரிசன நிலையும் ஆழ்வார் வாக்கில் காணப்படுகின்றன. அன்புருவாகிய புருஷோத்தமனின் சௌந்தரியத்தையும் முகலாவண்யத்தையும் அகக் கண்ணால் கண்டதும் ஏற்படுகிற குதூகல நிலைகளையும் நம்மாழ்வார் தமிழில் காண்கிறோம்.

உள்ளம் கனிந்த உயர்ந்த அன்பு நிலைகள் எல்லாம் இவர் வாக்கில் பிடிபட்டிருக்கின்றன. இப்படிப் பலவித நிலைகளோடு, காதலன், காதலி, என்ற நிலையும் காணப்படுகிறது இவ்வாக்கிலே. காதலனை நோக்கிக் காதலி, 'நீயேநான், நானும் நீயே!' என்று ஒன்றுபட்டு நிற்கும் நிலையும் பக்தியின் சிகரமாக இறுதி ஐக்கிய நிலையாக வெளியிடப் பெறுகின்றது நம்மாழ்வாரின் திவ்யப் பிரபந்தத்திலே.

அபூர்வ எளிமை வாய்ந்த செந்தமிழ் நடையிலே அமைந்து இதயக் கனிவும் மெய்நின்ற ஞானமும் நிரம்பிய கம்பீரமான பாக்களால் மேலே சொன்ன திவ்யப் பெருவாழ்வின் பல நிலைகளையும் நம்மாழ்வார் நமக்குக் காட்டுவதாகக் கூறியுள்ளார் யோகி அரவிந்தர். இந்த வாக்கை அப்படியே ஆங்கில ஆக்கத்தில் பிரதி பலித்துக் காட்டுவது மெத்தக் கடினமான வேலை என்றும் அரவிந்தர் கூறுகிறார்.

அதே வாக்கில் மண்ணிலே விண்ணகம் தென்படுகிறது பாரீர் என்று அறை கூவிப் பறைசாற்றும் முறையில் அமைந்திருக்கின்றன. நம்மாழ்வாரின் பொன்யுகப் பாடல்கள். இனிய நற்செய்தியை அகக் கண்ணின் ஆனந்தக் காட்சியாக எடுத்துக் காட்டுகிறார்.

கலி முடிந்து, வாழ்க்கையின் சாபங்கள் நீங்கி மகத்தான பொன்னுலகம் தென்படும் மண்ணுலகத்திலே

அதற்கு முன் ஏற்பாடாக தேவதூதர்கள் வந்து இறங்கி யிருக்கிறார்கள் பூமி எங்கும். மண்ணுலக வாழ்வை மாற்றி அமைக்க அவர்கள் தக்க முயற்சிகளை மேற் கொண்டுள்ளனர். அவர்களை நாடுவீர், நலம் பெறுவீர் மக்களே! இது ஞான பூரணரான ஆழ்வாரின் யாழிசைத் தமிழ் வேதமுரசு.

பிற்சேர்க்கை

மாணிக்கவாசகர் காலமும் நம்மாழ்வார் காலமும்

மாணிக்கவாசகர் காலம் குறித்துக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கவித்திறன் போல் தமக்குள்ள ஆராய்ச்சிப் பேரறிவுக்கு ஒரு சான்றாகக் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். அக்கட்டுரையின் சாரத்தோடு என்னுடைய சில சிந்தனைத் துளிகளையும் கீழே தருகிறேன்.

சைவசமய ஆசாரியர் நால்வர்: அப்பர், சம்பந்தர் சுந்தரர், மாணிக்கவாசகர். இவர்களில் அப்பரும் சம்பந்தரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள். இவர் களுக்குப் பின் வாழ்ந்தவர் சுந்தரர்.

நாலாமவரான மாணிக்கவாசகர் தேவார ஆசிரியர் மூவருக்கும் முன் இருந்தவரா? பின் இருந்தவரா இவ்வினா, சில புலவர்களின் மூளைகளைக் குழப்பியும், உணர்ச்சிகளைத் தூண்டியும் விட்டிருக்கிறது

சுந்தரர் பாடியது **திருத்தொண்டத்தொகை.** நம்பி யாண்டார்நம்பி பாடியது. **திருத்தொண்டர் திருவந்தாதி** திருத்தொண்டத்தொகையில் சுந்தரர் மாணிக்கவாசக ரைக் குறிப்பிடவில்லை. நம்பியாண்டார் நம்பி—கி. பி 10-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். எட்டாம் திருமுறை யாக மணிவாசகரின் பாடல்களை மதித்துச் சேர்த்துக் கொண்டிருக்கிறார், திருமுறை வகுப்பிலே. சுந்தரர் ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்.

இதனால் ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் 10-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிக்கும் இடையே வாழ்ந்தார் மணிவாசகர் என்று ஊகிக்கலாம்..

தமக்கு முன் இருந்த பட்டினத்து அடிகளின் பாடல்களையும் நம்பியாண்டார் நம்பி திருமுறை வகுப்பில் சேர்த்திருக்கிறார். பட்டினத்து அடிகளால் புகழப் பெற்றவர்கள் மாணிக்கவாசகரும் வரகுண பாண்டியனும்.

ஆனால், பெரியபுராணம் நம்பியாண்டார் நம்பி காலத்திற்குப்பின் தோன்றியதே; அதில் மணிவாசகர் வரலாறு வரவில்லையே, ஏன்?

இதற்கு விடை இறுத்தல் எளிது. சுந்தரரின் திருத்தொண்டத் தொகையைப் பின்பற்றியது **திருத்தொண்டர் புராணம்** என்னும் பெரிய புராணம். சுந்தரர் மணிவாசகரைச் சொல்லவில்லை; அதனால் சேக்கிழாரும் மணிவாசகரைச் சொல்லவில்லை. அவ்வளவுதான்.

பட்டினத்து அடிகளாலும் நம்பியாண்டார் நம்பிகளாலும் வரகுணபாண்டியன் புகழப்பட்டிருப்பதுபோல் மாணிக்கவாசகராலும் திருக்கோவையாருள் இரண்டு பாடல்களில் குறிப்பிடப் பெறுகின்றான் இந்த அரசன்.

'வரகுணனாம் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்' என்பதும் 'சிற்றம்பலம் புகழும்......வரகுணன்' என்பதும் திருக்கோவையாரில் மணிவாசகர் வாக்கு.

இங்கே இரண்டு பாடல்களிலும் நிகழ்காலத்தால் கூறியிருப்பது கூர்ந்து நோக்கத் தக்கது. இதனால் வரகுண பாண்டியன் காலத்தவர் மணிவாசகர் என்று ஊகிப்பதும் பொருத்தமாகும்.

திருவாசகத்தில் போற்றித்திரு அகவலிலும் பிறஇடங்களிலும் பொதுவாகப் பாண்டியன் என்று குறிக்கப் பெற்றவனும் வரகுண பாண்டியனே ஆதல் வேண்டும் என்றும் ஊகிக்கலாம்.

மணிவாசகர் அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்தார் என்பது கதை. அரிமர்த்தனனும் வரகுணனும் ஒருவனாகவே இருக்க வேண்டும் என்பது தமிழ்ப் பேரறிஞர் தஞ்சைச் சீனிவாசப் பிள்ளையின் ஊகம்.

அரிமர்த்தனன் என்றால் பகைவரை அழிப்பவன் ஆகவே இப்பெயர் வரகுணனுக்கு அமைந்த புனைபெயராக இருக்கலாமே.

வரகுணன் காலம், வாதவூரர் என்ற மணிவாசகரின் காலம்! எனவே கி. பி. 862-ஐ ஒட்டி, அதாவது கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மணிவாசகனார் வாழ்ந்திருக்க வேண்டும் என்கிறார் கவிமணி தேசிக விநாயகம்.

இச்சந்தர்ப்பத்தில் கவிமணியின் கருத்தை ஒட்டி என் கருத்தையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். **நந்திக் கலம்பகம்** என்ற நூலின் பிரபந்தநாயகன் நந்திப்பல்லவன் இவன் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட பல்லவர் குலத்தினன். இவன் **கி. பி. 843 முதல் 872** வரையில் ஆட்சி செய்தான். ஆகவே, இவன் காலம் வரகுண பாண்டியன் காலம்தான்.

நந்திவர்மன் பாண்டிய நாட்டை அடைந்து வாட்போரில் பாண்டியனைவென்று அவனது தொண்டி நகரத்தையும் கைப்பற்றியதாக நந்திக் கலம்பகம் தெரிவிக்கிறது. இவனால் வெல்லப்பட்ட பாண்டியன் மாணிக்கவாசகர் காலத்தவனான வரகுணன் தானா?

வரகுணப் பெயரை உடைய பாண்டி மன்னன் ஒருவன் பல்லவர்மேல் படையெடுத்து நந்திவர்மனின் தந்தையான தந்திவர்ம பல்லவனை வென்று சிதம்பரம் கோவிலைப்புதுக்கிக் கோபுரமும் கட்டினான் என்று வரலாறு தெரிவிக்கிறது. சிதம்பரம் தெற்குக்கோபுரத்தில்

பாண்டியனது மீன் முத்திரை காணப்படுகிறது. இந்த வரகுண பாண்டியன் யார்?

வெற்றிபெற்ற பாண்டியன் முதலாவது வரகுணன். இவன் நம்மாழ்வார் காலத்தவனாக இருக்கக்கூடும். அவர் வரகுணமங்கலம் என்ற வரகுண மங்கையைப் பாடியுள்ளார்.

தோல்வியுற்ற பாண்டியன் இரண்டாம் வரகுண னான அரிமர்த்தன பாண்டியன் தான் எனக் கருதுவது பொருந்துவதே.

நம்மாழ்வார் முதலாம் வரகுணபாண்டியன் காலத் தவர்; மாணிக்கவாசகரோ இரண்டாம் வரகுண பாண்டியன் காலத்தவர். ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நம்மாழ்வாரும், இறுதிப் பகுதியில் மாணிக்கவாசகரும் வாழ்ந்ததாக முடிவுகட்டுவது தவறாகாது.

இனி, மாணிக்கவாசகர் தேவாரம் பாடிய மூவருக்கும் பிற்பட்டவர் என்றால், அம்மூவரையோ அவர்களுள் ஒருவரையோ, தம் பாடல்களில் குறிப்பிட்டிருக்க மாட்டாரா? இது ஒரு கேள்வி. கவிமணி இவ்வினா வுக்கும் விடை தருகிறார்.

திருவாசகத்தில், அடியவர் பிணியை ஆண்டவன் தீர்த்தருளியதாகத் **திருச்சதகப்** பாட்டு ஒன்று தெரிவிக் கிறது. அப்பரின் சூலைநோயைத் தீர்த்த செய்தி தான் அங்கே குறிக்கப்படுகிறது என்கிறார் தேசிக விநாயகம் பிள்ளை.

'பண்சுமந்த பாடலுக்குப் பரிசு அளித்ததைத் தெரிவிக்கிறது **திருஅம்மானைப்** பாட்டு ஒன்று. திருஞான சம்மந்தர் தம் பாடல்களுக்குப் பரிசிலாக முத்துச்சிவிகை முதலியவற்றைப் பெற்றது இத்திருவாசகப் பாட்டால் இனிது புலனாகிறது என்கிறார் கவிமணி.

அப்பரையும் சம்பந்தரையும் குறிப்பிடுவது போல் திருவாசகம் சுந்தரரையும் குறிப்பிடுகிறது. திருவாசகம் எண்ணப்பதிகம் ஆறாம் பாட்டிலே. சுந்தரரின் திருமண காலத்தில் ஆண்டவன் அந்தணர் கோலத்தில் தோன்றி எதிர்வாதம் பேசித் தடுத்து ஆட்கொண்டது மேலே குறித்த எண்ணப் பதிகச் செய்யுளில் குறிக்கப்படுவதாக விளக்கம் தந்துள்ளார் கவிமணி.

இப்படித் தேவார ஆசிரியர் மூவரையும் குறிக்கும் நாலாமவர் மாணிக்கவாசகர், அம் மூவருக்குப் பின் தாழ்ந்தவரே என்று முடிவு கட்டுகிறார் கவிமணி.

எமது இணையற்ற வெளியீடுகள்

இலக்கணம்

கலாநிலயம் கே. இராஜகோபாலாச்சாரியார்

இலக்கண விளக்கம் :	எழுத்தியல்	5	00
,,	சொல்லியல்	7	00
,,	புணரியல்	13	00
,,	பொருளியல்	13	00
,,	யாப்பியல்	16	00
,,	அணியியல்	16	00

தமிழ் இலக்கணப் பயிற்சியை யாவரும் எளிதில்பெற மிகவும் துணைபுரியும் நூல்கள்.

ஆய்வு நூல்கள்

டாக்டர் கு. மோகனராசு B.Sc , M.A., PH. D.,

தொல்காப்பிய விருந்து	8	00
தொல்காப்பியர் ஓர் அறவாணர்	12	00
இலக்கிய ஆய்வில் புதிய பார்வைகள்	16	00
உலக அமைதிக்குத் திருக்குறள்	7	00

மக்கள் விஞ்ஞானம்

(Popular Science Series)

மக்கள் விஞ்ஞான நூல் 12 தொகுதிகளாக வெளி வந்துள்ளது. ஒவ்வொரு தொகுதியிலும் 50 அடிப்படை விஞ்ஞானக் கட்டுரைகள், மொத்தம் 12 தொகுதி களிலும் விஞ்ஞானத்தின் ஐம்பதிற்கு மேற்பட்ட பிரிவு களில் 601 விஞ்ஞானப் படைப்புகள் பற்றிய கட்டுரை கள், 260க்கு மேற்பட்ட விளக்கப் படங்கள். சுமார் 2800 பக்கங்களைக் கொண்ட தொகுப்பு.

இத்தொகுதி ஓர் அடிப்படை அறிவியல் களஞ்சியம் (A mini Encyclopaedia of Basic Science in 12 Volumes) ஆகும்.

இத்தொகுதியின் விலை ரூ. 250/

STAR PUBLICATIONS
72, BIG STREET,
TRIPLICANE, MADRAS-600 005.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
32128